உ
சிவமயம்

# சிவபூமி திருவாசக அரண்மனை

## நாவற்குழி

## திறப்பு விழா

## சிவபூமி சிவதெட்சணாமூர்த்தி திருக்கோயில்

## மகா கும்பாபிஷேகம்

சிறப்பு மலர்

2018



வெளியீடு
சிவபூமி அறக்கட்டளை
இலங்கை.

EX-LIBRA

DR. S. KANAGASABAI,
MATHAGAL EAST,
MATHAGAL.

DONATION TO THE PUBLIC LIBRARY OF
JAFFNA IN SEPTEMBER 2018

S.Kanagasabai.

# சிவபூமி திருவாசக அரண்மனை

## திறப்பு விழா

## 24.06.2018

### சிவபூமி சிவதெட்சணாமூர்த்தி திருக்கோயில்

## மகா கும்பாபிஷேகம்

## 25.06.2018

## சிறப்பு மலர்



வெளியீடு

## சிவபூமி அறக்கட்டளை

88 11 (P)

தலைமை அலுவலகம்
கோண்டாவில்
தொலைபேசி : 021 222 7938
sivapoomi@gmail.com

திருவாசக அரண்மனை
ஏ9 வீதி, நாவற்குழி
தொலைபேசி : 021 221 4300

நூல் : சிவபூமி திருவாசக அரண்மனை திறப்பு விழா
சிவபூமி சிவதெட்சணாமூர்த்தி திருக்கோயில்
மகா கும்பாபிஷேகம்
சிறப்பு மலர்

வெளியீடு : சிவபூமி அறக்கட்டளை, இலங்கை

பதிப்பு : ஜூன் 2018

அச்சுப்பதிப்பு : சிவபூமி தொழிற்பயிற்சிப் பாடசாலை
கோண்டாவில்

உ
சிவமயம்

# பஞ்சபுராணம்

## தேவாரம்

மண்ணில்நல் லவண்ணம் வாழலாம் வைகலும்
எண்ணில்நல் லகதிக்கி யாதுமோர் குறைவிலைக்
கண்ணில்நல் ல∴துறுங் கழுமல வளநகர்ப்
பெண்ணில்நல் லாளொடும் பெருந்தகை யிருந்ததே!

## திருவாசகம்

பாரொடு விண்ணாய்ப் பரந்தஎம் பரனே
பற்றுநான் மற்றிலேன் கண்டாய்
சீரொடு பொலிவாய் சிவபுரத்தரசே
திருப்பெருந் துறையுறை சிவனே
யாரொடு நோகேன் ஆர்க்கெடுத் துரைக்கேன்
ஆண்டநீ அருளிலை யானால்
வார்கடல் உலகில் வாழ்கிலேன் கண்டாய்
வருகஎன் றருள்புரி யாயே!

## திருவிசைப்பா

ஒளிவளர் விளக்கே உலப்பிலா ஒன்றே
உணர்வுசூழ் கடந்ததோர் உணர்வே
தெளிவளர் பளிங்கின் திரள்மணிக் குன்றே
சித்தத்துள் தித்திக்கும் தேனே
அளிவளர் உள்ளத்து ஆனந்தக் கனியே
அம்பலம் ஆடரங் காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே!

## திருப்பல்லாண்டு

மிண்டு மனத்தவர் போமின்கள்
மெய்யடியார்கள் விரைந்து வம்மின்
கொண்டுங் கொடுத்தும் குடிகுடி
ஈசற்குஆட் செய்யின் குழாம்புகுந்து
அண்டங் கடந்த பொருள்அள
வில்லதோர் ஆனந்த வெள்ளப்பொருள்
பண்டும் இன்றும் என்றும் உள்ளபொருள்
என்றே பல்லாண்டு கூறுதுமே!

## திருப்புராணம்

கற்பனை கடந்த சோதி கருணையே உருவம் ஆகி
அற்புதக் கோலம் நீடி அருமறைச் சிரத்தின் மேல்ஆம்
சிற்பர வியோமம் ஆகும் திருச்சிற்றம் பலத்துள் நின்று
பொற்பு உறநடம் செய்கின்ற பூங்கழல் போற்றி போற்றி!

## திருவாசகப் புகழ்

*கற்பாந்த காலங் கடவாக் கடல்கடக்கத்*
*தெப்பமாய் வந்தெனக்குச் சேர்ந்ததே - அப்பன்*
*உருவா சகங்கொண் டுரைத்த தமிழ்மாலைத்*
*திருவா சகம்என்னும் தேன்!*

*திருவா சகமென்னும் தேன்பருகித் தேசமெல்லாம்*
*கருவே றறுத்தருளிக் கருங்கடலை வேர்துளைத்திட்*
*டுருவா சகமென்னும் உண்மையுணர்ந் துத்தமனார்*
*திருவா சமமென்னும் தேனினருட் காரணமே!*

# சிவதெட்சணாமூர்த்தி
# திருக்காட்சி



இமைப்பொழுதும் என் நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க!




தொல்லை இரும்பிறவிச் சூழல் தளைநீக்கி
அல்லல் அறுத்து ஆனந்தம் ஆக்கியதே - எல்லை
மருவா நெறிஅளிக்கும் வாதவூர் எம்கோன்
திருவாசகம் என்னும் தேன்

# திருவாசக அரண்மனையின் திருக்காட்சி









"மால் அறியா நான்முகனும் காணா மலை"

# திருவாசக அரண்மனையின் திருக்காட்சி










"மால் அறியா நான்முகனும் காணா மலை"


# மண்ணிலிருந்து ஆசிதரும் ஆன்மீகப் பெரியவர்கள்



ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பராமாசாரிய சுவாமிகள்
நல்லை ஆதீன முதல்வர்




வேலன் சுவாமிகள்
ஹவாய் ஆதீனம்




ரிஷி தொண்டுநாதன்
சுவாமிகள்



கம்பவாரிதி இ.ஜெயராஜ்



சுவாமி சிதாகாசானந்தா
சின்மயாமிஷன்



சுவாமி வித்தியாசாகர்
வேதாந்தமடம்



சிவத்திரு முரளி ஐயா
சிவதொண்டன் நிலையம்

# விண்ணிலிருந்து ஆசிதந்து ஆற்றுப்படுத்தும் பெரியவர்கள்



அன்னை
சிவத்தமிழ்ச்செல்வி



சிவஸ்ரீ வா.அகிலேஸ்வரக் குருக்கள்



பண்டிதர்
சிவஸ்ரீ கா.வைத்தீஸ்வரக் குருக்கள்



மனிதநேயர்
வி.கயிலாசபிள்ளை



ஆறுமுகம் சரஸ்வதி தம்பதிகள்



அறநெறிக்காவலர்
கந்தையா நீலகண்டன்

# சிவபூமி அறக்கட்டளை



செஞ்சொற்செல்வர்
கலாநிதி ஆறு.திருமுருகன் அவர்கள்
ஸ்தாபகர், சிவபூமி அறக்கட்டளை, இலங்கை

# சிவபூமி அறக்கட்டளை
# நிர்வாக சபை






# நாவற்குழி திருவாசக அரண்மனை அமைந்த நிலம்

அமரர் வைத்தியகலாநிதி தம்பிராசா சண்முகநாதன் அவர்களது நினைவாக, அன்னாரின் குடும்பத்தின்சார்பில் வைத்திய நிபுணர் வைரமுத்து மனோமோகன் அவர்களும், இவரது பாரியார் வைத்தியகலாநிதி சிவகௌரி மனோ மோகன் அவர்களும் அரண்மனை நிலத்தை அன்பளிப்பாக வழங்கினர். மேலும், இத்திருவாசக அரண்மனை அமைவதற்கு பெருநிதியையும் இத்தம்பதிகள் வழங்கினார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

# அமரர் வைத்தியகலாநிதி த.சண்முகநாதன் அவர்களைப் பற்றிய குறிப்புகள்



யாழ்.கொழும்புத்துறையைச் சேர்ந்த திரு.திருமதி தம்பிராசா அமிர்தவல்லி தம்பதிகளின் புதல்வர் வைத்தியகலாநிதி சண்முகநாதன் அவர்கள். இவர் 1921 பெப்ரவரி 4ஆம் திகதியன்று பிறந்தார். யாழ்.சென்.ஜோன்ஸ் கல்லூரியிலும், தொடர்ந்து சென். பற்றிக்ஸ் கல்லூரியிலும் கல்வி கற்றார். பின்னர் கொழும்பு பல்கலைக்கழக மருத்துவக் கல்லூரியில் இணைந்து தனது பட்டப் படிப்பை மேற்கொண்டார்.

வைத்தியகலாநிதி சண்முகநாதன் அவர்கள் ஆரம்பத்தில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை, புத்தளம் மாவட்ட வைத்தியசாலை, எட்டியாந்தோட்டை மாவட்ட வைத்தியசாலை என்பனவற்றில் பணிபுரிந்துள்ளார். பின்னர் கனடாவிலுள்ள டொரன்ரோ பல்கலைக்கழகத்தில் தோலியல் மருத்துவத் துறையில் பட்டப்பின் படிப்பை மேற்கொண்டார். தொடர்ந்து கண்டி பொது வைத்தியசாலையில் தோலியல் மருத்துவ ஆலோசக நிபுணராகவும், இரத்தினபுரி வைத்தியசாலையில் தோலியல் மருத்துவ நிபுணராகவும், பின்னர் அதே வைத்தியசாலையிலும், தொடர்ந்து யாழ்.போதனா வைத்தியசாலையிலும் வைத்திய அத்தியட்சகராகவும் பணியாற்றியிருக்கிறார். இதன்பின் மட்டக்களப்பு, வவுனியா ஆகிய இடங்களில் சுகாதார சேவைகள் அத்தியட்சகராகவும் கடமையாற்றி ஓய்வுபெற்றார். 1988 ஆம் ஆண்டு அமெரிக்கா சென்று வசித்துவந்தார். இவர் 2011ஆம் ஆண்டு நவம்பர் 4ஆம் திகதியன்று காலமானார்.

வைத்தியகலாநிதி சண்முகநாதன் அவர்கள், முன்னர் யாழ்ப்பாணத்தில் பிரபல்யம் பெற்று விளங்கிய வைத்திய நிபுணர்களான எஸ்.ஏ வெற்றிவேலு, எஸ்.ஏ.தர்மலிங்கம் ஆகியோரின் மருமகன் (சகோதரியின் புதல்வர்) ஆவார். திருவாசக அரண்மனை அமைந்துள்ள நிலத்தை அன்பளிப்பாக வழங்கியிருக்கும் வைத்திய நிபுணர் மனோமோகன் அவர்களது பாரியார் வைத்தியகலாநிதி சிவகௌரி அவர்கள் வைத்தியகலாநிதி சண்முகநாதன் அவர்களது புதல்வி என்பதும் குறிப்பிடத்தக்கது.

## திருவாசக அரண்மனை உருவாகுவதற்கு உதவிய கலைஞர்கள்



திரு.க.சண்முகநாதன் அவர்கள்
ஊரெழு



சிற்பக்கலாவித்தகர்
க.புருஷோத்தமன் அவர்கள்
பெரியகுத்தவக்கரை, சிதம்பரம்



திருவாசகம் முழுவதையும் கல்லில் பொறித்த சிற்பக்கலைஞர்
ஆ.வினோத் அவர்கள்
விவேகானந்தர் நகர் மேற்கு,
கிளிநொச்சி

# சிவபூமி திருவாசக அரண்மனை தோற்றம் பெற்ற வரலாறு

## செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன்

சிறுபராயம் முதல் திருவாசகத்தில் என்னை அறியாத பற்று இருந்தது. யான் ஆரம்பக்கல்வி கற்ற சுன்னாகம் இராமநாதன் கல்லூரியில் தினமும் காலைப் பிரார்த்தனைக் கூட்டத்தின்போது திருவாசகத்தில் ஒரு பகுதியைப் பாடுவார்கள். அந்த திருவாசகப் பாடல்கள் முதலாம் வகுப்பிலேயே எனக்கு மனனமானது. திருவாசகத்தின் போற்றித் திருஅகவல் பகுதியில் வரும் "நான்முகன் முதலா வானவர் தொழுது எழ" என ஆரம்பமாகும் அந்தப் பாடலின் நிறைவில் வரும் "தென்னாடுடைய சிவனே போற்றி, எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி" என்ற அடிகளோடு பிரார்த்தனை நிறைவுபெறும். பின்னாளில் திருவாசக சொற்பொழிவுகள் பலவற்றை கேட்கும் பாக்கியமும் எனக்கு கிடைத்தது. பின்னர் திருவாசகப் பாடல் அடிகளை வைத்து உரையாற்றும் சந்தர்ப்பமும் சிறியேனுக்கு கிடைத்தது.

2016 ஆம் ஆண்டு திருவண்ணாமலை வீதியில் நடந்த திருமுறை மாநாட்டுக்கு செல்லும் வாய்ப்பு கிடைத்தது. ஓதுவார் சங்கம் ஒழுங்கு செய்த இம்மாநாட்டில் இரண்டு நாட்கள் உரையாற்றினேன். நிறைந்த அறிஞர் பெருமக்கள் கூட்டம். நிறைவுநாளன்று திருமந்திரம் பற்றியும் திருவாசகம் பற்றியும் ஒருமணிநேரம் உரையாற்றினேன். அந்த உரை முடிந்து இரவு உணவுக்காக மண்டபத்தின் கீழ்ப் பகுதிக்குச் செல்லும் போது படியிலிருந்த ஒரு முதியவர் அருகே அழைத்தார். கந்தலான ஆடையோடு இருந்த அவர் திருமந்திரம், திருவாசகம் நூல்கள் பற்றி என்னுடன் பேசினார். மேடையில் அறிஞர்கள் பேசியதை விட ஆழ்ந்த அறிவோடு அவர் உரையாடினார். "நீங்கள் யார்?" என்று கேட்டேன். 'அண்ணாமலையானை அடிபற்றி வாழும் போக்கற்றவன்' என்றார். அவரது உரையாடல் தொடர்ந்தது. "ஈழநாட்டில் திருவாசகம் நன்றாகக் காப்பாற்றப்படுகிறது என அறிந்தேன். அருமருந்தான திருவாசகத்தை அனைவரும் நன்றாகப் பருகவேண்டும். திருவாசகம் பிறந்த தென்னாட்டை விட, உங்கள் நாட்டில் அது பெரிதும் நேசிக்கப்படுகிறது" என பாராட்டினார்.

இவர் ஒரு மகான் என்பதை உணர்ந்து கொண்டேன். பற்றற்ற நிலையில் அண்ணாமலையில் இருப்பதை அவரது வார்த்தைகள் எடுத்துக் காட்டின. காலை கிரிவலத்தின் போது காவி உடை தரித்து, ஆங்காங்கே அமைதியாக இருந்தவர்களை சந்தித்தேன். சித்தர்கள், யோகிகள், மகான்கள், திருவண்ணாமலை வீதி எங்கும் நடமாடி வந்தார்கள் என்பது உண்மை. இப் பெரியார் திருவாசகத்தை அழியாது காக்க வேண்டும் என்றார். திருவாசகப் பாடல்களை நூல்வடிவில் பெற்றுக்கொள்ளக் கூடியதாக இருக்கிறது என்று சொன்னேன். அதற்கு அவர் சிரித்துவிட்டு, "இயற்கையாலும் போராலும் என்றும் அழியாது திருவாசகம் காப்பாற்றப்பட வேண்டும்" என்றார். விளங்கவில்லை என்றேன். "உளிகொண்டு கல்லில் செதுக்கிக் காப்பாற்ற வேண்டும்" என்றார். எங்கள் ஊரில் கருங்கல்லே இல்லை என்றேன். "முயற்சித்தால் முடியாதது எது? என்று கேட்டார். சிரித்துவிட்டு, சாப்பாடு முடியப் போகிறது நான் போய் வருகிறேன் என்று சொல்லிட்டு புறப்பட்டுவிட்டேன்.

அறையில் தங்கியிருந்த எனக்கு அன்றிரவு தூக்கம் வரவில்லை. மறுநாள் சிதம்பரம் புறப்பட்டுவிட்டேன். எனது பயண ஒழுங்குகளையும் விழா அமைப்பு ஏற்பாடுகளையும் செய்தவர் லண்டனில் வாழும் உறவினர் கு.மனோகரன், இவர் ஒரு தொழில் அதிபர். திருவண்ணாமலைக்கு வந்திருந்த இவரிடமிருந்து விடைபெற்று சிதம்பரம் வந்து, மறுநாள் ஊர் வந்து சேர்ந்தேன்.

திருவாசகத்தை கருங்கல்லில் பொறித்து காப்பாற்ற வேண்டும் என்ற கூற்றை சிலருக்கு சொல்லிப் பார்த்தேன். ஒரு சிலர் ஏசினார்கள். உங்களுக்கு வேலை இல்லை என்றனர். இலத்திரனியல்

கருவிகளில் திருவாசகம் முழுவதையும் பார்க்கலாம். பின் ஏன் அதற்கு தனிக் கட்டடம், கருங்கல் பதிப்பு? என்று இன்னுமொரு சிலர் அறிவுக்கு எட்டியவற்றையெல்லாம் சொன்னார்கள். இரு மாதங்களின் பின் மீண்டும் ஒரு சொற்பொழிவுக்காக இந்தியா சென்றேன். சில கோயில்களில் திருமுறைகளை கருங்கல்லில் பதிப்பித்திருந்த காட்சி உள்ளத்தை உருக்கியது. இதே சிந்தனையில் ஊர் திரும்பினேன்.

"நாவற்குழி கிராமத்தில் ஏ9 பிரதான வீதியில் எனக்கொரு காணி இருக்கிறது. அக்காணியை சிவபூமி அறக்கட்டளைக்கு தருவதற்கு விரும்புகிறேன்" என அவுஸ்திரேலியாவில் வாழும் இதய வைத்திய நிபுணர் மனோமோகன் அவர்கள் 2016 ஏப்ரல் மாதம் எனக்குச் சொன்ன விடயம் அகத்தில் நிறைந்திருந்தது. ஆனால் அந்த நிலம் எங்குள்ளது என்று எனக்குத் தெரியாது. என்ன ஆச்சரியம்? அகில இலங்கை இந்து மாமன்றத் தலைவராகவிருந்த கந்தையா நீலகண்டன் அவர்கள் அவுஸ்திரேலியா சென்று வரும்போது அவரிடம் வைத்திய நிபுணர் மனோமோகன் காணி உறுதி முதலான சகல பத்திரங்களையும் கொடுத்து அனுப்பியிருந்தார். நீலகண்டன் ஐயா அந்த விடயத்தை தொலைபேசி ஊடாக எனக்கு அறிவித்திருந்தார். இரு வாரங்களில் சிவபூமி அறக்கட்டளையின் பெயரில் அந்தக் காணிக்குரிய உறுதி எழுதி பதிவுசெய்து, யாழ்ப்பாணத்தில் நடந்த விழாவொன்றுக்கு வரும்போது அதனைக் கொண்டுவந்து என்னிடம் ஒப்படைத்தார். உறுதியோடு காணியை கண்டு பிடித்தேன். அந்தக் காணிக்குள் காலடி எடுத்து வைத்தவுடன் ஏதோவொரு ஆத்மார்த்த மகிழ்ச்சி ஏற்பட்டது.

அந்தக் காணியில் திருவாசக அரண்மனை கட்டி, அரண்மனைச் சுவரில் திருவாசகம் முழுவதையும் கருங்கல்லில் பதித்து காட்சிப்படுத்த வேண்டும் என்ற ஆவல் அப்போது ஏற்பட்டது. கையில் பணம் இல்லை. ஆனால், கற்பனையோ என்னை மீறியது. தூக்கம் இன்றி மனத்தை வாட்டியது. பூசலார் நாயனார் மனதில் கோயில் கட்டியது போல் யானும் திருவாசக அரண்மனையை மனதில் கட்டிக்கொண்டிருந்தேன். எதற்கும் ஒரு வரைபடத்தை உருவாக்குவோம் என்ற எண்ணம் கொண்டு சாரங்கன் என்ற தம்பி ஒருவர் மூலம் கட்டடத்திற்குரிய வரைபடத்தை தயாரித்துப் பெற்றுக்கொண்டேன். கையில் பணம் இல்லாத காரணத்தினால் வரைபடத்தை சுருட்டி வைத்துவிட்டு, 2017 ஏப்ரல் மாதத்தில் அவுஸ்திரேலியா சென்றேன்.

நாவற்குழியில் காணியை அன்பளிப்பாக வழங்கிய இதய வைத்திய நிபுணர் மனோமோகன் தம்பதியினர், நான் அவுஸ்திரேலியா சென்ற வேளையில் இரவு விருந்துபசாரத்திற்கு என்னை அழைத்தார்கள். சிட்னி மாநகரில் உள்ள சரவணபவன் சைவ உணவகத்தில் உணவு அருந்திய பின் யான் கையில் கொண்டு சென்ற வரைபடத்தையும், கட்டடத்திற்கான உத்தேச செலவு மதிப்பீட்டுத் தொகையையும் வைத்திய நிபுணர் ஐயாவிடம் கொடுத்தேன். அவரும் பாரியாரும் அதனை இன்முகத்துடன் படித்துப் பார்த்தனர். என்ன ஆச்சரியம்? "கட்டடத்திற்குரிய முழுச்செலவையும் நாங்களே தருகிறோம். உங்கள் ஆசையை நிறைவேற்றுங்கள்" என்றனர். ஆனந்தம்! ஆனந்தம்!! பேரானந்தம்!!! எல்லையில்லாத பெருமகிழ்ச்சியால் அன்றிரவு எனக்கு நித்திரையே வரவில்லை. என்னை அவுஸ்திரேலியாவுக்கு அழைத்து அறிமுகம் செய்து வைத்தவர் வை.ஈழலிங்கம் அவர்கள். திரு.ஈழலிங்கம் அவர்களும் அவரது பாரியாரும் வைத்திய நிபுணர் மனோமோகன் வழங்கிய விருந்துபசாரத்தில் பங்குபற்றியவர்கள். அவர்களும் பெருமகிழ்ச்சி கொண்டதுடன், வைத்திய நிபுணரின் பெருந் தன்மையை மெச்சினார்கள்.

நாடு திரும்பியதும் நாவற்குழியில் அதற்கான பணியை தொடக்கி வைப்பதில் பெரிதும் கவனமெடுத்தேன். இரவு பகலாக கட்டட நிர்மாணப் பணிகள் இடம்பெற்று வந்தன. திருவாசகப்

பாடல்களை கருங்கல்லில் கையால் உளி கொண்டு பதிப்பிப்பதற்கு பலரை நாடியும் பலன் கிடைக்க வில்லை. ஒருவரிடம் ஒரு பாடலை எழுதிக் கொடுத்தேன். நான்கு பிழைகளுடன் கல்லைக் கொண்டுவந்து தந்தார். அவருக்குரிய பணத்தைக் கொடுத்து, அவர் பணியை முடிவுக்குக் கொண்டுவந்தேன். வேறு ஒருவர் கருங்கல்லில் நான்கு வரிப் பாடலை கணினி உதவியோடு பதிப்பித்துக் கொண்டுவந்தார். கல்லில் எழுத்து ஆழமாகப் பதியவில்லை என்பதால் அவரையும் கைவிட்டேன். சோதனைக்கு மேல் சோதனை. இனி கடவுள்தான் எழுத வேண்டும் என சொல்லிவிட்டு இருந்தேன்.

எதிர்பாராதவிதமாக, கிளிநொச்சி விவேகானந்தர்நகர் மேற்கில் வசிக்கும் வினோத் என்பவர் கருங்கல்லில் எழுத்து வெட்டுவதாக அறிந்து அவரை அழைத்தேன். வழமைபோல அவரிடமும் பரிசோதனை. ஒரு கல்லில் நான்கு வரிப் பாடலை வெட்டிவரும்படி கேட்டுக்கொண்டேன். ஒருநாளில் கொண்டு வந்து தந்தார். எல்லையில்லாத மகிழ்ச்சி. வயதில் குறைந்தவர் அவர். திருவாசகம் எனக்குத் தெரியாது என சிரித்துக் கொண்டே சொன்னார். எழுத்துப் பிழையைப் பார்ப்பதற்கு ஒருவரை ஏற்பாடு செய்கிறேன். இரவு பகலாக கருங்கல்லில் பதிக்க வேண்டும் என கட்டளையிட்டேன். நாவற்குழி வளவிலேயே கருங்கல்லில் திருவாசகம் முழுவதையும் பதிக்கும் பணி ஆரம்பமானது. அச்சுப் பிழை இல்லாத நூல்கள் இரண்டை அடிப்படையாகக் கொண்டு, எழுத்துப் பிழை இல்லாமல் இப்பணி நடைபெறுவதற்கு மேற்பார்வை செய்யுமாறு ஊரெழு கனகசூரியர் அவர்களை அன்புடன் வேண்டினேன். அவரும் அக்கடமையை சிறப்பாகச் செய்தார்.

நள்ளிரவு *12.00* மணிக்கு மேலாகவும் கருங்கல்லில் திருவாசகம் பதிக்கும் வேலைகள் நடைபெறும். என்ன ஆச்சரியம்? கருங்கல்லில் *658* திருவாசகப் பாடல்களையும் பதிக்கும் பணி ஒருசில மாதங்களில் நிறைவுபெற்றன. சுமார் 22 இளைஞர்கள் இப்பணியில் ஈடுபட்டனர். தரமான கருங்கல்லில் நேர்த்தியான வகையில் இப்பணி இடம்பெற்றது. அந்த அரிய காட்சி இன்றும் மனதில் பசுமையாக நிறைந்துள்ளது.

கருங்கல்லில் திருவாசகப் பாடல்களை பதிப்பித்தல் வேலைக்கு கையில் பணம் இல்லை. அவ்வேளையில் லண்டனில் நடைபெற்ற சைவமுன்னேற்றச் சங்கத்தின் நாற்பதாண்டு நிறைவு விழாவில் கலந்து கொள்ளும்படி அங்கு கணக்காளராகக் கடமையாற்றும் அன்புக்குரிய திரு.சூ.பாலசிங்கம் அவர்கள் தனது சொந்தப் பணத்தில் என்னை அழைத்திருந்தார். தனது வீட்டிலேயே தங்கவைத்து, நிகழ்ச்சிகளுக்கும் அழைத்துச் சென்றார். சுமார் 18 இலட்சம் ரூபாவரை தனது அன்பளிப்பாக வழங்கினார். அங்கு கிடைத்த அன்பளிப்புக்களை திருவாசகப் பாடல் பதிப்பித்தலுக்கு பயன்படுத்தினேன். என்ன ஆச்சரியம்? உரும்பிராயைச் சேர்ந்த செல்வி செல்வநாயகம் என்ற ஆசிரியை அவர்களும் ஒருதொகைப் பணம் தந்தார். இறையருளால் கருங்கல்லில் திருவாசகம் பதிக்கும் பணி வெற்றிகரமாக முற்றுப்பெற்றது.

கடந்த வருடம் (2017) திருச்செந்தூரில் நடைபெற்ற கந்தசஷ்டி விழாவின் போது ஆறு நாட்களும், லண்டன் சிவானந்தசோதி அவர்களின் அழைப்பின் பேரில் உரையாற்றச் சென்றிருந்தேன். உரை முடிந்து, கொழும்பு வந்து தங்கியிருந்த வேளையில், திருவாசக அரண்மனையின் மத்தியில் தெட்சணாமூர்த்தி கோயிலொன்று கட்டினால் என்ன என என் மனதில் எண்ணமொன்று உருவானது. அப்போது நேரம் அதிகாலை நான்கு மணி. என் மனச் சிந்தனையை சிற்பக் கலைஞர் புருஷோத்தமன் அவர்களுக்கு தொலைபேசி ஊடாகச் சொன்னேன். "அதற்கென்ன ஐயா" என்று ஆவலுடன் பதிலளித்தார் அவர். யாழ்ப்பாணம் வந்ததும் தெட்சணாமூர்த்தி கோயிலுக்கு அத்திபாரம் இடப்பட்டது. என்ன ஆச்சரியம்? கோண்டாவில் ஐயப்பன் ஆலய குருக்களின் அழைப்பின் பேரில் இந்திய சிற்பக் கலைஞர்கள் சிலர் விக்கிரகங்கள் செய்வதற்காக இங்கு வந்து, ஐயப்பன் ஆலயத்திற்கு

அருகில் தங்கியிருப்பதாக அறிந்தேன். அந்த இடத்திற்கு திரு.புருஷோத்தமன் என்னை அழைத்துச் சென்றார். பத்து இலட்சம் ரூபாவை முற்பணமாகக் கொடுத்து. $4\frac{1}{2}$ அடி உயரமான தெட்சணாமூர்த்தி விக்கிரகத்தை செய்யும்படி வேண்டினோம். இரு மாதங்களில் விக்கிரக வேலைகள் நிறைவு பெற்றதும், திரு. புருஷோத்தமன் விக்கிரகத்தை தனது வாகனத்தில் கோண்டாவில் சிவபூமி பாடசாலைக்கு கொண்டு வந்து தந்தார். தண்ணீருக்குள் தெட்சணாமூர்த்தியை வைத்து தினமும் நீரால் அபிஷேகம் செய்துவந்தோம்.

இந்தியாவில் வள்ளுவர் கோட்டத்தில் கருங்கல் இரதமொன்றைக் கண்டபோது, யாழ்ப்பாணத்தில் அதுபோன்ற இரதமொன்று இல்லையே என கவலைப்பட்டேன். திரு. புருஷோத்தமன் அவர்களுக்கு அதுபற்றி சொன்னேன். "கவலையை விடுங்கள், எனது சிற்பிகள் ஊடாக கருங்கல் இரதமொன்றை வாசலில் உருவாக்கித் தருகிறேன்" என்றார். நாவலப்பிட்டியிலிருந்து கருங்கற்களை கனரக வாகனத்தில் கொண்டுவந்து இறக்கினார். அப்போது என்னிடம் எதுவித பணமும் இருக்கவில்லை. மனம் மட்டுமே ஆவலாக இருந்தது. வேலை தொடங்கப் பெற்றது. கருங்கல் இரதத்தின் அடிப்பகுதி உருவாக்கப்பட்டுவிட்டது. மேற்பகுதி செய்வதற்கு நிதி இல்லை. பெரும் கவலை! தற்செயலாக அகில இலங்கை இந்து மாமன்றத்தின் முன்னாள் தலைவர் அமரர் கயிலாசபிள்ளை ஐயா அவர்களின் ஒருவருட நினைவுப் பூர்த்தியை கீரிமலை கடற்கரையில் நிறைவேற்றுவதற்காக திருமதி கயிலாசபிள்ளை அவர்களும், மகன் அரவிந்தன் அவர்களும் வந்திருந்தனர். யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு செல்லும் போது நாவற்குழியில் அமைக்கப்பட்டு வரும் திருவாசக அரண்மனை கட்டட வேலைகளை பார்த்துவிட்டு செல்லுங்கள் என அவர்களிடம் சொன்னேன். மறுநாள் யான் நாவற்குழியில் நிற்கும் போது எதிர்பாராதவிதமாக, ரிஷி தொண்டுநாதன் சுவாமிகளுடன், திருமதி கயிலாசபிள்ளை அம்மாவும், மகன் அரவிந்தன் அவர்களும் அங்கு வந்தார்கள். திருவாசக அரண்மனை திருப்பணியைக் கண்டு மெச்சினார்கள். இந்த கருங்கல் இரதத்தின் மேல் பகுதியை நிறைவுசெய்வதற்கு நிதியின்றி தவிக்கிறேன் என்றேன். திரு அரவிந்தன் அவர்கள் "கவலைப்படாதீர்கள், இரதத்தை நிறைவுசெய்யும் செலவை நாங்கள் தருகின்றோம். முழுமையாக கருங்கல்லிலேயே இரதத்தை முடியுங்கள்" என்றார். இப்போது 21 அடி உயரமான கருங்கல் இரதம் நாவற்குழியில் காட்சியளிப்பதன் மூலம், இலங்கையில் முதன்முதலாக இங்குதான் அமைக்கப் பெற்றுள்ள பெருமையைப் பெறுகிறது.

திருவாசக அரண்மனை கட்டட வேலைகள் நடைபெற்றுக்கொண்டிருந்தபோது பலர் வந்து பார்த்துவிட்டுச் செல்வார்கள். நல்லூர் கந்தசுவாமி கோயில் இளைய எஜமானர் குகஸ்ரீ சயந்தன் குமாரதாஸ் மாப்பாண முதலியார் எனது அழைப்பை ஏற்று வருகைதந்து பார்வையிட்டு ஆலோசனைகளை வழங்கினார். கம்பவாதிரி ஜெயராஜ் அண்ணன் அவர்களும் வந்து பார்வையிட்டு பாராட்டினர். திருவாசக அரண்மனை அமைந்த மண்டப உட்பகுதியைச் சுற்றி நூற்றெட்டு சிவலிங்கம் அமைத்தால் மிகவும் நன்றாக இருக்கும் எனவும் ஆலோசனை வழங்கினார். இதற்கு, இனி எங்கே யாசகம் செய்வது என்று அவரிடம் கேட்டேன். இவ்வளவு காரியமும் செய்யும் உமக்கு இது ஏன் முடியாது? என சற்று கோபமாகவே சொன்னார்.

திருவாசக அரண்மனை உட்பகுதியில் சிவலிங்கம் வைப்பது சம்பந்தமாக சிந்தித்துக் கொண்டிருந்ததால் சில இரவுகள் நித்திரையின்றி தவித்தேன். சிற்பக் கலைஞர்கள் பலரிடம் இரண்டரை அடி உயரமான சிவலிங்கம் செய்வதற்கு எவ்வளவு செலவாகும் எனக் கேட்டு அதிர்ச்சியடைந்தேன். மனம் ஓயவில்லை. கருங்கல்லில் திருவாசகத்தை பதித்த வேலையைச் செய்த வினோத் என்ற அந்த இளைஞர் யான் சொன்ன அளவில் சிவலிங்கமொன்றை வடிவமைத்துக் கொண்டு வந்து காட்டினார். ஆனால், அவர் சொன்ன செலவுக்கு யான் எங்கே போவேன்? துர்க்கை அம்பாளை மன்றாடினேன். தெல்லிநகர் துர்க்கை அம்பாளிடம் தினமும் யான்

முறையீடுகளை முன்வைத்து வேண்டுதல் செய்வேன். அம்பாள் எனக்கு ஆறுதல் தருவாள். இந்த நிலையில் முதலாவது சிவலிங்கத்திற்கு எனது சொந்தப் பணத்தைக் கொடுத்தேன். இனி என்ன செய்வது என்று காத்திருந்தேன்.

கிளிநொச்சி, விவேகானந்தர் நகரிலுள்ள சிற்பக் கலைஞர்கள் பத்துப் பத்து சிவலிங்கமாக வடிவமைத்து, வாகனத்தில் கொண்டுவந்து இறக்கினார்கள். சோதனைக்கு மேல் சோதனை. அன்பர்கள் சிலர் உதவினார்கள். இவ்வருடம் (2018) ஏப்ரல் மாதத்தில் மீண்டும் அவுஸ்திரேலியாவுக்கு சென்றேன். அங்கு உரையாற்றும்போது அன்பர்கள் தரும் அன்பளிப்புக்களை இம்முறை திருவாசக அரண்மனை பணிக்கு என முடிவாக்கினேன். அவுஸ்திரேலியாவில் வாழும் உடன்பிறவா சகோதரி திருமதி லயஸ்ரீ செல்வன் ஆறு சிவலிங்கம் வடிவமைப்பதற்குரிய நிதியை பெற்றுத்தந்தார். மேலும் சில அன்பர்கள் உதவி செய்தார்கள். கனவு நனவாகியது.

அவுஸ்திரேலியாவிலுள்ள இதய வைத்திய நிபுணர் மனோமோகன் அவர்களும், பாரியார் சிவகௌரி அவர்களும் வழமைபோல என்னை விருந்துபசாரத்திற்கு அழைத்தார்கள். "உங்கள் நிலை கண்டு கவலைப்படுகின்றோம் நீங்கள் கவலையை விடுங்கள். திருவாசக அரண்மனையின் மேலதிக வேலைகளுக்கும் சுற்றுப்புற மதில் வேலைகள் மற்றும் தேவைகளுக்கும் நாம் மேலும் உதவக் காத்திருக்கிறோம். நாம் உங்களை கைவிட மாட்டோம்." என்று உறுதியளித்தனர். கடவுள் மனித வடிவத்தில் வந்தது போல் இத்தம்பதிகளை யான் உணர்கிறேன். பண்பும், பணிவும், பக்குவமான வார்த்தைகளும் தம்பதிகளிடம் இருப்பது கண்டு வியக்கிறேன். என் வாழ்நாளில் கடவுள் எனக்குத் தந்த மிகச் சிறந்த உறவுகளுள் ஒன்றாக இவர்களைப் போற்றுகிறேன். இவர்களைப் பற்றி இன்னும் எழுதவேண்டும் என்பது என் விருப்பம். இன்னுமொரு சந்தர்ப்பத்தில் விளக்கமாக எழுதுவேன்.

கட்டட நிர்மாணப் பணியில் எனக்கு பெரிதும் துணையாக நின்றவர் ஊரெழு க.சண்முகநாதன் அவர்கள். சிவபூமி அறக்கட்டளையின் கட்டட நிர்மாண வேலைகளை அக்கறையோடு மேற்கொண்டு நிறைவேற்றி வருபவர் அவர். திருவாசக அரண்மனை அழகாக அமைவதற்கு திரு.சண்முகநாதன் அவர்களும், அவரது பணியாளர்களும் பெரிதும் துணை செய்தனர். தென்னிந்தியா சிதம்பரம், பெரிய குத்தவக்கரையைச் சேர்ந்த சிற்பக்கலாவித்தகர் கலியப்பெருமாள் புருஷோத்தமன் அவர்களின் பெருந் தொண்டினை வர்ணிக்க முடியாது. என் சொல்லுக்கு உயர் மதிப்புக் கொடுக்கும் சிற்பக் கலைஞர். அவரது குழுவினரின் கைவண்ணம் கலைவண்ணமாகக் காட்சியளிக்கிறது.

சிவபூமி அறக்கட்டளை நிர்வாகத்தில் அங்கம் வகிக்கும் அனைவரும் என் சிந்தனைகளுக்கு பெருந்துணை செய்பவர்கள். சிவபூமியில் பணியாற்றும் திரு.க.நவநீதன், திரு.பொ.சதீஸ் ஆகிய இருவரும் அலுவலகக் கடமைகளை உரிய முறையில் ஆற்றிவருகிறார்கள். திருவாசக அரண்மனை தொடர்பான செயற்பாடுகளுக்கு இவர்கள் இருவரினதும் பங்களிப்பையும் சிறப்பாகக் குறிப்பிடலாம்.

யாழ்ப்பாணக் குடாநாட்டு மண்ணில் யாழ். நுழைவாயிலுக்கு அண்மையில் அமைந்துள்ள திருவாசக அரண்மனையை எதிர்காலச் சந்ததியினர் கண்ணை இமை காப்பது போல பாதுகாத்துப் போற்ற வேண்டும் என்பது என் விருப்பம். இப்பெரும் பணியானது என் சித்தத்தில் திருவண்ணாமலை வீதியில் உதயமானது. நாவற்குழி வீதியில் உருவம் பெற்றுள்ளது. நினைத்துப் பார்க்க முடியவில்லை. இத்திருவருளை சொல்லிலோ எழுத்திலோ வடிக்க முடியாது. ஆச்சரியமாக இருக்கிறது. திருவாசக அரண்மனையை நேரில் தரிசிப்பவர்கள் உண்மையை உணர்வார்கள். இப்பெரும் பணியானது பெயருக்கோ புகழுக்கோ செய்யப்படவில்லை. எம் மண்ணில் சைவம் நிலைப்பதற்கு - அருமருந்தான திருவாசகம் நிலைப்பதற்கு அயராது பாடுபட்டு அமைக்கப்பட்டுள்ளது இந்த திருவாசக அரண்மனை. காலம் கடந்து எம்மண்ணில் திருவாசகம் நிலைக்கும் என்பது நம்பிக்கை.

# எல்லாரும் உருகுகிற பாக்கள் தம்மை இறையருளால் கல்லதனில் பதித்து வென்றான்!

கம்பவாரிதி இ.ஜெயராஜ்

உலகமதை உய்விக்க உதித்த நல்ல
ஒப்பற்ற வாசகனார் அருளிச்செய்த
விலையதிலா வாசகமாம் அரிய நல்ல
விண்ணவரின் அமிழ்தமதை வெல்லும் தேனை
தலமதனில் இதுவரையில் எவரும் எண்ணா
தனித்த பெரும் அரண்மனையை அமைத்து நன்றாய்
பலர் புகழக் கல்லதனில் பதித்தே வென்றான்
பார் புகழும் திருமுருகப் பெரியோன் வாழி!

உளம் உருக உணர்வுருக உயிரும் சேர்ந்து
உருகுகிற பேரின்பப் பனுவல் தந்த
நலம் மிகுந்த வாசகனார் சைவம் தன்னில்
ஞானத்தின் குறியீடாய் நாளும் நிற்பார்
நிலம் முழுதும் ஆளுகிற ஐயன் தன்னில்
நிகரில்லா வாசகத்தைப் போற்றி நல்ல
பலம் மிகுந்த அரண்மனையை அமைத்த எங்கள்
பார்புகழும் திருமுருகப் பெரியோன் வாழி!

ஒப்பற்ற வாசகத்தின் ஒரு சொல்தன்னை
ஓர்ந்துள்ளம் பதித்திட்டால் பிறவி மாயும்
எப்பற்றும் அறுந்தின்பக் கடலில் மூழ்கி
இறை அடியைக் காணுகிற பேறு நல்கும்
தப்பற்ற வழியதனில் நம்மை ஈர்த்து
தனித்திறைவன் பாதைதனில் தரிக்கச் செய்து
முப்பற்றின் தளையறுத்து முழுதாய் நம்மை
முக்கண்ணான் திருவடியில் முனைந்து சேர்க்கும்!

கல்லால மரத்தினடி நின்று ஐயன்
காட்சிதனைத் தந்திடவே கனிந்து நெஞ்ச
உள் ஆழக்கடலதனில் இறையைத் தேடி
ஒன்றியதால் வாசகனார் தந்த நல்ல
எல்லாரும் உருகுகிற பாக்கள் தம்மை
இறையருளால் கல்லதனில் பதித்து எங்கள்
வல்லாளன் திருமுருக ஐயன்தன்னை
வாயார மனதார வையம் வாழ்த்தும்!

ஓங்குகிற அரண்மனையை அமைக்கத் தங்கள்
உடல் பொருளோடாவிதனை உவந்தே ஈந்தோர்
தாங்குகிற புகழதனால் நிலைத்து வாழ்வர்
தர்மமதால் இம்மையொடு மறுமை தன்னில்
வீங்குகிற அறம் ஓங்க விளைந்து நிற்கும்
விளங்குகிற சந்ததியும் வாழ்ந்து நிற்கும்
ஏங்குகிற மனத்தோடு இவரைச் சேர்த்து
ஏற்றிய நல் பணிசெய்த ஏந்தல் வாழ்க!

வாசகத்தின் பொருளென்ன என்றே அன்பர்
வாஞ்சையுடன் கேட்டிடவே இறையைக் காட்டி
தாசனென தானும் அவன் ஒளியைச் சார்ந்த
தன்னிகரில் வாசகனார் பெருமை நிற்க!
மாசதிலா அரண்மனையைச் சமைத்துத் தந்த
மாண்புடைய திருமுருக! உன்னால் இன்று
தேசுபுகழ் ஈழமதன் அனைத்துப் பேர்க்கும்
சேர்ந்ததுவே செகம் உன்னைப் போற்றும் ஐயா!

நரியதனைப் பரியாக்கி நாதன் அன்று
நல்ல மணிவாசகனார்க் கருளே செய்தான்
அரியபல வேலைகளை அவனுக்காக
அன்றிறைவன் செய்ததனை அவனி தேறும்
நெறியதிலா வாழ்வதனால் வருந்தும் எங்கள்
நேரதிலா இளையவரை நிமிரச் செய்ய
அரியபெரும் அரண்மனையை அமைத்த இந்த
அற்புதமும் ஆண்டவனின் அருளே கண்டோம்!

*கீதம் இனிய குயிலே! கேட்டியேல், எங்கள் பெருமான்*
*பாதம் இரண்டும் வினவின், பாதாளம் ஏழினுக்கு அப்பால்*
*சோதி மணிமுடி செல்லின், சொல் இறந்து நின்ற தொன்மை*
*ஆதி, குணம் ஒன்றும் இல்லான், அந்தம் இலான் வரக் கூவாய் (குயில்பத்து)*

*ஏர் தரும் ஏழ் உலகு ஏத்த, எவ் உருவும் தன்உரு ஆய்,*
*ஆர்கலி சூழ் தென்இலங்கை, அழகு அமர் வண்டோதரிக்குப்*
*பேர் அருள் இன்பம் அளித்த பெருந்துறை மேய பிரானை*
*சீரிய வாயால், குயிலே! தென் பாண்டி நாடனைக் கூவாய் (குயில்பத்து)*

# நாவற்குழியைச் சிவலோகம் ஆக்குவித்து...

கவிஞர் சோ.பத்மநாதன்

மாபா ரதத்தை மலைமேல் எழுதியவன்
போல்வா சகத்தைப் பளிங்கில் பொறிப்பித்து
காலாதி காலம் காணும் நிலை பேறுதந்த
மேலோன் திருப்பணியை வியக்கின்றோம் அம்மானாய்!

காவற் கடவையொடு கண்டிநெடுந் தெருக்கிடந்த
நாவற் குழியில் சிவநாமம் ஒலித்தெமது
பாவச் சுமைகள் பாறவழி செய்த அன்புத்
தேவைத் திருமுருகைப் பாடுவதுங் காண் அம்மானாய்!

நூற்றெட்டு லிங்கம் நுழைவாயில் அலங்காரம்
காற்று வெளியினிடை அடியாரைக் காக்கவென
வீற்றிருக்கும் தட்சிணா மூர்த்தி அடிதொழுதால்
நேற்றைத் துயரங்கள் நீறாகும் அம்மானாய்!

தேவர்க்கும் எட்டாச் சிவபெருமான் பெருந்துறையை
மேவிக் குருபரனாய் வந்ததுவும் பாண்டியனார்
தாவுபரி கொள்ளத் தந்தநிதி ஏற்றருளி
சேவகனாய் வந்த செய்தி பாடுதுங்காண் அம்மானாய்!

கோத்தும்பி, பொற்சுண்ணம், ஊசல், திருச்சாழல்
மூத்த திருப்பதிகம், திருவார்த்தை, எம்பாவை,
யாத்திரை, பூவல்லி, தெள்ளேணம் என்றெல்லாம்
கோத்தான் வருகவெனக் கூவுதுங்காண் அம்மானாய்!

ஊனை உருக்கி உள்ளொளியைப் பெருக்குகிற
தேனைத் திருவா சகமென்னும் தெள்ளமுதை
வானோர் வாயூற வழங்குமணி வாசகனை
ஞானப் பேரூற்றைப் பாடுதுங்காண் அம்மானாய்!

தேன் பழச் சோலை பயிலும் சிறுகுயிலே! இது கேள் நீ,
வான் பழித்து, இம்மண் புகுந்து, மனிதரை ஆட்கொண்டவள்ளல்
ஊன் பழித்து, உள்ளம் புகுந்து, என் உணர்வு அது ஆய ஒருத்தன்
மான் பழித்து ஆண்ட மென் நோக்கி மணாளனை நீ வரக் கூவாய்! (குயில்பத்து)

# இமய சாதனை படைத்தனை!

பேராசிரியர். எஸ்.சிவலிங்கராஜா
மேனாள் தலைவர்,
தமிழ்த்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

திரு வாசகத்தை ஓதுதல் படித்தல்
உட்பொருள் தெளிவுற விரித்தல்
தருமமென் றெண்ணித் தாழ்விலாப் பணிசெய்
தங்கம்மா அன்னையின் அணைப்பால்
உரு வெடுத்திட்ட உயர்திரு ஆறு
திருமுருகப் பெயர்ச் செயலோன்
பெரு மனம்வைத்திப் பெருந்திருப் பணியைப்
பேணியே இயற்றினன் வாழி!

சொல்லிலாற் செயலாற் தொண்டினைத் தொடரும்
தூயவா உன்திருப் பணியை
நல்லவர் மதிப்பர் போற்றுவர் துதிப்பர்
நாள்தொறும் உன்புகழ் நிலைக்க(க்)
கல்லினிற் சமைத்தாய் கனிச்சுவை சிந்தும்
கவின்திரு வாசகம் தன்னை
வல்லவா சைவர் வாழ்வெலாம் சிறக்க
வந்தசெஞ் சொல்வ நீவாழி!

தேனினுமினிய திரு வாசகத்தை(த்)
திசைதொறும் திசைதொறும் பரப்ப
மானுடர் பலபேர் முயன்றனர் இந்த
மாநிலம் பயனுற என்றே
ஊனினை உருக்கி உயிரினிற்சுவறும்
உயர்திரு வாசகம் தன்னை
வானினும் உயர்ந்த புகழ்தனைப் பெறநீ
வடித்தனை கல்லினில் வாழி!

தமிழறி புலவோர் தரணியிற் புகழும்
தவத்திரு வாதவூர்ப் புலவன்
அமிழ்தினு மினிய வாசகம் தன்னை
அருளியே புகழுடல் பெற்றான்
இமிழ்கட லுலகிற் கல்லினில் அதனை
இருத்தியே திருமுருகன் தான்
திகழ்புகழ் பெற்றான் திருநீறு போலத்
திசையெலாம் அவன்பெயர் பொலியும்!

மார்கழி மாதம் பிறந்து விட்டாலெம்
மண்ணிலே திசையெலாம் ஒலிக்கும்
பேர்பெறு திருவா சகப்பொருட் பெருமை
பேசவே எனத்தினம் வாழும்
ஊர்மலி இந்த யாழ்ப்பாண மண்ணில்
உவந்துஅத் தேனினைக் கல்லிற்
பார்எலாம் புகழப் பதித்த நின்பணியைப்
பாடுதல் வாழ்த்துதல் கடனே!

மேலைநாட் டவரும் மெச்சியே புகழ்ந்த
மேன்மைகொள் வாசகம் அதனை(ச்)
சாலவே கல்லிற் செதுக்கியே இமய
சாதனை படைத்தனை ஐய!
ஏலவே இதனை இரசித் திதயத்தே
இருத்திய அனைவரும் மகிழப்
பாலையில் நல்ல பசுந்தரை கண்ட
பான்மையைப் பாடினம் வாழ்க!

*பொய்யனேன் அகம் நெகப் புகுந்து, அமுது ஊறும்,*
*புலமலர்க் கழல் இணை அடி பிரிந்தும்,*
*கையனேன், இன்னும் செத்திலேன் அந்தோ!*
*விழித்திருந்து உள்ளக் கருத்தினை இழந்தேன்,*
*ஐயனே! அரசே! அருள் பெரும் கடலே!*
*அத்தனே! அயன், மாற்கு, அறி ஒண்ணாச்*
*செய்ய மேனியனே! செய்வகை அறியேன்*
*திருப்பெருந்துறை மேவிய சிவனே.* (செத்திலாப்பத்து)

# சிவபூமி திருவாசக அரண்மனை

கலாநிதி, பண்டிதர் செ.திருநாவுக்கரசு

உலக மளாவிய உண்மைப் பொருளுறை
 உயர்சைவ நெறியினை ஓர்ந்து தெளிந்து
நிலவு லாவிய நிர்மல னடியினை
 நெஞ்சத் திருத்தி நினைந்து உருகிக்
குலவு தீந்தமிழ்க் கொடையென அருளிக்
 குவலயம் பயனுறச் செய்தமணி வாசகரின்
அலகிலாத் திருவாசக அமுத முண்டவர்
 அல்லற் பிறவி யறுத்தே உய்வரே!

உய்யவே மாந்தர் உதவுதிரு வாசகத்தை
 உளிகொண்டு கையினால் உவப்புறக் கருங்கல்லில்
அய்யன் சிவபெருமா னருளினாற் பொறித்திடும்
 அரிய திருப்பணி ஆற்றி மகிழ்ந்திட
மெய்யதாம் நாவற்குழி யூர்க்கண்டி வீதி
 மேவு மருங்கில் அரண்மனை அமைத்தே
துய்யதாய் முடித்தசிவ பூமியறக் கட்டளைத்
 தொண்டு நிறுவனம்போல் தொல்லுலகி லேதுளதோ?

ஏதமில் மனத்தர்: ஈசனடித் தொண்டர்
 ஈந்திட்ட பத்துப் பரப்பளவு நிலத்துடன்
கோதற உடல்நோய் குணமாக்கும் மருத்துவர்கள்
 கூடவே கொடுத்த கோடி முப்பது லட்சம்
ஆதர வோடுயர் அரண்மனை அமைக்கவும்
 ஆன்மீகப் பயணம் அறாமற் றொடரவும்
வேதங்க ளேத்தும் விண்ணகப் பரம்பொருள்
 வேலியாய் நின்று வேலையை முடித்ததே!

தென்திசை நோக்கிய திருவாசக அரண்மனைத்
 திவ்விய நடுவண்சிவ தெட்சணா மூர்த்தியும்
அன்றுகல் லாலின்கீழ் சொல்வர்க் கறமுரைத்தோன்
 ஆலயங் கொண்டு அருள்பா லிக்கவும்
நன்றுசெய் கருவறை, விதானம், மண்டபம்
 நாடியே சீமெந்தா லமைத்து நூற்றெட்டு
நின்றொளிர் சிவலிங்கச் சிற்பங்கள் செய்து
 நீண்டுள கோபுர மீதினில் நிறுத்தினார்.

கருங்கல் ரதமொன்று கலைவடிவக் கோயில் முன்
காட்சிதரும் பேரழகைக் கண்டுகை தொழுதிடலாம்
அருவுரு வாய்நின்ற சிவலிங்கம் நடுவிருக்கும்
அழுதழுது அடிசேர்ந்த அன்பர்மணி வாசகரும்
திருவுருவாய்த் தென்மேற்கில் திகழும் திருக்கோலத்
திருத்தேர் இருபத்தோ ரடியுயர மாயிருக்கும்
பெருகிவரும் வெள்ளமென உருகிநிற்கு முள்ளத்தால்
பிறவாத பேரின்பப் பெருவாழ்வு பெற்றிடலாம்.

தெய்வத் தமிழான திருவாசக முழுமையுடன்
திசைமொழிகள் பதினொன்றின் மொழிபெயர் வண்ணங்களும்
கையதன் கலையதாய் மேற்கிலும் கிழக்கிலும்
கண்டிடுசுவ ரோவியங்கள் கதை பல பேசிநிற்கும்
செய்யநீள் மண்டப அரண்மனை முப்புறம்
சிறந்திடும் நூற்றெட்டுக் கருங்கற் சிவலிங்கம்
வையகத்துச் சிவதொண்டர் வழிபடப் பிரதிஷ்டை
வரிசையாய்ச் செய்தனர் வானகம் வாழ்த்தவே!

அரண்மனை வடக்கில் அறைகள் ஐந்தமைத்து
ஆராய்ச்சி யாளர் அமைதியுடன் தங்கவும்,
அருஞ்சைவ நூல்களால் ஆனதொரு நூலகமும்
அற்புதமாய்க் கொண்டொரு ஆன்மீக இருப்பிடம்
உற்பவமாய் நிலாமுற்றம் ஓங்குவாயிற் கோபுரம்
உத்தம இறைபணிக்காம் அலுவலகம் அனைத்துமே
சிற்பரனார் திராவிடநற் திருக்கலை மரபுடனே
தெய்வீகத் திருவாசக அரண்மனை திகழ்ந்திடுமே!

வைத்திய கலாநிதிகள் மனோமோகன் சிவகௌரி
வள்ளன்மை யாலுதித்த வாசகத்து அரண்மனை
இத்தரையில் சிவபூமி இனியசேவை நிறுவனத்தின்
இணையிலாப் பெருங்கருணை இயற்றுவித்த புனிதமனை
சத்தியத்தின் நித்தியமாய்ச் சைவமதம் தழைப்பதற்குச்
சான்றாக ஈழத்தில் கருங்கல்லால் முதன்முதலில்
எத்திசையும் புகழ்மணக்க எழுந்ததிரு வாசகத்து
ஏற்றமுறு திருமனை என்றென்றும் வாழியவே!

இருபதோ டைந்து சிவலிங்கச் செலவினை
ஏற்றுநிதி யளித்தனர் ஆஸ்ரேலிய அன்பர்கள்
பெருகிய மனத்தினராம் மருத்துவத் தம்பதியர்
பெட்புடன் ஈந்த பெருநிதி தவிர்த்துமே
மருவியே மேல்வரும் தேவைக ளனைத்தையும்
மாண்புறச் சிவபூமி நிறுவனம் ஏற்றதே!
திருவுள ஒருமகன் திருமுருகன் தலைமையில்
தெய்வீகப் பணியொன்று தேசத்தில் நிறைந்ததே!

கருங்கல்லா லிடங்கொண்ட கனித்தமிழ்த் திருவாசகம்
காசினியில் முன்னோடி யானதொரு கருமமாம்
பெருந்திருப் பேராளும் பேசரிய அரண்மனை
பேருலகில் பக்திமொழிப் பெருமைக் குரியதாம்
அருஞ்செயல் களாற்றி அன்புநெறி வளர்த்திட
அனுதினமும் உழைத்திடல் சிவபூமிக் கானதாம்
வருங்காலத் தமிழ்ச்சைவர் வாழ்வுநிலை தேயாமல்
வரம்பிட்டுக் காத்திடுதல் வையகத்தோர் கடமையாம்.

இரண்டா யிரத்து பதினெட்டா மாண்டு
இனிய ஜுன் மாதம் இருபத்து நான்கில்
அரன்புக ழாரமாம் திருவாசக அரண்மனை
அருளிடை மருத்துவத் தம்பதியர் திறந்திடவும்
வரன்முறை யமைந்த வடிவுகொள் ரதந்தனை
வளர்சைவப் பெருமாட்டி அபிராமி திறந்திடவும்
உரனசைஇ எம்பெருமான், உலகத்து நாயகன்
உளங்கொண்ட விதங்கண்டு உருகிடுதே நெஞ்சமெலாம்.

என்றும் வேண்டும் இன்ப அன்பினை
எடுத்துக் காட்டுமெழில் திருவாசக அரண்மனை
குன்றே யனைய கோயிலும் இரதமும்
கும்பிட்டு வாழச்செய் சிவலிங் கங்களும்,
நன்றே திகழும் நாவற்குழி யூரினை
நாடிச் செல்வோர் நற்கதி யடைவர்
மன்றே யாடும் மறைமுத லோனடி
மனதினி லிருத்தி மனிதராய் வாழ்வோம்!

*என்அப்பன், எம்பிரான், எல்லார்க்கும் தான் ஈசன்*
*துன்னம்பெய் கோவணமாக் கொள்ளும் அது ஏன்? ஏடி*
*மன்னு கலை, துன்னு பொருள் மறை நான்கே, வான்சரடாத்*
*தன்னையே கோவணமா, சாத்தினன், காண் சாழலோ! (திருச்சாழல்)*

# காக்கும் கற்சோலை நிழல்

த.ஜெயசீலன்

திருவா சகத்திற்கு உருகா தார்கள்
திளைத்து ..... வாசகம் எதற்கும் உருகார் என்பார்!
திருவாசகந் தன்னை இசைத்தேன் தோய்த்து
சிந்தை செயல் கெடாமல் ..... பலர் இலயிக்க வைத்தார்
திருவாசகப் பாடல் அனைத்தும் கல்லிற்
செதுக்கி கால வெயில் மழையிற் கரைந்தி டாத
அரண்மனையில் அரியணையில் ஏற்றி விட்ட
அதிசயத்தைக் கண்டு மனம் வியந்தோம் இந்நாள்!

பளிங்கினிலே பொறித்த 'வாத வூரன்' பாக்கள்
பார்ப்போரின் மனச்சுவரில் பதிந்து கொள்ளும்
எழுந்த கற்தேர், பிரதான கோயில், பாவை
இரசிக்கின்ற லிங்கங்கள், யாவும் ஞான
உலகை நாம் காணவைக்கும். "கருங்கற் தாளில்
உளி சமைத்த கவி" இதெனும் உள்ளம். 'நாவற்
குழி' யும்' 'மகா பலிபுரம்' போல் மகிமை நாளை
கொள்ளும்! இதெம் தமிழ் சைவப் பெருமை சொல்லும்!

குருந்தமர நிழலில் ஞானம் போதித் திட்ட
குரு தட்சணா மூர்த்தி கோயில் கொள்ள....,
கருங்கற்தேர் தனில் வாதவூரன் முக்கண்
முதல்வனுடன் வீற்றிருக்க..., கருங்கல் லிங்கம்
ஒருநூற்று எட்டும் காவல் காத்து நிற்க...,
உயர் கோயில் விமானத்தில் நூற்று எட்டு
சிறுலிங்கம் நிமிர, திருவாசகச் சீர்
அரண்மனையும் சிறக்கும் வரலாறு செப்ப....!

யாராரோ எதற்கோ அரண் மனைகள் மண்ணில்
அமைத்ததுண்டு... தமிழ் சைவ ஞானத் தேறல்
மாணிக்க வாசகரின் வரிக ளுக்கு
மனைசமைத்த கதை உலகில் எங்கே உண்டு?
ஆர்வலர்கள் நிலம் பொருளும் அருள... எங்கள்
'ஆறுதிரு முருகன்' நட்ட எழிற் கற் சோலை
காலத்தை வெல்லும்... யாழ்புகழைச் சொல்லும்...
காக்கின்ற நிழலாகும்..... செழிக்கும் என்றும்!

# அரண்மனைமேல் ஓர் அந்தாதி

ச.முகுந்தன்

### வெண்பா

அஞ்சு புலன்பிழிந்து ஆறாக ஓடவிடும்
இன்பமணி வாசகத்தை ஏற்றியே - செஞ்சொல்லின்
செல்வர் திருமுருகர் சிந்தனையின் சித்திரமாய்
கல்லில் எழுந்த கலை.

### எண்சீர் விருத்தம்

"கலை"யாது உம்மினத்துக் கென்றே நாளைக்
களப்பிரர்கள் கேட்டாலும் காலத் தாலே
கலையாது நிற்குமிந்தக் கருங்கற் கோட்டம்
கடல்ஏறி வந்தாலும் கனல்சூழ்ந் தாலும்
களையாது! எம்முதுச ஆன்ம வீரம்
கரைதாண்டி வைகைநதி சொன்ன பாடம்
களையாது? என்பதனைக் காலம் நின்று
கற்பிக்கும் யுகம்வென்றிக் "கோ"இல் நிற்கும்.

### கட்டளைக் கலித்துறை

நிற்கும் திராவிட பாணியின் சாட்சியாய் நீண்டதூண்கள்
"தெற்குக்கு" எங்கள் திசைக்கீர்த்தி சொல்லும் திறத்திலிங்கே
கற்கொண்ட ஆல்கீழ் கலைஞான முத்திரை காட்டுகின்ற
தெட்சிணா மூர்த்தத் திருக்கோட்டம் பக்தி திளைக்குமாறே.

### வெண்பா

ஆறு திருமுருகன் ஆண்ட தமிழ்ச்சைவம்
பாறுவது கண்டு பதைபதைத்து - வீறாய்
தலைமுறைகள் காணத் தமிழ்வேரைக் காட்டி
இழைப்பித்தார் இந்த இடம்

## எண்சீர் விருத்தம்

இடமிருந்து வலமாக ஓர்பத் தொன்ப
திருபதிலே தொட்டச்சோப் பதிகம் ஈறாய்
தொடர்கிறது மறுசுவரின் வலப்பக் கத்தில்
துய்க்கின்ற பெரும்பிறவித் துன்பக் கேணி
கடந்துவரும் புரவிரதம் குறியீ டாகக்
கலைபொலியும் கருங்கற்றேர்ப் பொய்கைத் தானம்
படர்ந்தசிவ லிங்கங்கள் நூற்று எட்டும்
பக்தியிழை நூற்று எட்டுத் திக்கும் ஞானம்.

## கட்டளைக் கலித்துறை

ஞானக் கனியைப் பிசைந்து சிவத்தேன் நனியொழுக
ஈனப் பிறவிப் பெருங்காயம் ஆற்றும் பெருமருந்தாய்
நானைக் கெடவைக்கும் நாவற் குழியின்கண் நட்டுயர்ந்த
காணக் கிடைக்காத பேறேயித் தெய்வப் பெருமனையே.

## திருவாசகத்திற்கும் உருகாதார் ஒரு வாசகத்திற்கும் உருகார்

பன்னிரு சைவத் திருமுறைகளில் எட்டாவதாக இடம்பெறுகின்றது திருவாசகம் எனும் மணிவாசகம். இச் செந்தமிழ் மறையை அருளிச் செய்தவர் திருவாதவூர் அடிகளான மணிவாசகர். சமய குரவர்கள் பாடியருளிய நற்றமிழ் முறைகளில் ஒவ்வொன்றிற்கும் ஒரு தனித்தன்மை உண்டு. அவற்றுள் மனிதராய் வாழும் நமக்கு மிகவும் நெருங்கிய உறவோடு விளங்குவதான தனித்துவம் கொண்டது இம் மணிவாசகத் திருநூல்

இறைவனை அடைவிக்கும் நால்வகை நெறிகள் சரியை, கிரியை, யோகம், ஞானம் எனப்பட்டன. இவற்றிற்கும் மேலான சிறந்ததோர் நெறி அன்புநெறி. இன்பம் ஆவது சிவம். அந்த இன்பமாகிய சிவத்தை அடைவிப்பது அன்பு என்னும் ஆன்மநெறி. இறைவனைப் பாடும் மணிவாசகப் பெருமான், "இன்பமே! என்னுடைய அன்பே"! என்றும், "அன்பும் தாராய் அடியேற்கே"! என்றும் "பத்திவலையில் படுவோன் காண்க" என்றும் இன்பத்திற்கும் அன்பிற்கும் உள்ள நெருங்கிய உறவினைப் புலப்படுத்துவார். "அழுதால் உன்னைப் பெறலாமே" என்று மேலும் ஒரு வழிகாட்டியவர். அது உலகினர் கொள்ளும் அழுகை அன்று. அது ஞானம் முதிர்ந்த நிலையில் விளையும் பேரன்பினால் உள்ளம் கசிந்து உருகிநின்று அழும் அழுகை அது. இந்த நிலை எல்லோருக்கும் எளிதன்று.

மணிவாசகப் பெருமான் கசிந்து உருகிப் பாடிய திருவாசகப் பாடல்களை பலகாலும் பாடிநிற்போர்க்கு கற்போலும் நெஞ்சமும் கசிந்து உருகும் என்பது அனுபவம் உடையார் உரைக்கும் உண்மைமொழி. இதனை அனுபவத்தில் கண்டவர் "திருவாசகத்திற்கு உருகாதார் ஒரு வாசகத்திற்கும் உருகார்" என மணிவாசகத்தின் மாண்பினை எடுத்துரைத்தனர்.

(திருவாவடுதுறை ஆதீன வெளியீடான 'திருவாசகம்' நூலிலிருந்து)

# சிவபூமி திருவாசக அரண்மனை : சைவ வாழ்வியல் ஆவணம்

பேராசிரியர் முனைவர் மனோன்மணி சண்முகதாஸ்

தமிழர் வாழ்வியல் சிறக்கத் துணை நின்றது வழிபாடு ஆகும். தொன்மைக் காலத்தில் தமிழர் இயற்கையின் பேராற்றல்களையே பணிந்து வழிபட்டனர். இதனைத் தொன்மையான தனி இலக்கியங்கள் சிறப்பாக ஆவணப்படுத்தியுள்ளன. இவ் வழிபாட்டு மரபில் இன்னொரு புதிய நெறியைக் காட்டியவர் காரைக்கால் அம்மையார் ஆவார். இறைவன் திருவுருவை இயற்கைத் தோற்றமாகக் கண்டு பாடியவர். கால மாற்றத்திலே இறைவன் கோல அழகைக் காண வைத்தவர். அவர் பாடல் வருமாறு அமைந்துள்ளது.

*காலையே போன்றிலங்கு மேனி கடும்பகலின்*
*வேலையே போன்றிலங்கும் வெண்ணீறு - மாலையின்*
*றாங்குவே போலுஞ் சடைக்கற்றை மற்றவற்கு*
*வீங்கிருளே போலு மிடறு (அற்புதத் திருவந்தாதி. 65)*

இறைவன் திருமேனி காலையிலே தோன்றும் செவ்வானம் போன்றது. அவன் பூசியிருக்கும் வெண்ணீறு கடும்பகல் வேளையிலே ஒளிரும் கடற்பரப்பை ஒத்தது. மாலைக்கால இருளைப் போன்றது அவனுடைய சடைக்கற்றை. கரிய இருளைப் போன்றது இறைவனுடைய மிடறு என அவர் காட்டும் காட்சி வழிபாட்டில் மனம் முற்றாக ஒன்றியிருக்கும் நிலையைக் காட்டுகிறது. தமிழில் இறைவன் புகழையும் அன்பு நிலையையும் பதிக அமைப்பிலே முதலிலே பாடி ஒரு பக்தி இலக்கிய மரபைத் தொடக்கி வைத்தவர் காரைக்காலம்மையாரே. அவர் பாடிய பாடல்கள் பக்தி இலக்கியத் தொகுப்பான பன்னிரு திருமுறைகளில் பதினோராம் திருமுறையிலேதான் தொகுக்கப்பட்டுள்ளன. அவருக்குப் பின்னே தோன்றிய நாயன்மார்களும் ஆழ்வார்களும் இறைவன் புகழைப் பதிக வடிவிலே பாடும் மரபைப் பின்பற்றிய பல பாடல்களைப் பாடியுள்ளனர். அவை திருமுறைகளாகவும் திவ்வியப் பிரபந்தங்களாகவும் தொகுக்கப்பட்டுள்ளன.

சைவ நாயன்மார்களில் ஒருவராகிய மாணிக்கவாசகரும் அம்மையாரைப் போலத் தனது இறையனுபவத்தைப் பாடிய பாடல்களே திருவாசகப் பாடல்களாகும். அவை பன்னிரு திருமுறைகளில் எட்டாம் திருமுறையிலே அடக்கப்பட்டுள்ளன. சிவன் அருள் பெற்ற மாணிக்கவாசகர் பாடிய பாடல்கள் நெஞ்சை உருக்கும் இனிய பாடல்களாகும். அப்பாடல்களைப் படித்த பிறநாட்டவரான போப் இவ்வுணர்வை பெற்றவர். திருவாசகப் பாடல்கள் தமிழகத்திலே பல திருக்கோயில்களிலே சுவரிலே பதிக்கப்பட்டுள்ளன. திருவாசகப் பாடல்களைப் பாடினால் கருங்கல் மனமும் கசிந்துருகிக் கண்கள் நீரைச் சொரியும். திருவாசகத்தைக் கேட்ட பறவைகளும் விலங்குகளும் கூட மெய்ஞ்ஞானம் பெறும் என்பர்.

இறைவனுடைய இயல்பை எல்லோரும் அறிய வைப்பது சிவபுராணம். உயிரின் இயல்பைக் கூறுவது கீர்த்தித் திருவகவல். தடைகளை எடுத்துரைப்பது திருவண்டப்பகுதி. தடை நீக்க வழி சொல்வது போற்றித்திருவகவல். இந்நான்கு பாடல்களையும் படித்தால் மனம் செம்மை பெறும். திருச்சதகம் மாணிக்கவாசகரின் இறை பற்றிய எண்ணங்களின் தொகுப்பாக அமைந்துள்ளது. சிவன் தன்னை ஆட்கொண்டதால் பெற்ற பட்டறிவை நூறு பாடல்களிலே அந்தாதி அமைப்பிலே சிறப்பாகப் பதிவு செய்துள்ளார். தன்னை அடியானாகவும் இறைவனை ஆண்டவனாகவும்

உருவகப்படுத்திய அவர் பாடியிருக்கும் முறைமை வழிபாட்டு நெறியைத் தெளிவாக விளக்குவதாக அமைந்துள்ளது. இறைவனைப் போற்றிப் பாட வேண்டும், பாடி நைந்துருகி நெக்கு நெக்காகிக் கூத்தாட வேண்டும் என அவர் கூறும் வழிபாட்டு முறைமை தனித்துவமானது. நீத்தல் விண்ணப்பம் என்னும் பாடல் தொகுப்பிலே ஐம்பது பாடல்களிலே உலகப் பற்றை நீக்கியருளுமாறு இறைவனிடம் விண்ணப்பம் செய்கிறார். அந்தாதித் தொடையிலே அமைந்த இப்பாடல்களைப் படிக்கும் போது மனம் படிப்படியாகப் பக்குவப்படும். அவர் பாடிய திருவெம்பாவை, ஒரு வழிபாட்டு நடைமுறை பெண்களால் பேணப்பட்டதை ஆவணம் ஆக்கியுள்ளது.

மேலும் மாணிக்கவாசகர் மக்கள் எப்பொழுதும் இறைவனுடைய எண்ணத்தோடு மகிழ்வாக வாழ்வதற்கும் பாடல்களிலே வழிகாட்டியுள்ளார். மக்கள் வாழ்வியலிலே இருந்த நடைமுறைகளோடு வழிபாட்டை இணைத்துள்ளார். இவ்வகைளில் பண்டைய மகளிர் விளையாட்டு நடைமுறைகளின் அடையாளமாகப் பல பதிகங்கள் பாடியுள்ளார். திருவம்மானை, திருப்பொற்சுண்ணம், திருக்கோத்தும்பி, திருத்தெள்ளேணம், திருச்சாழல், திருப்பூவல்லி, திருவுந்தியார், திருத்தோள் நோக்கம், திருப்பொன்னூசல் என்னும் பதிகங்கள் இத்தகையவை. பெண்களால் வழிபாட்டு மரபு பேணப்பட வேண்டும், இறைவன் பற்றிய தெளிவான எண்ணங்களை அவர்கள் பெற்றிருக்க வேண்டும் என்பதே மாணிக்கவாசகரின் நோக்காக இருந்தமைக்கும் இப்பாடல்களே சிறந்த சான்றுகளாக உள்ளன. இன்னும் மகளிர் அகவாழ்வியலையும் இறையுணர்வோடு இணைத்து அவர் பாடிய பாடல்களும் குறிப்பிடத்தக்கவை. அன்னைப்பத்து, குயிற்பத்து, திருத்தசாங்கம் என்னும் பதிகங்கள் இவ்வமைப்பிலே பாடப்பட்டுள்ளன. இறைவனைத் திருப்பள்ளி எழுந்தருளும்படி பாடிய பாடல்கள் பக்திச் சுவையானவை. இப்பதிகத்திலே இறைவன் குருவடிவாக வந்து தன்னை ஆட்கொண்டதைச் சிறப்பாகப் பதிவு செய்துள்ளார். சிவன் தன்னுடைய அடியார்களின் பழைமை வாய்ந்த இல்லங்களுக்கெல்லாம் உமையம்மையோடு வந்து காட்சி தருபவன் என நம்பிக்கையோடு பாடியுள்ளார்.

"பந்தணை விரலியும் நீயும்நின் அடியார்
பழங்குடில் தொறும் எழுந் தருளிய பரனே
செந்தழல் புரைதிரு மேனியும் காட்டித்
திருப்பெருந் துறையுறை கோயிலுங் காட்டி
அந்தண னாவதும் காட்டிவந் தாண்டாய்
ஆரமு தேபள்ளி எழுந்தரு ளாயே" (திருப்பள்ளியெழுச்சி. 8)

மேலும் தன்னுடைய பக்திநிலையை 30 பதிகங்களிலே பாடி வைத்துள்ளார். இப்பதிகங்களிலே உள்ள பாடல்களிலே தனது வாழ்வியலையும் பதிவு செய்துள்ளார். சிவன் மீது அவர் கொண்டிருந்த பக்தியின் பேராற்றலால் பல வியப்பான செயல்களைச் செய்துள்ளார். மாணிக்கவாசகர் பாடிய திருவாசகம் 51 திருப்பதிகங்களைக் கொண்டுள்ளது.

திருவாசகத்தின் கட்டமைப்பை சுவாமி சித்பவானந்தர் வருமாறு குறிப்பிட்டுள்ளார்:

"திருவாசகத்தின் அமைப்பை ஓர் உயர்ந்த மலைத் தொடரின் முடிமீது நடந்து போவதோடு ஒப்பிடலாம். நீண்ட மலைத் தொடரின் முடி, ஒரே ஒப்பமாயிருப்பதில்லை. செங்குத்தாக சிகரங்களும் தாழ்வுற்ற மலைப்பகுதிகளும் மாறிமாறி வந்துகொண்டிருக்கின்றன. மலையின் முதுகில் மேடும் பள்ளமும் பின்னிப் பொலிவது இயற்கையின் கூறு எனலாம். திருவாசகத்தில் சிவபுராணம் மகாமேரு போன்று ஒரே செங்குத்தாக இருக்கிறது. அதைப் பூலோக கயிலாயம் எனலாம். ஏறக்குறைய அதே உயரத்தில் இருக்கின்றன மற்ற மூன்று அகவல்களும். பின்பு மலைத்தொடர்

படிப்படியாகக் கீழே இறங்கி வருகிறது. அதில் மேலே ஏறுவதும் கீழே இறங்குவதும் மாறி மாறி நிகழ்கின்றன. மனிதனுடைய ஆன்ம சாதனமும் அங்ஙனம் நிகழ்கிறது. திருவாசகத்தின் இறுதிப் பகுதி திரும்பவும் மேல் நோக்கிப் போகிறது"

திருவாசகப் பதிகங்களைப் பார்க்கும் போது இத்தகைய ஓர் அனுபவம் ஏற்படும். இந்த அனுபவத்தைச் சிவனை வழிபடுகின்ற சைவ மக்கள் எல்லோரும் உணரவேண்டும். அதற்கான அரிய வாய்ப்பு ஒன்று ஈழநாட்டிலே இறையருளால் இனிதே கைகூடியுள்ளது.

யாழ்ப்பாணத்தில் நாவற்குழி என்னும் ஊர் திருப்பெருந்துறையாகத் தற்போது மாறியுள்ளது. யாழ்ப்பாண நகரத்தின் வாயிலாக அமைந்தவிடத்தில் சிவபூமி - திருவாசக அரண்மனை அமைக்கப்பட்டுள்ளது. மலைவடிவாகச் சுவாமி சிற்பவானந்தர் காட்டிய திருவாசகப் பாடல்கள் அரண்மனைச் சுவரிலே அழகாகப் பொறிக்கப்பட்டுள்ளன. யாழ்ப்பாண நகருக்குள் நுழையும் பெருந்தெருவின் கரையிலே புதிய பொலிவோடும் கவினோடும் திருவாசக அரண்மனை நிமிர்ந்து சிறு மலைபோலக் காட்சி தருகிறது. அரண்மனையின் நடுவிலே அழகிய கோயிலில் சிவதெட்சணாமூர்த்தி எழுந்தருளியுள்ளார். மாணிக்கவாசகரை அன்று ஆட்கொள்ளத் திருப்பெருந்துறையிலே எழுந்தருளியது போன்று நாவற்குழியில் எழுந்தருளியுள்ளார். ஈழத்துச் சிவபூமி என்ற வரலாற்றுப் பதிவு மீளவும் பேணப்பட இந்த அரண்மனை அமைக்கப்பட்டுள்ளது. 658 திருவாசகப் பாடல்களையும் சுற்றிவர நடந்து படிக்க ஒரு புதிய வழிபாட்டு மரபு யாழ்ப்பாணத்திலே தொடக்கப்பெற்றுள்ளது.

திருவாசக அரண்மனையில் இன்னொரு சிறப்பு நடுவிலே அமைந்துள்ள திருக்கோயிலின் தனித்துவமான அமைப்பாகும். திருக்கோயிலின் கோபுரத்தில் 108 சிவலிங்கம் அமைந்துள்ளது. எங்கும் நீக்கமற நிறைந்திருக்கு சிவனை லிங்கவடிவிலே கண்டு வணங்கலாம். கோயிலைச் சுற்றி வந்தால் 108 சிவனை வழிபட்ட மனநிறைவு ஏற்படும். இதற்காக இவ்வரண்மனைக்கு வரவேண்டும் என்ற மன உறுதி தோன்றும். இன்னும் ஒரு வியப்பான அமைப்பு திருவாசக அரண்மனையின் உட்புறச் சுற்றுப் புறத்திலே 108 சிவலிங்க உருவம் எழுந்தருளப் பெற்றிருப்பதாகும். இலங்கையை ஆண்ட இராவணன் 108 சிவலிங்கங்களை நாடெங்கும் எழுந்தருளச் செய்ததாகக் கூறப்படும் செவி வழிக் கதையின் செய்தி உண்மையாக இங்கு காணப்படுகிறது. இந்த சிவலிங்கங்களுக்கு அரண்மனைக்கு வருகை தரும் சிவன் அடியார்கள் அனைவரும் திருமுழுக்குச் செய்து வழிபட வாய்ப்பும் நல்கப்பட்டுள்ளது. அவ்வாறு வழிபாடு செய்யும் போது "என்ன புண்ணியம் செய்தனை நெஞ்சமே" என்ற நினைப்பே எல்லோருக்கும் ஏற்படும். விரைவான மனித வாழ்வியல் ஓட்டத்தில் ஆண்டிற்கு ஒருமுறையாவது இவ்வழிபாட்டை நான் வந்து செய்யவேண்டும் என்று மனதிலே ஓர் உறுதி ஏற்படும். அந்த வழிபாடு வாழ்க்கையில் எல்லா வளங்களையும் தரும். பெருந்தெருவால் பயணிக்கும் போது ஒரு சில நிமிடம் தரித்து நின்று அந்த வழிபாட்டைச் செய்ய வேண்டும் என்ற ஆவல் உண்டாகும். தனியாகவும் கூட்டாகவும் வந்து வழிபட்டுச் செல்லலாம்.

அரண்மனையின் சுற்று வேலியாக அமைக்கப்பட்டிருக்கும் வேல் பண்டைய அரண் செய்யும் பண்பாட்டை நன்கு விளக்கி நிற்கிறது. அரண்மனையின் நுழைவாயிலைக் கடந்து செல்லும் போது கண் எதிரே தோன்றும் கல்லால் உருவாக்கப்பட்டுள்ள 21 அடி உயரமான தேர். அத்தேரிலே சிவனும் மாணிக்கவாசகரும் எழுந்தருளியிருக்கும் காட்சி "வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்" என்ற வள்ளுவரின் வாக்கின் சிறந்த விளக்கமாக உள்ளது.

திருவாசகத்திலே அமைந்துள்ள திருச்சாழல் என்னும் பதிகம் வினாவுக்கு விடையிறுப்பது போன்ற அமைப்பிலுள்ளது. பெண்கள் இதனை ஒரு விளையாட்டாக அக்காலத்தில் செய்ததாகவும் கருதப்படுகின்றது. இதைவிட இலங்கை நாட்டு இளவரசியிடம் புத்த சமயத்தவர் ஒருவர் கேட்ட வினாவுக்கு விடையாகக் கூறப்பட்டவையே பாடல்களின் உள்ளடக்கம் என்ற கருத்தும் பதிவு செய்யப்பட்டுள்ளது. சைவசமய வழிபாட்டு நடைமுறைகளின் தொடர்பாக எழுகின்ற ஐயங்கள் பாடல்களிலே தெளிவுபடுத்தப்பட்டுள்ளன. சிவனின் தோற்றம் பற்றிய இன்றைய இளந்தலை முறையினருக்கு ஏற்ற விளக்கந்தரத் தேரேறிச் சிவனும் மாணிக்கவாசகரும் வந்திருப்பது போன்ற ஒரு பாவனையையும் கல்லால் செய்யப்பட்டுள்ள தேர் காணவைக்கிறது.

இன்று திருவாசகப் பாடல்கள் பற்றிய ஆய்வைச் செய்ய விரும்புவோருக்கென ஆராய்ச்சி மண்டபமும் ஆக்கப்பட்டுள்ளது. திருவாசகம் தொடர்பான ஆய்வுநூல்களும் திருவாசகப் பதிப்புகளும் உரைநூல்களும் இடம்பெற உள்ளன. அதற்கென ஒரு நூலகமும் அமைய உள்ளது. இந்நூலகம் மாணிக்கவாசகர் பற்றிய தேடல்களை இணையத் தளத்திலே மேற்கொள்ளும் எதிர்கால இளந்தலைமுறையினருக்கு மூலச் சான்றுகளைப் பார்க்க உறுதுணையான களஞ்சியமாக விளங்கும்.

தேவாரப்பாடல்களில் பாடப் பெற்ற பெருமையுடன் ஈழநாட்டுத் தலங்கள் இரண்டு உள்ளன. அவை ஈழத்தமிழரின் சைவப் பண்பாட்டின் அடையாளமாகத் திகழ்கின்றன. திருக்கோணேஸ்வரம், திருக்கேதீஸ்வரம் என்னும் இரு ஈஸ்வரங்களும் சைவ வரலாற்றிலே சிறப்பான பதிவுகளாக விளங்குகின்றன. அதுபோலவே நாவற்குழி சிவபூமி அரண்மனையில் தெற்குத் திக்கு நோக்கி அமைந்திருக்கும் சிவதெட்சணாமூர்த்தி கோயிலும் வரலாற்றுப் பெருமையுடன் விளங்குகின்றது.

இந்த அரண்மனை தமிழகத்திலே வாழ்ந்த தமிழ் மன்னர்களின் பணியின் தொடர்ச்சியாக யாழ்ப்பாணம் சிவபூமி அறக்கட்டளையால் நிறைவேற்றப்பட்டுள்ளது. திருக்கோயில் அமைவதற்குரிய நிலப்பரப்பு கொடையாகப் பெறப்பட்டுள்ளது. அக்கொடையை மனமுவந்து செய்த வைத்தியர் மனோமோகன் தன் முன்னோரின் வழி நின்று பணி செய்த பெருமை பெறுகிறார். திருக்கோயில் கட்டுவதற்குப் பொருட் கொடை செய்த அன்பர்கள் தமது தலைமுறை வளமாக வாழ ஒரு நிலையான வைப்புநிதியைச் செய்துள்ளார்கள். சிவலிங்கத் திருவுருவம் அமைக்கக் கொடை வழங்கிய அன்பர் நோயற்ற வாழ்வு வாழ நல்ல மருந்தைப் பெற்றிருக்கிறார்கள். என்றும் இறை பணி செய்வதே எம் கடன் என எண்ணுபவர்கள் இத்திருத்தலப் பராமரிப்புப் பணியைச் செய்ய முன்வந்துள்ளார்கள்.

எல்லாவற்றிற்கும் மேலாக திருவாசகப் பாடல்கள் முழுவதையும் ஒரு திருக்கோயிற் சூழலிலே இருந்து படிக்க ஒரு வாய்ப்பு எல்லோருக்கும் வழங்கப்பட்டுள்ளது. மாணிக்கவாசகருடைய சைவப்பணியை சிவபூமி திருவாசக அரண்மனை என்றும் நினைவுபடுத்திக் கொண்டிருக்கும். திருவாசகத்திற்கு உருகாதவர் ஒரு வாசகத்திற்கும் உருகமாட்டார்கள் என்பது எமது ஆன்றோர் வாக்காகும்.

இன்று நாம் ஓர் ஆன்மீகப் போரை எதிர்கொள்ள வேண்டிய நிலையிலே வாழ்ந்து கொண்டிருக்கிறோம். இருள் நிறைந்த இந்த மண்ணுலக வாழ்வில் அருள் நிறைந்த விண்ணுலக வாழ்வைப் பெற முயற்சி செய்ய வேண்டும். எம்மை அருள்வழிச் செல்லாமல் தடுக்கின்ற மாயப்படைகளைத் தடுக்க வேண்டிய நிலையில் நாம் உள்ளோம். அருளாளர்கள் எல்லோரும் ஒரு படையாக எழுச்சி பெற்றுப் பணிபுரிய வேண்டிய காலம் இது. அதற்கான அறைகூவலை அன்றே மாணிக்கவாசகர் பாடல் மூலம் விடுத்துள்ளார். ஆன்மாவை எதிர்க்கின்ற பிரபஞ்சப்

போரை வெல்ல வேண்டும். பொய்மைகளை வென்று சிவனருள் பெற்று வாழ்வதற்குப் படையாக அணிதிரள வேண்டும். அதற்கான வழிமுறையை வருமாறு மாணிக்கவாசகர் கூறியுள்ளார்.

*"தொண்டர்காள் தூசி செல்லீர் பக்தர்காள் சூழப் போகீர்*
*ஒண்திறல் யோகிகளே பேரணி உந்தீர்கள்*
*திண்திறல் சித்தர்களே கடைக்கூழை செல்மின்கள்*
*அண்டர் நாடாள்வோம் நாம் அல்லற் படை வாராமே"* (திருப்படையெழுச்சி. 2)

தொண்டர்களே தூசிப்படைபோல நீங்கள் முன்னேறிச் செல்லுங்கள். பக்தர்களே நீங்கள் அந்தத் தொண்டர் படையினரைச் சூழ்ந்தவாறு இணைந்து செல்லுங்கள். சிறந்த மனவாற்றல் படைத்த யோகிகளே நீங்கள் இப்பேரணியை நடத்திச் செல்லுங்கள். திண்ணிய மனவுரம் கொண்ட சித்தர்களே நீங்கள் 'கூழை' என்னும் துணைப்படையாகச் சேர்ந்து செல்லுங்கள். இவ்வாறு நாம் ஒன்றிணைந்து ஒழுகினால் நம்மை எதிர்கொள்ளும் மாயப்படையின் தாக்குதலுக்கு ஆளாகாமல் தப்பி வானவர் நாட்டைக் கைப்பற்றி நாம் சிறந்த முறையிலே செங்கோல் செலுத்தலாம்.

சிவபூமி திருவாசக அரண்மனை உணர்த்தும் அரிய செய்தியும் இதுவே. எந்நாட்டவர்க்கும் இறைவனாக விளங்கும் சிவனை வழிபட ஆற்றுப்படுத்தி நிற்கும் இந்த அரண்மனை எம்மைச் சிவப்பணியிலே வழிநடத்த என இறைவனால் அமைக்கப்பட்ட அழகிய திருக்கோயிலாகச் சைவ வரலாற்றில் புதியதொரு செல்நெறியாக உள்ளது.

*தேசத்தில் இனிக்கின்ற தெள்ளமுதே மாணிக்க*
*வாசகனே ஆனந்த வடிவான மாதவனே*
*மாசகன்ற நீதிருவாய் மலர்ந்ததமிழ் மாமறையின்*
*ஆசகன்ற அநுபவம்நான் அநுபவிக்க அருளுதியே!*

*வான்கலந்த மாணிக்க வாசகநின் வாசகத்தை*
*நான்கலந்து பாடுங்கால் நற்கருப்பஞ் சாற்றினிலே*
*தேன்கலந்து பால்கலந்து செழுங்கனித்தீஞ் சுவைகலந்தென்*
*ஊன்கலந்து உயிர்கலந்து உவட்டாமல் இனிப்பதுவே!*

*வருமொழிசெய் மாணிக்க வாசகநின் வாசகத்தில்*
*ஒருமொழியே என்னையும்என் னுடையனையும் ஒன்றுவித்துத்*
*தருமொழியாம் என்னிலினிச் சாதகமேன் சஞ்சலமேன்*
*குருமொழியை விரும்பியயல் கூடுவதேன் கூறுதியே!*

*பெண்சுமந்த பாகப்பெருமான் ஒருமாமேல்*
*எண்சுமந்த சேவகன்போல் எய்தியதும் வைகைநதி*
*மண்சுமந்து நின்றதுமோர் மாறன் பிரம்படியார்*
*புண்சுமந்து கொண்டதுநின் பொருட்டன்றோ புண்ணியனே!*

**(வடலூர் வள்ளலார் இராமலிங்க சுவாமிகள்)**

# அகத்திணை மரபில் மாணிக்கவாசகர் பாடல்கள்

கலாநிதி ஸ்ரீ.பிரசாந்தன்

தமிழிலே தோன்றிய பக்திப் பனுவல்களில், மிகவும் குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய நூலாகிய திருவாசகம், உலகப் புகழ் பெற்றது. ஆன்மாவின் உண்மையான ஏக்கத்தையும், இரங்குதலையும் தக்கவாறு வெளிப்படுத்தும் இந்நூலின்கண் சிற்றின்பச் சாயலில் பேரின்பப் பொருண்மை பேசப்படும் இடங்கள் பல உள. 'கண்டவர் விண்டிலர், விண்டவர் கண்டிலர்' என்பது உண்மை வாசகம். இதன்படி சிந்தையும் மொழியும் செல்லா நிலைமைத்தாய வீட்டின்பத்தை, உரைத்தல் இயலுமானதன்று. எனவே அவ்வின்பத்தை உணர்த்துவதற்கு ஓரளவுக்கேனும், சிற்றின்பத்தை உவமையாகக் கூறும் வழியைப் பக்திக் கவிஞர்கள் பலரும் கைக்கொண்டுள்ளனர்.

*"முன்னம் அவனுடைய நாமம் கேட்டாள்*
*மூர்த்தி அவனிருக்கும் வண்ணம் கேட்டாள்*
*பின்னை அவனுடைய ஆரூர் கேட்டாள்*
*பேர்த்தும் அவனுக்கே பிச்சியானாள்...."* என்கிறார் நாவுக்கரசர்.

*"சிறையாரும் மடக்கிளியே இங்கே வா தேனொடு பால்*
*முறையாலே உணத்தருவன்..*
*பிறையாளன் திருநாமம் எனக்கொருகாற் பேசாயே"* என்கிறார் சம்பந்தர்.

பெற்ற சிற்றின்பமே பேரின்பமாம் என இப்பக்திக் கவிஞர் வழியிலேயே தாமும் நடைபோடும் மணிவாசகர், தமது திருவாசகத்தில் இரு நிலைப்பட்டு அகத்திணையைக் கூறுகின்றார் எனலாம்.

முதலாவது வகை சார்ந்து நாடகப்பாங்கில் அவர் அமைக்கும் சில பாகங்களில், பாத்திரங்களாக வந்து செல்லும் பெண்கள், சிவபெருமானாம் நாயகரின் அடியவர்களைப் பிராணநாதர்களாகப் பெறுவதற்காகப் பிரார்த்தனை செய்வதைக் காணலாம்.

*"உங்கையிற் பிள்ளை உமக்கே அடைக்கலம் என்று*
*அங்கப் பழஞ்சொல் புதுக்குமெம் அச்சத்தால்*
*எங்கள் பெருமான் உமக்கொன்று உரைப்போம் கேள்*
*எங்கொங்கை நின்னன்பர் அல்லார்தோள் சேரற்க...."* (திரு.173)

என்கிறது திருவெம்பாவைப் பாடலொன்று. இங்கு 'அகம்' காணப்பெறுகிறது. எனினும், ஆன்மா தலைவியாகவில்லை. இறைவன் தலைவனாகக் கூறப்பெறவில்லை.

ஆனால் இரண்டாவது வகை சார் பாடல்களோ இவ்வாறானவையல்ல. அங்கு பெண் வருகிறாள். அப்பெண் வேறுயாருமல்லள். பக்தி ரசம் சொட்டப் பாடும் மணிவாசகர்தான் அந்நாயகி. அவளின் ஏக்கமெல்லாம் தன் தலைவராகிய நாயகரைச் சார்வதுதான். அந்நாயகர், 'வானாகி மண்ணாகி வளியாகி ஒளியாகி', நிற்கின்ற கோனாகிய சிவபெருமானார்தான்.

எனவே, இவ்வகைப் பாடல்கள் மானுடக்காதற் பாடல்கள் அல்ல. இவை தெய்வீகக் காதல் குறிப்பன. இவ்வகைப் பாடல்களும் தொல்காப்பியமாதி நூல்கள் கூறும் பண்டைய அகத்திணை மரபு வழிநின்று எழுதப்பெற்றவையே என்பர் ஆய்வாளர். குறிப்பாக, இறைவனை நாயகனாக அமைத்துப் பாடும் நாயக - நாயகி பாவனைப் பாடல்களின் தொடக்கமாக கைக்கிளைப்

பாட்டு அமைந்துள்ளது எனலாம். இறைவன்மீது கொள்ளும் காதலை, தலைவியின் மனோபாவத்தில் பக்திக்கவிஞர் எடுத்துரைப்பதனைப் பற்றி ஆய்ந்த பக்தியிலக்கியத் திறனாய்வாளர்கள்,

காமப் பருதி கடவுளும் வரையார்
ஏனோர் பாங்கினும் என்மனார் புலவர் (தொல். *1029*)

எனும் சூத்திரத்தில் அதற்கான அடிப்படை கூறப்பட்டுள்ளதாகச் சுட்டுவர். இச்சூத்திரத்தில் 'காமம் எனக் கூறப்படுவது யாது?' எனும் வினாவைக் கிளப்பும் அவர்கள், இக்காமம் மானுடக் காதல் பற்றியதன்று என்று முடிவுக்கு வருகின்றனர். நச்சினார்க்கினியர்,

"இங்குக் காமம் என்றது ஒருவனும் ஒருத்தியும் உடம்பொடு கூடி மகிழும் இணைவிழைச்சினைக் குறித்ததன்று, உயிருணர்வுடன் ஒன்றும் தூய காதலாகிய பக்தியுணர்வினைக் குறித்தது. ஆதலால் இது வேறோர் காமம் என்று கொள்க"

எனப் பேசியிருப்பது இதனை நன்கு தெளிவுபடுத்தும். பிற்கால ஆய்வாளர்களும் மேற்சுட்டப்பெற்ற தொல்காப்பியச் சூத்திரம், நாயக - நாயகி பாவனைப் பாடல்கள் பற்றியதே என்பதில் உடன்படுகின்றனர். பக்தியிலக்கிய ஆய்வாளர்களுள் குறிப்பிடத்தக்கவரான க.வெள்ளைவாரணனார்,

"சைவத் திருமுறையாசிரியர்களாகிய நாயன்மார்களும் நாலாயிர திவ்யப்பிரபந்த ஆசிரியர்களாகிய ஆழ்வார்களும் எல்லாம் வல்ல இறைவனை ஆருயிர் நாயனாகவும் தம்மை அவனது அருள்வேட்ட தலைவியாகவும் எண்ணிப் போற்றிய ஞானநன்னெறிப் பாடல்களாகிய திருவருளிலக்கியத்திற்கு அரண் செய்யும் இலக்கணமாக இத்தொல்காப்பிய நூற்பா அமைந்துள்ளமை உயித்துணரத்தகுவதாகும்"

என்று கூறிச் சொல்கிறார். இவற்றையெல்லாம் தொகுத்து நோக்கும்போது இறைவனை நாயகனாகப் பாவிக்கும் பக்திப்பாடல்களை, தெய்விகம்சார் கைக்கிளைப் பாட்டுக்களாகக் கருதமுடியும். இப்பாடல்களில் நாயகியராகத் தம்மைப் பாவித்துக் கூறும் கவிஞர்களின் மன ஏக்கங்களே வெளிப்படுகின்றன.

'வருக என்று அருள்புரிவாயே' (*446*)
'அருளா என்னை உடையானே' (*385*)
'தேவர் பிரான் வரக் கூவாய்' (*355*)
'என்று கொல்லோ என்பொல்லா மணியைப் புணர்ந்தே' (*445*)

போன்றவை அவ்வேக்கங்களுள் சில. இவ்வேக்கங்களுக்கான - மன உணர்வுகளுக்கான - பதில், மன உணர்வுகளைப் பற்றிய பதிவுகள் இக் கவிதைகளில் இல்லை. நாயகனாக அமைபவர் இறைவரே ஆதலால், இப்பதிவுகள் இருக்க நியாயமில்லை. எனவே காதலியான ஆன்மாவின் குரல் மட்டும் பதியப்படுவதால், இப்பாடல்களை ஒருதலைக் காதல் பற்றிய கைக்கிளைப் பாடல்கள் எனல் பொருத்தமானதே.

அடிப்படையில் இப்பக்திப்பாடல்கள் யாரை நோக்கியன என்பதிலும், சிற்றின்பம் குறியாது அந்தமில் பேரின்பத்து வீட்டின்பம் குறித்தன என்பதிலும் வேறுபடுகின்றன எனினும் சங்ககால அகத்திணைப் பாடல்கள் மானுடக் காதலை வெளிப்படுத்தும் பாவனையிலிருந்து பெரிதும் வேறுபடாதவை. எவ்வாறு அகத்திணைச் செய்யுள், தலைவியின் உலகியல் காதல் உணர்வைப் பிரதிபலிக்கின்றதோ, அதே தன்மையில் ஆன்மாவின் பேரின்பக் காதல் ஏக்கத்தை வெளிப்படுத்துகின்றன. எடுத்துக்காட்டாக, காதல் அவசமுற்ற தலைவியின் எண்ண அலைகளைப் பாடும் சங்க அகத்திணைப் பாடல்களையும், தெய்வீகக் காதல் பாக்களாக அமையும் திருவாசகப் பாடல்களையும் அருகருகே வைத்து நோக்கும் போது அறியலாம்.

காதல் நோயாற் பெரிதும் துயரடைகின்ற தலைவியின் குரலை குறுந்தொகை பின்வருமாறு பதிவு செய்கின்றது.

"முட்டுவேன் கொல்? தாக்குவேன் கொல்
ஓரேன் யானும் ஓர் பெற்றிமேலிட்டு
ஆஅ ஒல் எனக் கூ வுவேன் கொல்?" (குறு.28)

இத்தலைவியினது அவசம்தான், திருவாசகத்தில் மணிவாசகராம் நாயகியும் உறுகின்ற அவசம் எனலாம். வாழ வழி தெரியாத தலைவியின் - தலைவனைப் பிரிந்துள்ள தலைவியின் - உணர்ச்சி பின்வருமாறு பிரவாகிக்கின்றது.

"அறுக்கிலேன் உடல் துணி படத் தீப்புக்கு
ஆர்கிலேன் திருவருள் வகை அறியேன்
பொறுக்கிலேன் உடல் போக்கிடம் காணேன்" (திரு.401) என்று செத்திலாப்பத்திலும்,

"எண்ணமே உடல்வாய் மூக்கொடு செவிகண்
என்றிவை நின்கணே வைத்து
மண்ணின்மேல் அடியேன் வாழ்கிலேன் கண்டாய்" (திரு.450)

என்று வாழாப்பத்திலும், மணிவாசகர் வெளிப்படுத்தும் உணர்வுநிலை, குறுந்தொகைத் தலைவி உறும் நிலையைப் பெரும்பாலும் ஒத்ததே. அங்கு மானுடத் தலைவனைக் குறித்தது, இங்கு இறைவனாகிய தலைவனைக் குறித்தது என்பதே வேறுபாடு.

இனி, திருவாசகப் பகுதிகளை அமைக்கும்போது மகளிர் விளையாட்டுத் தொடர்பாக திருவம்மானை, திருத்தோணாக்கம், திருப்பொன்னூசல் முதலிய பல பகுதிகளை அமைத்து மணிவாசகர், அகத்திணை மரபைப் பின்பற்றியும் பல பகுதிகளை அமைத்துள்ளமையை நோக்குவதும் முக்கியமானதே. இவ்வகையில் அன்னைப்பத்து, திருக்கோத்தும்பி, குயிற்பத்து முதலியன குறிப்பிடத்தக்கன.

சங்க அகத்திணை மரபில், காதல் வசப்பட்ட தலைவி, தன் மன உணர்வுகளை உரையாடற்கேற்ப அமைத்துள்ள செவிலிப் பாத்திரம் சிறப்பிடம் பெறுகின்ற பாத்திரமாகும். நாயகரான சிவனிடம் வசப்பட்ட ஆன்மாவாகிய பெண், தன் உணர்வுகளை வெளிப்படுத்தவென சங்க அக மரபைப் பின்பற்றி அன்னைப்பத்தில் செவிலியைப் படைத்துக் காட்டுகிறார் வாசகர். இப்பத்தில், தாயிடம் காதற் செய்தி சொல்லும் பாவனையில் பாடல்கள் அமைந்துள்ளன. இப்பகுதி பற்றி திருவாசக உரையாசிரியர்களுள் மிகவும் சிறப்பிக்கப்படும் சு.அருளம்பலவனாரின் முகவுரைப் பகுதி இவ்விடத்திற் காட்டப்படத்தக்கது.

"ஒரு மங்கை தன் செவிலித் தாயை நோக்கி இறைவன் மாட்டுத் தான் கொண்ட ஒருதலைக்காமம் பற்றிய உள்ள நிகழ்ச்சியைக் கூறுவது போலாக இது அமைந்துள்ளது. இங்கே மங்கை அடிகளாகவும் செவிலித்தாய் திருவருட்சத்தியாகவும் அமைந்தன எனக் கொள்ளல் இயைபுடைத்து."

இவ் அன்னைப்பத்தில் , தன் மனத்தில் இருக்கின்ற நாயகன் யார் எனும் விவரத்தைச் செவிலித்தாய்க்கு உரைக்கும் பின்வரும் பாடல், இறையியற் காதலைப் பற்றிய தக்க எடுத்துக்காட்டுப் பாடலாகும்.

*"நித்த மணாளர் நிரம்ப அழகியர்*
*சித்தத்திருப்பரால் அன்னே என்னும்*
*சித்தத்திருப்பவர் தென்னன் பெருந்துறை*
*அத்தரானந் தரால் அன்னே என்னும்"*

இங்கு தன் நாயகனை 'நித்த மணாளர்' என்றும் 'நிரம்ப அழகியர்' என்றும் விளிக்கின்ற நாயகி மனோபாவத்தை விளங்கிக் கொள்வதிற் சிரமமில்லை. இதையொத்த பாடல்கள் பல தேவாரங்களிலேயும் உள.

*நிழலார் சோலை நெடுங்களத்து நிலாய நித்தமணாளனை (நா.15 - 7)*
*நேசமாகிய நித்த மணாவளனை (நா.175 - 8)* என்கிறார் நாவுக்கரசர்.

அ∴றிணைப் பொருட்களை நோக்கி, பலவாறு உரையாடுவதற்காகப் பாடுவது, அகத்திணை மரபில் மிக முக்கியத்துவம் பெறும் ஒன்றாகும். இதனை பின்பற்ற விழைந்தே மணிவாசகர் திருக்கோத்தும்பி, குயிற்பத்து ஆகியவற்றை அமைத்துள்ளார் எனலாம். ஆராத அன்பு மிக்கவிடத்து ஏற்படும் மடமை, அ∴றிணைப் பொருட்களைப் பார்த்து உரையாடும் - தூதுக்கு வேண்டும் - என்பதைத் தொல்காப்பியம் தெரிவிக்கின்றது.

*"கேட்குந போலவும் கிளக்குந போலவும்*
*அஃறிணை மருங்கினும் அறையப்படும்"*

என்பது அது. சாதாரண மானுடநாயகர்கட்கு சாதாரண வண்டுகளைத் தூது அனுப்பும் மரபிருக்க 'மெய்த்தேவர்', 'வித்தகத்தேவர்' 'குன்றாத செல்வர்' என விளங்கும் இறைத் தலைவரிடம் அரசவண்டை அனுப்புவதாகப் பாடுகிறார் வாசகர். 'திருக்கோத்தும்பி' எனும் பகுதியில், தன் 'எண்ணத்தைச் சென்று உரை' எனக் கூறுவதற்குப் பதிலாக, வாடிப் போகும் மலர்களில் தேன் அருந்தி நேரம் கெடுக்காமல் தன் நாயகனான சிவனின் திருவடிமலரில் ஆனந்தத்தேனை நித்தம் அருந்தி மகிழும்படி வண்டுக்குக் கூறப்படுகின்றது.

*திணைத்தனை உள்ளதோர் பூவில் தேன் உண்ணாதே*
*நினைத்தொறுங் காண்தொறும் பேசுந்தொறும் எப்போதும்*
*அனைத்து எலும்பு உள்நெக ஆனந்தத் தேன் சொரியும்*
*குனிப்புடையானுக்கே சென்றூதாய் கோத்தும்பி (திரு.217)*

இங்கு தனது எலும்பு உருகும் வண்ணம் ஆனந்தமாகிய தேனைச் சொரியும் நாயகனின் திருவடி மலருக்குச் செல்லும்படி வண்டை ஆற்றுப்படுத்தும் நாயகியின் மனப்பாங்கைக் காட்டும் மணிவாசகர் குயிற்பத்தில் நாயகனார் வரும்படி கூவும்படியாக வேண்டுகின்ற ஆன்மநாயகியைக் காட்டுகின்றார்.

*உன்னை உகப்பன் குயிலே உன்றுணைத் தோழியுமாவன்*
*பொன்னை யழித்த நன் மேனிப் புகழிற்றிகழும் அழகன்*
*மன்னன் பரிமிசை வந்த வள்ளல் பெருந்துறை மேய*
*தென்னவன் சேரலன் சோழன் சீர்ப்புயங்கன் வரக்கூவாய் (திரு.352)*

'புகழிற்றிகழும் அழகன்', 'அழகிய சேவடி காட்டி....' போல குயிற்பத்தில் வரும் பகுதிகள் எவ்வளவு தூரம் சிற்றின்பப் போர்வையில் பேரின்பக் காதலை மணிவாசகர் சொல்லிச் செல்கிறார் என்பதைத் தக்கபடி எடுத்துக்காட்டுகின்றன.

இவ்வாறு பலவிடயங்களிலும் மானுடக்காதலைப் பேசும் அகத்திணை மரபை ஒட்டிச் செல்லும் இறையியற் காதல் வாசகங்கள், சில இடங்களில் பேச எடுத்துக் கொண்ட விடயம் தொடர்பாக சில மரபு மீறல்களையும் கொண்டுள்ளன என்பதையும் சுட்டுதல் தகும். குறிப்பாக தலைவனை முன்னே விளித்து, தனது மன ஆசையை நேரடியாக எடுத்துக் கூறும் தலைவியரை அகத்திணையில் காணுதல் அரிது. 'தாமுறு காமத் தன்மை தாங்களே உரைப்பது' மகளிர்க்குப் பெரும்பாலும் பொருத்தமானதன்று என அது விலக்கப்பட்டுள்ளது.

ஆனால், இறையியல் காதலை நாயக - நாயகி பாவனையில் பேசும் பாடல்கள், இத்தன்மையில் சற்றே வேறுபடுவது ஏற்புடையதே. ஆன்ம நாயகி, இறைவனை நோக்கி தன் புலம்பல்களை, ஏக்கங்களை எடுத்துச் சொல்லுதல் இயல்பானதே. இவ்வகைப் பாடல்களுக்கு, தக்க எடுத்துக் காட்டுகளாக,

***"தேவா தேவர்க்கரியானே சிவனே***
***சிறிதென் முகம் நோக்கி***
***ஆவா என்ன ஆசைப்பட்டேன்***
***கண்டாய் அம்மானே" (திரு.418)***

***"முத்தா உன்றன் முகவொளி நோக்கி***
***முறுவல் நகைகாண***
***அத்தா சால ஆசைப்பட்டேன்***
***கண்டாய் அம்மானே..." (திரு.421)***

என வரும் ஆசைப்பத்துப் பாடல்களைக் காட்டலாம். இங்கு முறுவல் நகைகாண ஆசைப்படுவதை தலைவி, தலைவனுக்கே நேரே உரைப்பதைக் காணலாம்.

இவ்வாறு, சிற்றின்பச் சாயலில் பேரின்பப் பொருள் பேசும் திருவாசகப் பாடல்களின் நோக்கம், வாசகர்களுக்குத் தெரிந்த - அவர்களுக்கு பிடித்தமான - அகமரபைப் பின்பற்றி பக்தி உணர்வைப் புலப்படுத்துவதுதான். அகமரபும் காதல் அன்பை அடிப்படையாகக் கொண்டது என்பதால் இறையன்பை தெரிவிக்க அதுவோர் உத்தியாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. எனினும் அகமரபுப் பொருட்களும் புதிய புதிய பொருள் விளக்கங்களைப் பெற்று தத்துவார்த்த நிலையில் இறையியற் காதல் பாடல்களில் புதிய பரிமாணம் பெறுகின்றன என்பதையும் சுட்டல் வேண்டும். எடுத்துக்காட்டாக, **"இறைவன் வரும் வண்ணம் கூவுக எனக்கூறும் முகத்தால் தம்மை ஒரு பெண்ணாகவும் இறைவனை நாயகனாகவும் அவன்மேற் கொண்ட அன்பின் மிகுதியால் அவன் அருட்பேற்றை விரும்பிக் குயிலைப் பார்த்து இறைவன் வரும் வண்ணம் கூவுக"** என்று வேண்டிக் கொண்டதாக அமைந்துள்ள குயிற்பத்துப் பகுதியில், கூறப்பெறும் குயில் உண்மையில் ஒரு பறவையாக மட்டும் மட்டுப்படவில்லை. அகமரபில், நாயகி பார்த்து உரைக்கும் அஃறிணை உயிர்களுள் ஒன்றாகவே அமையும் குயில், இறையியற் காதல் பேசும் திருவாசகத்தில் தத்துவக் குறியீடாகவே அமைகின்றது.

**"தூய அருட்குயிலே சோதியெனைக் கூடுதற்கு உன்**
**வாயினாற் கூவென முன் வாழ்த்தல் குயிற் பத்தாமே"**

என திருவாசகச் சிறப்புடையார் குறிப்பிடுகின்றதன்படி தூய அருளே குயிலாக உருவகிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு திருவாசகம் சுட்டும் அகமரபுப் பொருள் ஒவ்வொன்றையும் தத்துவ அடிப்படையாலும் விளக்கம் செய்ய இயலும். அவ்வாறு விளக்கப்பட்டுமுள்ளது என்பது அவதானத்துக்குரியது.

# திருவாசக அரண்மனை ஒரு தெய்வத் திருப்பணி

செந்தமிழ்ச்சொல்லருவி ச.லலீசன்,
சிரேஷ்ட விரிவுரையாளர் - ஆசிரிய கலாசாலை, கோப்பாய்

யாழ். மண் திருவாசகத்தை உயிர்ப்புடன் பேணும் மண் என்றால் மிகைப்படாது. மார்கழியில் திருமுறைக் காப்பிட்டு திருவாசகப் பாக்களை ஓதும் வழக்கமாயினும் சரி, நீத்தார் சடங்குகளில் திருப்பொற்சுண்ணத்தைப் படிக்கும் மரபாயினும் சரி ஆலயங்களில் மற்றும் மடங்களில் திருவாசக முற்றோதலை மேற்கொள்வதானாலும் சரி திருவாசகத்திற்கு முதன்மை வழங்கும் நடைமுறை இன்றும் தொடர்ச்சியுற்றுள்ளது. இந்நிலையில் செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன் அமைத்த திருவாசக அரண்மனை 'திருவாசகம் என்றால் யாழ்ப்பாணம்' என்ற உயர் தகுதிப்பாட்டை எம்மவர்க்கு வழங்கியுள்ளது.

## பத்துப் பரப்பில் கோவில் வளாகம்

அவுஸ்திரேலியா சிட்னியில் வாழும் இதய வைத்திய நிபுணர் மனோமோகன், சிவகௌரி தம்பதியரின் உபயமாகக் கிடைத்த காணியில் அவர்களின் நிதியுதவியுடன் அமைக்கப்பட்ட கோவில் உயர்ந்து நிற்கிறது. கோவிலில் மூலவராகத் தெட்சணாமூர்த்தி, அவர் முன்னால் நந்தியெம்பெருமான் அதற்கும் முன்னால் கற்றேர், அதில் சிவலிங்கத்துடன் மணிவாசகர் என அரண்மனை அழகுற அமைக்கப்பட்டுள்ளது. கோவிலின் கிழக்கு மற்றும் மேற்குப் புறங்களில் அறுநூற்று ஐம்பத்தாறு திருவாசகப் பாடல்களும் கருங்கல்லில் மனிதவலுவினால் உளிகொண்டு செதுக்கப்பட்டுள்ளன.

## சிறப்பு மிக்க நாவற்குழி

ஈழத்து இந்து சமய வளர்ச்சியில் நாவற்குழி மண் சைவமும் தமிழும் தழைத்தோங்கும் புண்ணிய பூமியாகும். சுவாமி விவேகாநந்தர் யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்தபோது அவரை நாவற்குழியில் இருந்து பெரும் ஊர்வலமாக அழைத்துச் சென்றார்களாம். அவர் அங்கிருந்து குதிரைகள் பூட்டப்பட்ட தேரில் பவனியாக யாழ்ப்பாணம் அழைத்துச் செல்லப்பட்டார் என்கின்றனர். யாழ்ப்பாணத்தவரின் உணவுக்களஞ்சியமும் நாவற்குழியிலேயே அமைந்திருந்தது. போர்ச் சூழலில் இதன் அருமை பலராலும் உணரப்பட்டிருந்தது. இந்த உணவுக் களஞ்சியத்திற்கு முன்பாகவே கோவில் வளாகம் அமைந்துள்ளது.

## கோவில் அமைவதற்கான கரு

செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன் அவர்கள் சொற்பொழிவு ஒன்றிற்காக மூன்றாண்டுகளுக்கு முன்னர் திருவண்ணாமலை சென்றபோதே இக்கரு உதயமானது. 'திருமந்திரமும் திருவாசகமும்' என்ற பொருளில் அவர் உரையாற்றியபோது அங்கிருந்த ஒரு சித்தர் திருமுருகனாரை ஆசீர்வதித்து "திருவாசகத்தை யாழ்ப்பாணத்தில் நீ காப்பாற்றுவாய். காற்று மழை நெருப்பு என எவையும் தீண்டாத வண்ணம் அதைப் பாதுகாக்கக் கூடிய பணியை மேற்கொள்ளக்கடவாய்" என்றாராம்.

டிஜிற்றல் யுகத்தில் திருவாசகத்தைக் காப்பாற்ற இணையம் உள்ளதுதானே எனப் பலரும் நம்பிக்கை கொண்டுள்ள நிலையில் எக்காலத்திலும் அழியாத ஒரு வடிவில் திருவாசகத்தைப் பேணும் முயற்சியாக திருவாசக அரண்மனை அமைக்கும் ஆணை மறைபொருளாக அந்தச்

சித்தராலேயே ஏற்படுத்தப்பட்டிருக்கின்றது. பல நற்பணிகளை இன்று எம்மண்ணில் முன்னெடுக்கும் சிவபூமி அறக்கட்டளையின் வாயிலாக இப்பணி நடந்தேறியுள்ளது.

## விமானம் உயர்ந்த கலைக்கோவில்

சோழர் காலக் கட்டடக் கலைக்கு ஒப்பாக தஞ்சைப் பெருங்கோவிலை நினைவுறுத்தும் வகையில் முப்பது அடி உயரத்தில் விமானம் நிமிர்ந்து நிற்கின்றது. அதில் சிவலிங்கங்கள் பதிக்கப்பட்டுள்ளன. மூலவராக தெட்சணாமூர்த்தி காணப்படுகின்றார். இலங்கையில் தட்சணாமூர்த்தியை மூலவராகக் கொண்ட முதற்கோவிலும் இதுதான். கருங்கல்லில் நான்கரை அடி உயரமுள்ளவராக இந்த ஞானகாரகன் விளங்குகின்றார். விமானத்தில் சிவலிங்கங்கள் அமைக்கப்பட்ட கோவிற்சிறப்பும் இங்குள்ள தனித்துவங்களில் ஒன்று எனலாம். ஊரெழு சண்முகநாதனின் கைவண்ணமும் தென்னிந்தியச் சிற்பக் கலைஞர் புருஷோத்தமனின் கலைவண்ணமும் திருமுருகனாரின் சிந்தனைகளுக்குச் செயல்வடிவம் கொடுத்துள்ளன. இதைவிட நல்லுள்ளம் படைத்த சான்றோர் பலர் நிதி வழங்கி இக்காரியம் செயற்பட உதவியுள்ளனர். ஏறத்தாழ நானூறு இலட்சம் ரூபா மதிப்பில் பணிகள் இடம்பெற்றதாக மதிப்பிட முடிகின்றது.

கோவிலின் உட்பிரகாரத்தில் கிழக்கு மற்றும் மேற்கு சுவர்களில் அறுநூற்று ஐம்பத்தாறு திருவாசகப் பாடல்களும் கருங்கற்களில் கைகளால் செதுக்கப்பட்டுள்ளன. கிளிநொச்சியைச் சேர்ந்த 29 வயது இளைஞரான வினோத் என்ற கலைஞர் இந்த வரலாற்றுப் பணியைச் செய்துள்ளார். புகழுடற் சின்னங்களில் தம் கைவினையை வெளிப்படுத்திய தேர்ச்சி மிக்கவர். இன்று பக்திசார்ந்த வரலாற்றுப் பணியை மேற்கொண்டு பெருமை பெற்றுள்ளார். இதைவிடக் கிழக்கு மற்றும் மேற்குப் புற உட்பிரகாரத்தில் 108 சிவலிங்கங்கள் அமைக்கப்பட்டுள்ளன. அதன் மேல் 108 மணிகளும் காணப்படுகின்றன. அடியவர்கள் தங்கள் விருப்பப்படி அபிஷேகித்து ஆனந்திக்கக் கூடிய வாய்ப்பு ஏற்படுத்தப்படவுள்ளது எனத் தெரியவருகின்றது.

இதைவிட வாயிலில் சிவபுராணத்தை கிரந்தம், சீனம், தங்கோலோ, சிங்களம் முதலிய பன்னிரண்டு மொழிகளில் மொழிபெயர்த்து முப்பது அடி நீளச்சுவரில் அமைத்துள்ளனர். கோவிலில் எவ்வேளையும் திருவாசகம் ஒலித்துக் கொண்டிருக்கும் ஒலிப்பொறிமுறையையும் ஏற்படுத்தியுள்ளனர். அத்துடன் திருவாசக ஆராய்ச்சி நூல் நிலையம், யாத்திரிகர் தங்கும் அறை, பூசகர் அறை, களஞ்சிய சாலை, பாகசாலை எனக் கோவிலுக்குரிய இதர அம்சங்களும் அமைக்கப்பட்டுள்ளன.

## பெருங்கனவு நனவாகியது

சைவாபிமானிகளின் பெருங்கனவொன்று நனவாகியிருக்கின்றது. உலக நாடுகளில் பைபிளை வெள்ளைக் கற்களில் பதித்துள்ளனர். திருக்குரானை மகா பாரதத்தை கற்களில் எழுதிப் பதிவு செய்துள்ளதாகக் கூறுகின்றனர். சைவபக்தி இலக்கியமாகிய திருவாசகத்தைக் கற்களில் எழுதிய சாதனை யாழ்ப்பாணத்திலேயே நிகழ்ந்திருக்கின்றது. இதனை எமது இளஞ்சந்ததியினர் அவசியம் பார்வையிட்டுப் பயன்பெற வேண்டும். பாடசாலை அதிபர்கள் மற்றும் பெற்றோர்கள் இத்தெய்வத் திருப்பணியைத் தமது பிள்ளைகளுக்கு உணர வைக்க வேண்டும். எங்களிடம் இருக்கின்ற இந்து அமைப்புக்கள் மற்றும் பஜனைக் குழுவினர் வருடம் முழுவதும் திருவாசக முற்றோதல் மேற்கொள்ளக் கூடிய நியமத்தை ஏற்படுத்த வேண்டும்.

இலங்கை சிவபூமி என்பதை மெய்ப்பிக்கும் காரியம் ஒன்று திருமுருகனார் வாயிலாக நிறைவேறியிருக்கின்றது. தெய்வம் அவருள் நின்று இயக்கியிருக்கின்றது என்றால் மிகைப்படாது. ஒரு தெய்வத் தி நப்பணியை நிறைவேற்றிய அவருக்கு நன்றியுரைக்க வார்த்தைகள் இல்லை.

# தமிழைக் காக்கும் காலத்தீர்மானமே நாவற்குழி திருவாசக அரண்மனை

இ.சர்வேஸ்வரா
சிரேஷ்ட உதவிப் பதிவாளர்
ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகம்

தமிழன் என்று சொல்லடா தலைநிமிர்ந்து நில்லடா என உணர்ச்சி வயப்பட்டு பல தடவைகள் நாங்கள் பேசுவதுண்டு. உண்மைதான்! தமிழனாக நாம் தலைநிமிர பல காரணங்களை பட்டியலிட முடியும். குறிப்பாக உலகின் சில மொழிகளை ஒவ்வொரு அடைமொழி கொடுத்து சிறப்பாக அழைப்பார்கள். உதாரணமாக ஆங்கிலத்தை சர்வதேச மொழி எனவும், பிரெஞ்சு மொழியை காதலின் மொழி எனவும் அழைக்கும் போது தமிழை பத்தியின் மொழி என அழைப்பார்கள். அந்த உயர்ந்த இடத்தை தமிழுக்குப் பெற்றுக்கொடுத்த பெருமை திருவாசகத்துக்குரியது. அதையும் தாண்டி தமிழ் செம்மொழி அந்தஸ்துப் பெற காரணமானவை தமிழின் நீண்ட பாரம்பரிய தொடர்ச்சியான மரபுசார் இலக்கியங்கள். அவற்றுள் இன மத மொழி கடந்து உலகின் அத்தனை மனிதர்களையும் ஈர்த்த பெருமை இரண்டு இலக்கியங்களுக்கு உண்டு. ஒன்று உலகப் பொதுமறை திருக்குறள். மற்றையது தேனினும் இனிய திருவாசகம்.

திருவாசகச் சிந்தனைகள் என்பது மதம் கடந்த பக்தியின் மார்க்கத்துக்கு வழி செய்வன. அதனாலேயே அறிவு முதிர்ச்சி பெற்ற பல கிறிஸ்தவ மதகுருமார்கூட ஆராதிக்கும் நூலாக திருவாசகம் திகழ்கின்றது. பல தேவாலயங்களில் திருவாசகப் பாடல்கள் சில பிரார்த்தனையுடன் பாடப்படுவதை இன்றும் காணலாம்.

திருவாசகத்தை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தமை ஒரு குற்றம் எனக் கருதி கிறிஸ்தவப் பாதிரியாரான போப் அடிகள் மீது வழக்குத் தொடுக்கப்பட்டது. கிறிஸ்தவ மதத்தை பரப்புவதற்காக அனுப்பி வைக்கப்பட்ட ஒருவர் சைவ சமயத்தின் ஒரு நூலை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தமை பெரும் சிக்கலை உருவாக்கியது. வழக்கு விசாரணைக்கு வந்தபோது நீதிபதி, "போப் அவர்கள் மொழிபெயர்த்த நூலை முழுமையாக வாசிக்காது தீர்ப்புக் கூற முடியாது" என வழக்கை ஒத்திவைத்தார். தீர்ப்பு வழங்கும் நாளில் நீதிமன்றுக்கு வந்த நீதிபதி எல்லோரும் எழுந்து நிற்க நேரே போப் பாதிரியாரிடம் சென்று அவரை வீழ்ந்து வணங்கினார். இப்படி ஒரு நூலைப் படித்து சுவைத்து மொழிபெயர்த்த பின்னரும் சைவ சமயத்துக்கு மதம் மாறாது இருக்கின்றீர் எனின் தாங்களே உண்மை கிறிஸ்தவன் என மெச்சி வழக்கில் இருந்து அவரை விடுவித்தார். இப்படி திருவாசகம் நிகழ்த்திய அற்புதங்கள் ஏராளம்.

தமிழின் இருப்புக்கும் சைவத்தின் நிலைபேறுக்கும் சவாலான காலம் தற்போது நிலவுவதாக பலரும் அஞ்சப்படுகின்றோம். இந்த அச்சம் எமக்குத் தேவையற்றது. இயற்கை நீதியையும் நியதியையும் புரிந்து கொள்ளும் பக்குவம் கொண்டவர்களுக்கு இவ் அச்சம் ஒருபோதும் வருவதில்லை. காரணம் காலம் என்பது மிகப்பெரும் நீதிபதி. அது தக்க தீர்மானங்களை அவ்வப்போது எடுத்துக் கொள்ளும். அதன் தீர்மானத்தின் வழி ஒரு விடயத்தை தலைமுறை கடந்தும் பாதுகாத்துக் கொள்ளவேண்டும் என தீர்மானிக்கப்பட்டால் அந்த விடயத்தை எவர்

நினைத்தாலும் எத்தகைய பலம் கொண்டும் அழித்து விட முடியாது. இவ்வாறு காலம் பாதுகாத்த விடயங்கள் பலவுண்டு. தமிழ்மொழி என்பது காலம் பாதுகாத்த அரும் பொக்கிஷம்.

அல்லாது போனால் காலத்துக்கு காலம் நடைபெற்ற அந்நியர்களின் படையெடுப்பால் தொடர் பயன்பாடற்றுப் போன தமிழ் மொழியும் அடக்கி அமுக்கப்பட்ட சைவநெறியும் மீண்டும் முனைப்புப் பெற்று இன்னும் பல்வகைச் சிறப்போடும் தனித்துவத்தோடும் இன்றுவரை உலகப் பரப்பு எங்கும் வியாபித்திருக்காது. ஒரு கணம் சிந்தியுங்கள். உலகத்தின் ஆதிக்க சக்தியாக கருதப்படும் கிறிஸ்தவ மதத்தின் பிதாமகர் யேசு போதித்த மார்க்கம் இன்றுவரை உலகில் ஆதிக்கம் செலுத்துகின்றது. ஆனால் யேசு பேசிய அவரது தாய்மொழி "ஹிப்ரு" (Hebrew) இன்று உலகில் வழக்கத்தில் இல்லை. ஏன் தேவபாஷையாக உயர் அந்தஸ்தில் வைத்து போற்றப்பட்ட வடமொழி சமஸ்கிருதம் இன்று வெறுமனே வழிபாட்டுக்குரிய மொழியாக மட்டுமே இருக்கின்றது. பேச்சு வழக்கிழந்து போகின்றது. அறிவியில் சிந்தனைகளின் ஆரம்ப ஊற்றாக இருந்த இலத்தீன் மொழி இன்று தன் பலத்தை ஆங்கில மேலாதிக்கத்தால் தொலைத்திருக்கின்றது. இப்படி ஒரு காலத்தில் உலகையாண்ட பல மொழிகள் காணாமல் போன போகின்ற வரலாறுகளை ஞாபகப்படுத்தமுடியும்.

ஆனால், தமிழ் பல்லாயிரம் ஆண்டுகள் காலம் கடந்தும் இன்றும் காலவோட்டத்துக்கு ஏற்ப தன்னை தகவமைத்துக்கொண்டு இயல், இசை, நாடகம் எனும் முத்தமிழோடு இன்று அறிவியல் தமிழையும் இணைத்துக்கொண்டு இணையமொழியாக என்றும் இளைய மொழியாக தன் இருப்பை உறுதிசெய்துள்ளது.

இன்னும் ஒரு கோணத்தில் சிந்தித்தால் அச்சு இயந்திரங்கள் கண்டுபிடிக்கப்பட்டது சுமார் முந்நூறு ஆண்டுகளுக்கு முன்பே ஆகும். அதற்குப் பின்பே நூல்கள் அச்சு வாகனம் ஏறின. இருந்தும் தமிழின் நீண்ட தொடர்ச்சியான இலக்கியப் பாரம்பரியமிக்க நூல்கள் சற்று சிதைந்து தொலைந்தாலும் கணிசமானளவு காலம் கடந்தும் எங்கள் கைகளுக்கு கிடைத்திருக்கின்றது என்றால் அதுகாலம் நம் தமிழை காத்ததன்மையினால் அல்லவா?

எனவே, காலம் தமிழைப் பாதுகாக்கும் தீர்மானத்தை எப்போதோ எடுத்துவிட்டது. அந்த தீர்மானத்தை அது ஒருபோதும் ரத்துச் செய்யாது, கைவிடவும் மாட்டாது. மாறாக தீர்மானத்தை வலுவாக்கும் காரணிகளை, விடயங்களை தன் இயற்கை வல்லமை கொண்டு தன்னால் ஆசீர்வதிக்கப்பட்டவர்கள் வழி காலத்துக்கு காலம் ஆற்றியவண்ணமிருக்கும். அப்படி காலத்தால் ஆசீர்வதிக்கப்பட்டவரான கலாநிதி செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகன் சிந்தனையில் செல்லும், திசையாவும் வெல்லும். அவரது சொல்லுக்கு கட்டுப்படும் கொடைவள்ளல்களின் காருண்யத்தில் காலம் தீர்மானித்த ஒரு விடயம்தான் நாவற்குழி திருவாசக அரண்மனை.

அதனையும் நாவற்குழியில் அமைக்கவேண்டும் என காலம் தீர்மானித்த சூட்சுமம் சற்று ஆழமாகச் சிந்திப்பின் மனதுக்கு ஆறுதல் தரும். யாழ்ப்பாணத்தின் நுழைவாயிலில் நுழைய எத்தனிப்பவர்களுக்கும், உள்வருவோருக்கும் யாழ்ப்பாணம் தமிழின் நிலம் சைவத்தின் தேட்டம் என்பதை உணர்த்தும் காலச் சின்னமாக திருவாசக அரண்மனை என்றும் நிலைக்கும்.

மதம் கடந்து நாம் தமிழர்கள் என தலைநிமிர வைக்கும் மையப்புள்ளியாக திருவாசகம் எம்மை இயக்கட்டும். தமிழர்களாய் நாம் ஒற்றுமைப்பட வேண்டிய காலத்தில் பல்வேறு அடிப்படைகளில் நாம் சிதறுண்டு போகாதிருக்க காலம் நமக்கு காட்டும் சகுனமாக திருவாசக அரண்மனை திகழ்கின்றது. எனவே காலத்தீர்மானத்தை கவனம்கொள்வோமாக!

# திருவாசகத்தில் தொன்மங்கள்

க. வேங்கடராமன்

## முன்னுரை

மனித சமூகத்தில் நீண்ட காலமாக, வாய் மொழியாக வழங்கி வரும் கதை தொன்மம். புராணம் என்ற சொல்லால் சமயத் துறையில் இது வழங்குகிறது. எனினும் தொன்மம், தமிழ் மரபில் தொல்காப்பியம் தொட்டு நிலைபெற்ற சொல். பழமையான கதை பல்வேறு காலங்களில், இடங்களில் வெவ்வேறு வடிவங்களில் வழங்கிப் பின்னர் நிலையான வடிவைப் பெறும். தமிழ் மரபில் பல்வேறு வகையான தொன்மங்கள் உள்ளன. சமய மரபில் தத்துவக் கருத்துக்களை விளக்க இவை பயன்படுகின்றன. இக்கதை நிகழ்வுகள் வழிபாட்டு மரபில் பல்வேறு நிலைகளில் போலச் செய்வதற்காகச் சடங்குகளாக நிகழ்த்திக் காட்டப்படும். அதேபோல இறைத் திருமேனிகள் சிற்பம், ஓவியம் போன்ற நுண்கலைகள் மூலம் தொன்மங்கள் விளக்கப்படும். கதை, அது உணர்த்தும் கருத்து, தத்துவ விளக்கம் ஆகிய அனைத்தும் அடியார்களால் புரிந்து கொள்ளப்படும். தொடக்க நிலையில் வெறும் கதையாக மட்டும் இருப்பவை, காலப்போக்கில் இத்தகைய பன்முகத் தன்மையைப் பெறும்.

மணிவாசகர் திருவாசகத்தில் ஆண்டுள்ள தொன்மங்களை விளக்குவது இதன் நோக்கம். தொன்றுதொட்டு வழங்கி வரும் கதை, தொன்மம், புராணம் என்ற வடசொல்லின் முன் பகுதியான புரா இப் பொருளையே குறிக்கும். தொன்மம் பலவகைப்படும். தமிழ் மரபில் பொதுவான கதை - தமிழ், வடமொழி இரண்டிலும் வழங்குவன, தமிழ் மரபில் மட்டும் வழங்குவன என இருவகைப்படும். வடமொழியிலிருந்து தமிழில் மொழிபெயர்க்கப்பட்ட மகா, உப புராணங்கள் இவ்வகையின. சிவமகாபுராணம், ஸ்காந்தம் போல்வன இதற்குச் சான்று. இவை மொழிபெயர்ப்பாகவும், ஆக்கமாகவும் (கச்சியப்பர் பாடிய கந்த புராணம்) வழங்குகின்றன. தமிழ் மரபில் அடியார் வரலாறு - பெரிய புராணம், வாதவூர் அடிகள் புராணம் போல்வன. தலபுராணம் (திருவிளையாடற்புராணம், திருப்பெருந்துறைப் புராணம் போல்வன) நதிபுராணம், சாதிப் புராணம் எனப் பல்வேறு வகையில் புராணம் அமைகிறது. திருவாசகத்தில் பொதுவான புராணம், அடியார் வரலாறு, தலபுராணம் ஆகிய மூவகையும் இடம்பெற்றுள்ளன. திருமுறை ஆசிரியர்கள் - சமயக் குரவர்கள் - காலத்தில் இவ்வகைகள் இல்லை. இன்றைய நிலையிலிருந்துதான் இந்த வகைகளில் திருவாசகம் மறுவாசிப்பு செய்யப்படுகின்றது. மணிவாசகர் தொன்மங்களை முழுமையாக, விரிவாகக் கூறவில்லை. ஆங்காங்கே கீற்றுக்களாகத் தம் நோக்கிற்கேற்ப, இறைவன் கருணையை விளக்க அவற்றை பயன்படுத்துகிறார்.

பொதுவான தொன்மங்கள் என்ற வகையில் அவர் சில கதைகளை விரிவாகவும், முதல் பதிவாகவும், மாறுபட்ட கதை வடிவங்களிலும், சிலவற்றைக் குறிப்பாகவும் பாடியுள்ளார். அடியார் வரலாறு வகையில் தம்முடைய வாழ்க்கை நிகழ்வுகளை - அருளியல் அனுபவங்களை - வெவ்வேறு நிலைகளில் கூறுகிறார். பிற்கால வரலாற்று நூல்களுக்கு அவை அடிப்படை. அவர் காலத்திற்குப் பிறகு பிற்காலச் சோழர் காலத்தில் - 11ஆம் நூற்றாண்டு முதல் - அவருக்குத் திருமேனி எடுக்கப்பட்டு, பாடல்கள் ஓதும் மரபு ஏற்பட்டது. தொடர்ந்து கி.பி 13, 14 நூற்றாண்டு முதல் அவருடைய வரலாறு புராணம், தல புராணம், விளக்க உரை, வாழ்த்துப்பாடல் எனப் படிப்படியாகத் தமிழ் மரபில் உருவாயின. அவர் பாடல்களில் குறிப்பாக இடம்பெற்ற நிகழ்வுகள் அடிப்படையில்

அவரைப் பற்றிய தொன்மக் கதைகள் கட்டமைக்கப்பட்டன. சில அடியார்கள் பற்றி அவர் குறிப்பிடுகிறார். அவரோடு தொடர்புடைய தலங்கள் தவிர வேறுபல தலங்களோடு தொடர்புடைய தொன்மக் கூறுகளை அவர் பாடியுள்ளார். பிற்காலத்தில் தலபுராணங்கள் பாட அவை மூலமாயின. இந்த அடிப்படைகளில் இக்கட்டுரை அமைகிறது.

## பொதுவான தொன்மம்

சிவ பரம்பொருளின் கருணையை விளக்கும் பல்வேறு தொன்மங்கள் தமிழ், வடமொழி இரண்டிலும் பொதுவாக உள்ளன. எப்போது எங்கிருந்து எங்கு சென்றன என்பதற்கு வரையறுத்த சான்றுகள் இல்லை. வடமொழி மரபில் புராண இலக்கிய வகை (18 மகாபுராணம், உபபுராணம்) தொகுக்கப்படுவதற்கு முன், வேதங்களில் குறிப்புக்களாக இடம்பெறும் முன் மக்களிடம் வாய்மொழி மரபில் எண்ணற்ற கதைகள் வழங்கின. புராண ஆசிரியர்கள், நிலையான வடிவம் பெற்ற பின் தொகுத்தனர். அதன் பின்னும் கூடக் கதை வேறுபாடுகள் காணப்படுவது இயல்பு. மணிவாசகர் சிவன் தொடர்பான பல்வேறு தொன்மங்களைக் கூறுகிறார். திரிபுரம் எரித்த செயல், தக்கன் யாகத்தில் திருமால் உள்ளிட்ட தேவர்கள் பட்ட துயரம், நஞ்சு உண்டசெயல், திருமால், பிரமன் இருவரும் சிவனின் அடிமுடி அளந்து அறியாதநிலை ஆகிய கதைகளை விரிவாகவும் பல்வேறு இடங்களிலும் வெவ்வேறு வகைகளிலும் பாடியுள்ளார். இவை சிவனை ஒப்பற்ற பரம் பொருளாகக் காட்டுவன. அன்றைய சூழலில் அவைதிக சமயங்களுக்கு மாற்றாகவும் வைணவத்திற்கு மேற்பட்டதாகவும் முதன்மைச் சமயமாகச் சைவத்தைக் கட்டமைக்கும் தேவை அவருக்கு இருந்தது.

தக்கன் வேள்வியில் திருமால் உள்ளிட்ட தேவர்கள் பட்ட துன்பங்களைத் திருவுந்தியாரில் விரிவாகக் கூறுகிறார். நுட்பமாக, சில சொற்களில் தம் கருத்தை - சிவபரம் பொருளின் மேன்மையை - விளக்குகிறார். 'தேவர்கள் ஓடியவா பாடி', 'திருமால்.... சாவாது இருந்தான்'. 'புரத்தரனார் ஒருபூங் குயில் ஆகி' (திருவுந்தியார் 5, 6, 9) என்பன சான்று. தக்கன் வேள்வியில் சிவனை மறுத்துத் திருமால் உள்ளிட்டோர் முதன்மை பெற்றதும் இந்திரனை முதன்மைப்படுத்தும் வேள்வி அழிந்ததும் தக்கனின் ஆணவம் வீழ்வதும் குறிப்பாகச் சில சொற்களில் 'பிரமன், அரி.... யாம்பரம் என்ற பதைப்பு ஒடுங்கஞ்.. அழல் உரு ஆய்... அரனார் (திருத்தோள். 12) என்று அவர் பாடுவதும் இதே முறையில் தான். திரிபுரம் எரிந்த நிகழ்வைப் பாடும்போது 'எரி பிழைத்து... இந்திரர், பிரமர், மால் மாண்டனர்' (திருத்தோள். 9)எனப் பாடுகின்றார். திருவாசகத்திற்கு முன் மாதிரியாக 'விண்ணோர் அமுதுண்டும் சாவ ஒருவரும் உண்ணாத நஞ்சு உண்டு இருந்து அருள் செய்வாய். (சிலம்பு. வேட்டுவ - பாடல் 21) என்று சிலப்பதிகாரம் கூறுகிறது. சங்க காலம் முதலாகத் தமிழ் மரபில் அறியப்பட்ட இத்தொன்மங்களை மணிவாசகர் தம் காலச் சூழலுக்கேற்ப, சைவ சமய முதன்மையை நிலைநாட்டப் பயன்படுத்தியுள்ளார். அத்துடன் வேதகாலத்தில் முதன்மை பெற்றிருந்த இந்திர வழிபாடு, சைவ மரபில் உள்வாங்கப்பட்டதையும் சைவ சமயம் ஒற்றைப் பெருஞ்சமயமாக உருப்பெறுவதையும் திருவாசகம் நிறுவுகிறது.

வேடன் வடிவம் கொண்டு அருச்சுனனுக்குப் பாசுபதம் கொடுத்த தொன்மைக் கதையைப் பல இடங்களில் குறிப்பிடுகிறார். தமிழ் மரபில் இக்கதை மாறுபட்ட முறையில் இறைவன் இறைவி இருவரும் வேட்டுவக் கோலம் பூண்டு வந்ததாகக் கூறப்படுகிறது. சிற்பங்களும் அதே முறையில் உள்ளன. 'கிராத வேடமொடு கிஞ்சுக வாயவள்' (கீர்த்தி .15) என்பது திருவாசகம். அதேபோல ஆனைத் தோலை அணிந்து கொண்டதைக் கூறுமிடத்தில் உமையம்மை அஞ்ச அத்தி உரித்தான் எனப் பாடுகிறார். (அஞ்சுவித்தாய் வஞ்சிக் கொம்பினை - நீத்தல். 19) இறைவியோடு கூடிய இறைவனைப் பாடுவது சமயக் குரவர்களின் பொதுப்பண்பு. அன்றைய சூழலில் துறவுநெறி,

வாழ்க்கை நிலையாமை, பெண்ணோடு கூடிய இல்லற நெறிப்பழிப்பு ஆகிய அவைதிக சமய மரபுகளுக்கு மாற்றாக வைதிக சமயம் இறைவன் இறைவி இணைந்த கோலத்தை வலியுறுத்தியது. காலனைக் காலால் கடிந்த தொன்மக் கதையைத் திருவாசகம் கூறுகிறது. 'கூற்றை வென்று' 'காலனைக் காலால் காய்ந்த' என்று மீண்டும் மீண்டும் பாடும் மணிவாசகர் மார்க்கண்டேயருக்காக இது நடந்தது என்று கூறவில்லை. கூற்றுவன் பற்றிய அச்சத்தை நீக்குவதும் சிவன் அருளுக்கு இலக்காவதும் மட்டுமே முன்வைக்கப்படுகின்றன. எனவே தொன்மக் கதைகளைக் கூறும் முறையில் மைய நோக்கம் உள்ளது. ஈசன் அற, மறக் கருணை உடையவன் என்பதை முதன்மைப்படுத்தவே இக்கதைகளை அவர் பயன்படுத்துகிறார்.

சிவனின் ஆனந்த தாண்டவம் தில்லை அம்பலத்தில் நிகழ்வதை மிகுதியாகப் பாடும் மணிவாசகர் பதஞ்சலி, வியாக்ரபாதர் ஆகியோருக்காக அக்கூத்து நடந்தது என்பதை எங்கும் பதிவு செய்யவில்லை. அது பிற்கால வழக்கு. அவருடைய வாழ்க்கையோடு தொடர்புடைய திருவாதவூரில் ஈசனின் கூத்தும் அவன் பாதச் சிலம்பொலியும் காண, கேட்கக் கிடைத்த அனுபவத்தைக் கூறுகிறார். 'வாதவூரினில் வந்து இனிதருளி பாதச் சிலம்பொலி காட்டிய' (கீர்த்தி 52 - 53) என்ற திருவாசக அனுபவந்தான் பிற்காலத்தில் சேரமான் பெருமாள் நாயனாருக்கு நிகழ்ந்ததாகச் சேக்கிழாரால் மாற்றப்படுகிறது. ஆலமர்ச் செல்வனான ஈசன் கதை தமிழ் மரபில் நன்கு அறியப்பட்டதாகும். முனிவர்களுக்கு அறம், வேதம், உறுதிப் பொருட்கள் உரைத்ததாக ஈசனை அறவடிவினனாகக் காட்டப் பயன்படுகிறது. இதிலும் அவைதிக சமயங்களுக்கு மாற்றாகச் சிவனை அறவடிவமாக, ஆசிரியனாகக் காட்டும் நோக்கம் உள்ளது. திரிபுரம் எரிந்தபோது திருமாலே விடையாக ஈசனைத் தாங்கினான் என்று கூறுகிறது திருவாசகம் (திருச்சாழல் 15). அதேபோலத் திருமால் ஈசனுக்கு வழிபாடு செய்யும் போது ஒரு மலர் குறையத் தன் கண்ணையே மலராகப் பயன்படுத்திட, ஈசன் மகிழ்ந்து சக்கரம் அருளியதை மணிவாசகர் கூறுகிறார் (திருச்சாழல் 18).

சிவ பரத்துவத்தைக் கூறும் நோக்கில் இக்கதைகளை அவர் பயன்படுத்தியுள்ளார். ஒரு நிலையில் வைதிக சமயத்தை முதன்மைப்படுத்துவதும், மறுநிலையில் அதிலும் சைவத்தை ஒப்பற்றதாகக் கூறுவதும் அடிப்படை நோக்கங்களாகச் செயல்படுகின்றன. காமனை எரித்தது, சலந்தரனைப் பிளந்தது, வேங்கையின் தோலை அணிந்தது, கங்கையைத் தலையில் வைத்தது போன்ற பல்வேறு பொதுவான தொன்மக் கதைகளை மணிவாசகர் பதிவு செய்துள்ளார்.

## வாழ்க்கை வரலாற்றுத் தொன்மை

மணிவாசகர் தம்முடைய வாழ்வில் நடந்த சில நிகழ்வுகளைத் திருவாசகத்தில் பதிவு செய்துள்ளார். இவை தொன்மமாக கட்டமைக்கப்பட்ட புனைவுகளாக காலப் பழைமை உடையதாகக் கூறப்படவில்லை. மாறாக ஈசன் தனக்கு அருளிய செயல்களாக அவன் கருணையை விளக்குவதற்காகப் பாடுகிறார். அவர் காலத்திற்குப் பிறகு புராண ஆசிரியர்கள் இந்த அருளியல் அனுபவங்களைத் தொன்மக் கதைகளாக்கினார். அவர் பாடாததையும் சேர்த்து விரிவாக்கினார். சான்றாக, ஈசன் தன்னைத் தில்லைக்கு வருமாறு அருளியதை - 'நாயினேனை நலமலி தில்லையுள்... வருக' (கீர்த்தி 127 - 128) என்று மட்டுமே மணிவாசகர் பாடியுள்ளார். ஆனால் திருவாசகத்திற்குப் பொருள் தில்லைக் கூத்தனே என மணிவாசகரே கூறியதாகப் பின்னர் புனையப்பட்ட நிகழ்வு வாதவூர் அடிகள் புராணத்தில் (திருவடி பெற்ற சருக்கம், 537) கூறப்படுவதுதான் முதல் பதிவு. மணிவாசகர் இவ்வாறு எங்கும் கூறவில்லை. சிவபுராணத்தில் 'சொல்லிய பாட்டின் பொருள்' (அடி 93) என்பதை முன்னுள்ள 'தில்லையுள் கூத்தனே' (அடி. 90) என்பதோடு கொண்டு கூட்டிப் பன்முறை வாசிப்புச் செய்ததன் விளைவாக இது உருவானது.

மணிவாசகருக்கு இறைவன் பெருந்துறையில் குருந்தின் கீழ் ஆசிரியனாக ஆட்கொண்டு அருளியது. அவருக்காக ஈசன் குதிரைச் சேவகனாக மதுரை நகர் வந்தது, பரி நரியானது, வைகையில் வெள்ளம் வர வந்தியின் கூலியாளாய் வந்தது, மண்சுமந்தது, பிரம்படிபட்டது போன்ற நிகழ்வுகள் திருவாசகத்தில் பலமுறை இடம்பெற்றுள்ளன. அவர் வாழ்வில் நடந்த அருளியல் அனுபவமாக இதைக் கூறி இறைவனின் கருணையை அவர் விளக்குகிறார். எவராலும் அறியப்படாத ஈசன் எளிமையாகத் தமக்கு அருளினான் என்ற உண்மையை - வேதங்களும் அவனை விளக்க முடியாதபோது, அவர் மிக எளிமையாகத் திருவாசகம் முழுவதும் காட்சிப்படுத்துகிறார். இந்த நுட்பத்திற்காக அவர் தம் வாழ்க்கை நிகழ்வுகளைப் பதிவு செய்துள்ளார். பின்னர் அவை தொன்மங்களாயின.

மணிவாசகர் தமக்கு முன்னே இருந்த அடியார் சிலரின் வாழ்க்கை நிகழ்வுகளை இறைவன் அவர்களுக்கு அருளியதை திருவாசகத்தில் குறிப்பிட்டுள்ளார். இந்த நிகழ்வுகளைப் பாடுவதிலும் ஈசன் கருணையை வலியுறுத்துவதே நோக்கமாக உள்ளது. கண்ணப்பர், சண்டேசுவரர் ஆகியோரின் அருளியல் அனுபவங்களைக் கூறுகிறார். 'கண்ணப்பன் ஒப்பது ஓர் அன்பு இன்மை' (கோத்தும்பி - 4) என்று தம்முடைய அன்பு இன்மையை அறிந்தும் ஈசன் அருள் செய்தான் என ஒப்பீட்டிற்காகக் கூறுகிறார். மற்றொரு இடத்திலும் (திருத்தோள். 3) கண்ணப்பரைக் குறிப்பிடுகிறார். சண்டேசுவரனுக்கு அருள் செய்ததை விரிவாகப் பாடுகிறார். (திருத்தோள் .7) இவை அவருக்கு முற்பட்ட காலத்தில் நிகழ்ந்தவை. மக்களிடம் வாய்மொழி வழக்காக வழங்கியவை. மணிவாசகர் அக்கதைகளைத் தம்முடைய நோக்கத்திற்கேற்பப் பயன்படுத்தியுள்ளார். ஓங்கி, ஆழ்ந்து, அகன்ற நுண்ணிய ஈசனை முகம் முகமாய்க் கண்டு அனுபவித்ததைச் சொற்களில் முன்னிலை விளியாக அவர் விளக்குகிறார்.

## தலபுராணம் (தலத் தொன்மம்)

மணிவாசகர் வாழ்ந்த காலத்தில் தலபுராணம் தனித்த இலக்கிய வகையாக உருவாகவில்லை. தலங்களோடு தொடர்புடைய தொன்மங்கள் பிற்காலத்தில் (கி.பி 13 ஆம் நூற்றாண்டு முதல்) தலபுராணமாகப் பெருகின. இவ்வகை தமிழில் மட்டுமே உள்ளது. திருவாசகத்தில் குறிப்பிட்ட தலங்களோடு தொடர்புடைய பல்வேறு தொன்மக் கதைகள் மிகுதியாக இடம் பெற்றுள்ளன. சில திருவாசகத்தில் மீண்டும் மீண்டும் இடம்பெற சில குறிப்பிட்ட பாடல்களில் மட்டுமே இடம் பெற்றுள்ளன. திருஞானசம்பந்தர் தொடங்கி சமயக் குரவர் நால்வரும் தலங்கள் தோறும் சென்றபோது அங்கு வழங்கும் வாய்மொழிக் கதைகளைப் பதிவு செய்தனர். அவை பிற்காலத்தில் தனித்த இலக்கிய வகையாக உருவாகின. இக்கதைகளும் இறைவனின் ஒப்பற்ற கருணையைக் கூறுவன. எனவே மணிவாசகர் இவற்றில் ஈடுபட்டு ஆங்காங்கே கூறிக்கொள்ளுகிறார்.

மதுரை, திருப்பெருந்துறை, உத்தரகோசமங்கை, திருக்கழுக்குன்று போன்ற அவருடைய வாழ்க்கையோடு தொடர்புடைய தலத்தொன்மங்கள் பலவற்றை அவர் பாடுகிறார். பிட்டுக்கு மண்சுமந்தது, பிரம்படிபட்டது. பரி நரியானது, ஈசன் குதிரைச் சேவகனாக வந்தது என்பன மதுரை நகரில் நிகழ்ந்தவை. ஆனால் பல்வேறு தலங்களில் இத்தொன்மம் மீண்டும் மீண்டும் இடம் பெறுகின்றது. ஈசன் அவரை ஆட்கொண்டு உபதேசித்தது - அந்தணனாக வந்து ஆட்கொண்டது - பெருந்துறையில் குருந்தின் கீழ் நடந்தது. அதுவும் பல பாடல்களில் பல்வேறு தலங்களோடு தொடர்புடையதாக வருகிறது. எனவே இவை ஈசனை நினைக்கும் போதெல்லாம் உடனே நினைவில் வர அவன் கருணையை வியந்து பாட உதவுகின்றன. ஒருவகையில் அருளியல் அனுபவத்தைக் கவிதையில் காட்சிப்படுத்த உதவும் தொன்மங்களாக இவை உள்ளன.

கீர்த்தி திருஅகவல் முழுவதும் பல்வேறு தொன்மங்கள் இடம்பெற்றுள்ளன. ஈசன் மகேந்திர மலையில் ஆகமங்களை உருவாக்கி அருளினான் (கீர்த்தி 9 - 10, 18 - 20) எனக் கூறுகிறார். அதுவும் சதாசிவ மூர்த்தியாக 'ஐம்முகங்களால் பணிந்து அருளியும்' (கீர்த்தி. 20) அமர்ந்து வெளிப்படுத்தினான் எனக் கூறுகிறார். சைவ ஆகமங்கள் சிவனால் உபதேசிக்கப்பட்டன என்று தொன்மக் கதை உருவாக இது அடிப்படை. பிற்காலத்தில் ஆகம நூற்கள் இதை விரிவாகப் பேசின. வரகுண பாண்டியருக்குச் சிவலோகம் காட்டியது, கருங்குருவிக்கு உபதேசித்தது, பன்றிக் குட்டிகளுக்குப் பால் கொடுத்தது ஆகிய திருவிளையாடற் புராணத் தொன்மங்கள் இடம்பெற்றுள்ளன. இவைகளில் பன்றிக் குட்டிக்கு பால் கொடுத்தது பலமுறை இடம் பெற்றுள்ளது. 'ஏகன் குருளைக்கு அருளினை' (போற்றி. 166) 'கேழல் ஆய் பால் கொடுத்த' (திருவார்த்தை. 6) என்பன சான்று. 'மனிதரை ஆட்கொண்ட வள்ளல்' எனப் பாடுபவர் அஃறிணை உயிர்களுக்குத் தாயினும் சாலப்பரிந்து தம் கருணையை வெளிப்படுத்தினான் என்பதை விளக்க இத்தொன்மத்தைப் பாடுகிறார். ஓரிடத்தில் மட்டும் உபமன்னியு முனிவரின் பிள்ளைகளுக்குப் பால் கொடுத்த தொன்மக் கதையைப் 'பாலகனார்க்கு அன்று பால் கடல் ஈந்திட்ட கோலச் சடையான்' (திருவுந்தியார் - 17) நுட்பமாகப் பதிவு செய்துள்ளார். இந்தத் தொன்மம் பரவலாக அறியப்படாத பதிவாகும்.

இராவணன் கயிலை மலையை எடுக்க முற்பட்டுத் துன்பப்பட்ட தொன்மத்தை, 'தேரை நிறுத்தி மலை எடுத்தான் சிரம் ஈர் ஐந்தும் இற்றவாறு' (திருவுந்தியார் - 19) என ஓரிடத்தில் மட்டும் பாடியுள்ளார். அப்பர், சம்பந்தரால் மிகுதியும் பாடப்பட்ட இத்தொன்மம் திருவாசகத்தில் அருகிய வழக்கமாக உள்ளது. மாறாக இராவணன் மனைவி மண்டோதரிக்கு ஈசன் அருளிய தொன்மக்கதை திருவாசகத்தில் இருமுறை இடம் பெற்றுள்ளது (குயில்பத்து -2,திருவார்த்தை-5) இதுவும் நுட்பமான பதிவு. மணிவாசகர் காலத்தில் இக்கதை பரவலாக வழங்கியிருக்கக் கூடும்.

சில தொன்மங்கள் அவர் காலத்தில் வழங்கிய வடிவில் பதிவாகி உள்ளன. பின்னர் அவை விரிவாகத் தலபுராணங்களில் முழுவடிவம் பெற்றன. மணிவாசகர் காலத்தில் வழங்கிய கதையின் மையம் கூடப் பிற்கால நூல்களில் மாற்றம் பெற்றது. 'ஐயாறு அதனில் சைவன் ஆகியும்' (கீர்த்தி. 85) என்ற திருவாசக வரி, பிற்காலத் திருவையாற்றுப் புராணத்தில் விரிந்த கதையானது , வேறு பொருளைப் பெற்றது. இறைவனும் இறைவியும் மீனவர் இலத்தில் தோன்றி ஈசன் வலைவீசி மீன்பிடித்த தொன்மைக் கதை இடம்பெறுகிறது. திருவிளையாடற்புராணம் இதை விரிவாகக் கூறுகிறது. வேறு பல இடங்களில், திருவாசகத்தில் ஈசனைப் பாண்டிப்பிரான், பாண்டியன், மீனவன் என்றெல்லாம் மணிவாசகர் பாடுகிறார். நெய்தல் நில மீனவர் இனக் குழு சார்ந்த பழைமையான தொன்மக் கதையைப் பாண்டியர் குலத்தோடு இணைத்துப் பதிவு செய்துள்ளதில் நுட்பம் உள்ளது. அது விரிந்த ஆய்விற்குரியது. இன்றும் மதுரைத் திருக்கோயிலில் முடிசூடும் நாளில் வேப்பம் பூமாலை அணிவிக்கும் சடங்கு நடைபெறுகிறது.

## முடிவுரை

மணிவாசகர் தம்முடைய அருளியல் அனுபவத்தை விளக்கத் தொன்மக் கதைகளைப் பல்வேறு நிலைகளில் ஆண்டுள்ளார். மையப் பொருளாக இறைவன் தம்மை ஆண்டு கொண்டு அருளிய மாப்பெருங்கருணையை நம்மையும் ஓர் பொருட்டாக்கி (அச்சோ. 10) - விளக்குகிறார். தொன்மக் கதைகள் வெவ்வேறு தளங்களில் பல்வேறு பொருள் நுட்பத்துடன் அவரால் ஆளப்பட்டுள்ளன. அவருக்குப் பின் வந்தோர் அவைகளைப் பல்வேறு வாசிப்புக்களுக்கு உட்படுத்தினர். எனினும் இறைவனைப் பற்றிய தொன்மம் புராணம் மீண்டும் மீண்டும் புதிய பொருளைத் தருவதாகத் திருவாசகம் அமைந்திருப்பது அறியத்தக்கது.

# திருவாசகச் சுவடிகள்

ஆ. தசரதன்

| | | |
|---|---|---|
| கருதுகோள் 1 | : | தேவாரச் சுவடிகள் தில்லையம்பலத்திலிருந்து மீட்டெடுக்கப்பட்டதைப் போல் திருவாசகச் சுவடிகள் மீட்கப்பட்டனவா? |
| கருதுகோள் 2 | : | தேவாரச் சுவடிகள் அனல்வாதம், புனல்வாதத்தில் பங்கேற்றதைப் போல் திருவாசகச் சுவடிகள் பங்கேற்றனவா? |
| கருதுகோள் 3 | : | தேவார முதலிகள் அமணர்களுடன் நேரிட்டதுபோல் மணிவாசகர் பௌத்தர்களுடன் நேரிட்டதன் வரலாற்றுப் பின்னணி என்ன? |
| கருதுகோள் 4 | : | தேவாரப் பாடல்கள் மூவர் முதலிகளின் கற்றுச்சொல்லிகளால் படியெடுக்கப்பெற்றது போல் திருவாசகச் சுவடிகளைப் படியெடுத்தது அழகிய திருச்சிற்றம்பலமுடையான் எனும் இறைவனா? |
| கருதுகோள் 5 | : | மதுரை சொக்கநாதர் கோயில் சன்னதியில் களவியல் நூலை யாத்த இறையனார் அதை வைத்துவிட்டுச் சென்ற கதையைப் போன்றதா, திருவாசகத்தைப் படியெடுத்துச் சிதம்பரக் கனகசபையில் வைத்துச் சென்ற அழகிய திருச்சிற்றம்பலமுடையான் கதையும்? |
| கருதுகோள் 6 | : | மணிவாசகர் - பௌத்தர் வாதத்தின்போது சோழ அரசன் முன்னிலை வகித்த வரலாறு உள்ளதால், அவனாலே திருவாசகம் வெளிப்படுத்தப் பெற்றதா? |
| கருதுகோள் 7 | : | திருவாசகச் சுவடிகள் கிடைத்த வரலாற்றுப் பின்னணிதான் என்ன? |

## 1 முதல் 7 வரையிலான கருதுகோள்களுக்கான விளக்கங்கள்

அரசனைச் சார்ந்த சுவடிகள் திருக்கோபுர நிலை அறைகளிலே பாதுகாக்கப் பெற்றுவந்தன. தேவாரச் சுவடிகள் தில்லையம்பலத் திருக்கோபுர நிலையறையிலிருந்ததை நம்பியாண்டார் நம்பி அறிந்திருந்தார். இவர் மூலமாகவே திருமுறை கண்ட சோழ மன்னன் தேவாரச் சுவடிகளை மீட்டெடுத்தான். தேவாரம் போன்றே மணிவாசகர் பாடிய பாடல்கள் அனைத்தும் கொண்ட திருவாசகச் சுவடிகள் தில்லையம்பலத்திலே வைக்கப் பெற்ற செய்தி கீழ்க்காணும் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

சிவனடியே சிந்தித்து, ஞானவாழ்வினராய் வாதவூரர், தில்லையில் வாழ்ந்துவரும் நாட்களில், ஒருநாள், அந்தணர் ஒருவர் அவரிடம் வந்து, தான் பாண்டிய நாட்டைச் சேர்ந்தவர் என்றும், சிவபெருமான் வாதவூரருக்காகச் செய்த அருட்செயல் எல்லோரும் அறிய அவர் புகழ் நாடெங்கும் பரவியுள்ளதென்றும், வியந்து கூறி, அவர் பல சமயங்களிலும் பாடியருளிய செய்யுள்களை முறையாகச் சொல்லும்படி வேண்டினார். வாதவூரரும், அந்தணரை அருகில் அமரச் செய்து பல சமயங்களில் பாடிய பாட்டுக்களை யெல்லாம் ஒரு முறையில் அமைத்துச் சொல்லியருள, அந்தணர் அன்புடனே எழுதி முடித்து, திருவாதவூரரின் பெருமையை யாவரும் அறியவேண்டி அவர் சொல்லத் தன் திருக்கையால் தான் எழுதிய நூலினை முனிவர்களும் விண்ணவர்களும் தொழும் அம்பலத்தின் வாயிற்படியில் வைத்து மறைந்தார். பின்னர், கோயிற் பூசை செய்யும் அந்தணர்

பூசைக்கு வரும்போது, வாயிற் படியில் ஒரு புத்தகம் இருக்கக் கண்டார். இது இங்கிருப்பது ஆண்டவனின் அருள்தான் என்றும், இதை மக்கள் யாவரும் அறியவேண்டும் என்றும் எண்ணி, சிற்சபையைவிட்டு விலகி, எல்லோரிடமும், 'கோயில் வாயிற்படியில் சுவடி ஒன்று இருக்கிறது' என்று சொல்ல, மக்கள், இது மிக ஆச்சரியம் என வியந்து ஓடோடி வந்து சூழ்ந்துகொண்டு அப்புத்தகத்தைப் பார்த்து, இது கடவுளால் சொல்லப்பட்ட சிவாகமமோ, அன்றித் தெய்வத் தமிழ் நூலோ எனப் பலவாறு நினைந்து, அது என்ன நூல் என்று அறியும் ஆவலுடையவர்களாய் இருந்தனர். பின்னர், அக்கூட்டத்தில் ஒருவர் முன்வந்து, அந் நூலுக்கு மலர் இட்டு வழிபட்டு மிகுந்த பக்தியுடன் அப்புத்தகத்தைப் பிரித்து, ஏடுகளைப் புரட்டி, முதலில் அகவல் நான்கையும், பின்னர் திருச்சதகம் முதலிய அறுநூறு பாடல்களையும், அகப்பொருட் கோவை நானூறு பாடல்களையும், படித்து முடிகின்ற இடத்தில், திருவாதவூரர் சொற்படித் திருச்சிற்றம்பலமுடையார் எனக் கையொப்பம் இருந்தது என்றும் தெரிவித்தார்.

(திருவாசகம் - முதற்பகுதி - மூலம், பதி. நீ. கந்தசாமிப்பிள்ளை
*அண்ணாமலைப் பல்கலைக்கழகம், 1964, பக். 48-49)*

இவ்வாறான கதைகள் வாதவூரரின் வரலாற்றினைக் கூறும் நூல்களிலிருந்து தொகுக்கப் பெற்றவையாகத் தெரிகின்றன. இந்தக் கதையை ஓலைச்சுவடியியல் பார்வையில் பார்க்கவேண்டும்.

## ஓலைச் சுவடியியல் பார்வையில்...

திருவாசகப் பாடல்கள் பெரும்பாலும் பாண்டிய நாட்டில் வாய்மொழியாகவும் உதிரிச் சுவடிகளிலும் புழங்கி வந்திருந்ததை அறிந்து, பாண்டிய நாட்டினரான திருச்சிற்றம்பலமுடையார் அவற்றைத் தொகுக்கும் முயற்சியில் பாடலாசிரியரான மணிவாசகரை அணுகி, திருவாசகப் பாடல்களைக் கேட்டுத் தொகுத்துத் தம் கைப்பட ஓலையில் எழுதி, இறுதியில் தம் கையெழுத்தையும் பதித்துள்ளார். தேவாரச் சுவடிகள் நம்பியாண்டார் நம்பியால் தொகுக்கப் பெற்றதற்கு முன்பாகவே திருவாசகப் பாடல்கள் தொகுக்கப்பட்டதை இதன் மூலம் அறிந்துகொள்ளலாம். திருமுறை கண்ட சோழ மன்னன் மேற்கொண்ட தேவாரப் பாடல்கள் தொகுப்பித்தலுக்கு முன்பே, மணிவாசகர் காலத்திலேயே திருவாசகப் பாடல்கள் தொகுக்கப்பெற்றுச் சுவடிகள் வடிவில் புழக்கத்தில் வந்து விட்டிருந்ததாகத் தெரிகிறது.

## அம்பலத்தாடிகள் மடம் தொடர்பான செய்திகள்

அறிஞர் மு. அருணாசலம் அவர்கள் புனல்வாதம் தொடர்பாகத் திருவாசகச் சுவடி பற்றிப் பின்வரும் கதையைத் தம் திருவாசகம் - ஆராய்ச்சிக் குறிப்புகள் என்ற நூலில் கீழ்வருமாறு எழுதியுள்ளார்.

ஆதியில் சிதம்பரத்திலிருந்து இப்போது புதுச்சேரியில் போயிருக்கும் அம்பலத்தாடி மடத்தார் இது பற்றி ஒரு கதை சொல்வார்கள். திருவாசகச் சுவடியைத் தங்களிடமே அளிக்க வேண்டும் என்று தில்லையிலுள்ளோர் கேட்க, தில்லைவாழ் அந்தணர் அது தங்களுக்கே உரியதென்று சொல்லி, யாரிடமும் தர மறுத்தனர். ஓர் அசரீரி வாக்கு, சுவடியைச் சிவகங்கையில் விட்டால் யார் கரத்தில் வருகிறதோ அவருக்கே அது உரியதென்று சொல்லிற்று. அங்ஙனமே செய்ய, நடராஜப் பெருமானே ஒரு சங்கமராய்த் தோன்றினார். சுவடி அவர் கரத்தில் வந்தது. அதுமுதல் அச்சங்கமர் மரபாரே ஆதித் திருவாசகச் சுவடியை வைத்துப் பூசிக்கும் பேறு பெற்றனர் என்று

அவர்கள் கூறுகிறார்கள். அம்பலத்தே ஆடுபவர் சங்கமராய் வந்து மடம் ஏற்படுத்தியமையால் அம்மடம் அம்பலத்தாடி மடம் என்று பெயர் பெற்றதென்று சொல்வர். சிதம்பரத்தில் அம்பலத்தாடி மடத்துத்தெரு என்ற பெயரில் ஒரு தெரு இன்றும் இருக்கிறது. தாங்களே அவர் மரபினர் என்றும் ஆதித் திருவாசகச்சுவடி இன்றும் தங்களிடம் இருக்கிறதென்றும் அதை யாரும் பிரித்துப் பார்ப்பதில்லை என்றும் அம்மடத்தார் கூறுவார்கள். இக்கதையை உண்மை என்று கொண்டாலும் கூட, தொடாமல் ஆயிரம் வருஷத்துக்கு மேலானபின் ஒரு சுவடி எந்த நிலையில் இருக்குமென்பதைச் சுவடிப் பயிற்சியுடையார் நன்கு அறிவர்.

(மு. அருணாசலம், *திருவாசகம்: ஆராய்ச்சிக் குறிப்புகள்,* *சைவ சித்தாந்த மகாசமாஜ அறுபதாண்டு நிறைவு விழா மலர்,* *சிதம்பரம், 1965, ப. 154)*

திருவாசக மூல ஓலைச்சுவடி பற்றிய கதை ஒருபுறமிருக்கட்டும். மூலச் சுவடியை அம்பலத்தாடி மடத்தார் முடக்கி வைத்திருந்தால், திருவாசகப் பாடல்கள் தமிழ்நாடெங்கும் எப்படிப் பரவியிருக்கமுடியும்? என்ற வினாவும் எழுகின்றது. எனவே, அம்பலத்தாடி மடத்தார் தொடர்பான கதை உண்மையன்று எனத் தெரிகிறது.

## பௌத்தருடன் வாதம்

திருவாசகப் பாடல்கள் தொகுப்பதற்கு முன்பே ஈழநாட்டுப் புத்தர்களுடன் அக்காலத்திய சோழ மன்னன் முன்னிலையில் மணிவாசகர் வாதிட்டு வென்று சைவத்தை நிலைநாட்டினார். அக்கால கட்டத்தில் ஒட்டுமொத்தத் தொகுப்பாகிய திருவாசகச் சுவடிகள் புழக்கத்தில் இல்லாததால் அனல் வாதம், புனல்வாதத்திற்குத் தேவையில்லாமல் போயிற்று.

தேவார முதலிகள் அமணர்களுடனே பெரும்பாலும் வாதம் செய்து வென்று சைவத்தை நிலைநாட்டினர். தமிழகத்தில் அமணர்களின் ஆதிக்கம் போல் ஈழத்தில் பௌத்தர்களின் ஆதிக்கம் இருந்துள்ளது. சைவர் ஒருவர் ஈழநாடு சென்று சைவத் தொண்டாற்றியதாகவும், அதனால் வெறுப்புண்ட பௌத்தர்கள் அந்நாட்டுப் பௌத்த அரசனுடன் தில்லையில் மணிவாசகரிடம் வாதிட வந்ததாகவும் வரலாறுள்ளது. அக்காலக்கட்டத்தில் பிற்காலச் சோழ அரசனின் ஆட்சி ஈழத்திலும் ஏற்பட்டிருந்ததால், ஈழ அரசன் தில்லை வந்து சோழனுக்குத் திறை செலுத்தினான் என்றும் தெரிய வருகிறது.

## ஆதித்த சோழனும் நம்பியாண்டார் நம்பியும்

கற்றுச்சொல்லிகள் என்போர் அவர்தம் குருவுடனே இருப்பவர்கள். தேவாரப் பாடல்கள் பாடப்பெற்றபோதே கற்றுச்சொல்லிகளால் ஏட்டில் எழுதி வைக்கப்பெற்றவை. அவற்றையே நம்பியாண்டார்நம்பி தொகுத்தார். இவர் ஆதித்தசோழனின் ஆட்சியின் இறுதிக் காலத்தில் சோழநாட்டில் வாழ்ந்தவர் எனச் சதாசிவ பண்டாரத்தார் குறிப்பிடுகின்றார். ஆதித்த சோழன் சோழநாட்டில் பல சிவாலயங்களைக் கற்றளிகளாகக் கட்டியவன். சைவப் பற்றாளன். தில்லைச் சிற்றம்பல முகட்டைப் பொன் வேய்ந்தவன். இதனையே நம்பியாண்டார் நம்பி தம் திருத்தொண்டர் திருவந்தாதியில் (பா. 50, 65, 82) பாடியுள்ளார்.

*புலமன் னியமன்னைச் சிங்கள நாடு பொடி படுத்த*
*குலமன் னிய புகழ்க் கோகன நாதன் குல முதலோன்*
*சிங்கத் துருவனைச் செற்றவன் சிற்றம் பலமுகடு*

கொங்கிற் கனகமணிந்த ஆதித்தன் குலமுத லோன்
செம்பொன் அணிந்துசிற் றம்பலத் தைச்சிவலோக மெய்தி
நம்பன் கழற்கீழ் இருந்தோன் குலமுதல் என்பர் எனப் பாடியுள்ளார்.

திருத்தொண்டர் திருவந்தாதியின் 50ஆம் பாடலடிகளிலிருந்து ஈழநாட்டையும் ஆதித்த சோழன் வென்றான் எனத் தெரியவருகின்றது. எனவே சைவப் பற்றாளனாகிய ஆதித்த சோழன் காலத்திலேயே ஈழத்துப் பௌத்தர்களுடன் மணிவாசகர் வாதிட்டார் என அறிந்து கொள்ளலாம். ஆதித்த சோழனின் மகனான பராந்தகச் சோழன் ஈழத்தை வென்றவனே என வரலாறு கூறுகின்றது.

## திருவாசகச் சுவடிகள் தொகுத்தலும் பரவலும்

இந்த வரலாற்றுப் பின்னணியிலிருந்து நம்பியாண்டார் நம்பி தேவாரத்தைத் தொகுக்குமுன்பே திருச்சிற்றம்பலமுடையான் என்பவர் திருவாசகத்தைத் தொகுத்துப் படியெடுத்து முடித்திருந்தார் எனத் தெரிகிறது. நம்பியாண்டார் நம்பி மிக நீண்ட வாழ்நாள் வாழ்ந்துள்ளார். சோழ மன்னர்கள் பலரின் கீழிருந்தவர் ஆவார்.

பெயர் ஒற்றுமை கருதியே திருச்சிற்றம்பலமுடையான் எனும் அந்தணரைத் தில்லைச் சிவன் என்கின்றனர். அதன் காரணமாகவே திருவாசகத்தைத் தொகுத்தவர் தில்லை இறைவன் என்கின்றனர். இறையனார் களவியல் எழுதியவரையும் மதுரை இறைவனாகவே கருதிவிட்ட நிகழ்வோடு இதைப் பொருத்திப் பார்க்கலாம்.

'அம்பலத்தாடி' என்பதற்குச் சிவபிரான் என்பதும் பொருள். தில்லையம்பலத்தில் ஆடுவோரில் ஒருவர் என்றும் பொருள் கூறலாம். வீரசைவரில் ஒரு கூட்டத்தாரே அம்பலத்தாடிகள் ஆவர் என அபிதான சிந்தாமணி கூறுகின்றது.

திருவாசகம் ஆதித்த சோழனால் வெளிப்படுத்தப்பட்டது என்பதற்கான சான்றுகள் இல்லையாதலால், அதன் பாடல்கள் சோழநாட்டு மக்களாலும் பாண்டிய நாட்டு மக்களாலுமே பரவலாக்கப்பட்டிருக்கலாம் எனக் கருத இடமுண்டு. திருவாசகத்தில் பெண்களை முன்னிலைப்படுத்தும் சடங்குப் பாடல்கள் இடம்பெறுவதால், இப்பாடல்கள் பெண்களாலும் பரவலாக்கம் செய்யப்பட்டிருக்கலாம் எனத் தெரிகிறது.

## மாணிக்கவாசகர் காலத்துத் தமிழ்

திருவாதவூரர் வரலாறு பாண்டிய நாட்டில் தொடங்கிச் சோழ நாட்டில் நிறைவடைந்துள்ளது. அதைப் போன்றே திருவாசகப் பாடல்களும் பாண்டிய நாட்டில் உதிரியாகப் பரவலாக்கம் பெற்றுச் சோழநாட்டில் முழுமையடைந்து, மூவேந்தர்களுக்குப்பின் எழுச்சியடைந்த பாண்டியன் தொடக்கமான முதலாம் பாண்டியப் பேரரசர்கள் கி. பி. 6 முதல் 9 ஆம் நூற்றாண்டு வரை ஆட்சி செய்த காலக் கட்டத்தில் வழக்கிலிருந்து தொடர்பற்றுப்போன தமிழ் அக இலக்கண, இலக்கியங்கள் போன்றவற்றை மீட்டெடுக்க முயன்றனர்.

சங்ககாலத் தமிழர் பண்பாடுகளையும் பழக்க வழக்கங்களையும் மீட்டெடுத்தும், புத்துயிரூட்டியும், புதியதாக வரலாற்று ஆவணங்களையும் பாண்டியர் வெளியிட்டனர். அவர்களில் சிலர் சமணராயிருந்து சைவர்களாக மாறியபின் சைவ சமய எழுச்சிக்கு வித்திட்டனர். சைவ வழிபாட்டிடங்களையும் உருவாக்கினர். வைகை ஆற்றில் நீர் விளையாட்டுகள், திருப்பரங்குன்றில் முருகன் வழிபாட்டு முறைகள், திருமாலிருஞ்சோலையில் திருமால் வழிபாடுகள் போன்றவை

ஏற்பட்டன. பழந்தமிழ் மக்களில், குறிப்பாகப் பெண்களின் விளையாட்டுகள், நீராடல்கள், பண்பாட்டுப் பழக்கங்கள் போன்றவை புத்துயிர் பெற்றன. பாண்டிய நாட்டில் ஏற்பட்ட இவை போன்றவற்றையே தொடக்கத்தில் மாணிக்கவாசகரும் தம் பாடல்களில் புனைந்துள்ளார்.

## திருவாசகப் பாடல்களில் சிற்றிலக்கியங்கள்

பிற்காலச் சோழர்களின் ஆட்சி சோழ மண்ணில் ஏற்பட்ட பின்பு, இவை போன்ற புத்தாக்கங்கள் சோழ நாட்டிலும் ஏற்பட்டன. மணிவாசகர் சோழ நாட்டில் குடியேறியபோதும் இவற்றையே பாடினார். திருக்கோவையும் இவ்வாறு புத்தாக்கம் செய்யப்பெற்ற நூலே. பாண்டிய நாட்டிலும் சோழ நாட்டிலும் பெண்களிடம் சைவசமயக் கருத்துகளைப் பரவச் செய்த பெருமை மணிவாசகரையே சாரும்.

அண்ணாமலைப் பல்கலைக்கழக வெளியீடான சைவ இலக்கிய வரலாறு (கி.பி. 7 முதல் 10ஆம் நூற்றாண்டு வரை, 1958) என்ற நூலில் ஔவை துரைசாமிபிள்ளை கீழ்க் காணுமாறு எழுதியுள்ளார் (பக். 358, 360).

*திருவாதவூரடிகள் பாடியருளிய திருவாசகத்தில் பாவையாடல், அம்மானையாடுதல், பொற்சுண்ணம் இடித்தல், தெள்ளேணம் கொட்டுதல், சாழல், இயம்பல், பூவல்லி கொய்தல், உந்தீபறத்தல், தோணோக்கமாடல், பொன்னூசலாடல் முதலிய பல விளையாட்டுக்கள் பொருளாகப் பதிகங்கள் பாடப்பெற்றுள்ளன.*

*இவற்றுள், பாவையாடல் சங்க காலத்தில் இருந்ததொரு நிகழ்ச்சி. மகளிர் நீராடுங்கால் பைஞ்சாய்க் கோரையைக் கொண்டு பாவையொன்று செய்து பூச்சூடி ஒப்பனை செய்து நீர்த்துறை மணலில் வைத்து நீரில் இறங்கி விளையாடுவர். இது பொதுவாக நிகழ்வது.*

*... திருவாதவூரர் பாடிய திருவெம்பாவையில் முதல் எட்டுப் பாட்டுக்களில் இளமகளிர் விடியற்கு முன்னர் எழுந்து ஒருவரை யொருவர் எழுப்பி நீராடற்கு அழைக்கும் கருத்தும், ஒரு பாட்டில் மழையைப் பொழியுமாறு வேண்டும் கருத்தும், இறுதிப் பாட்டில் இந் நீராட்டு மார்கழி நீராட்டு என்னும் கருத்தும் எஞ்சியவற்றில் இறைவன் புகழ் எடுத்துப் பாடும் கருத்தும் உள்ளன. இத்திருவெம்பாவையின் கருத்து வகுத்த பண்டை நாளைச் சான்றோர் ஒருவர், இது "சத்தியை வியந்தது' என்று குறித்துள்ளார்.*

*இப்பாவைப் பாட்டின் நலத்தில் ஈடுபட்டு இன்பம் துய்த்த பண்டைத் தமிழ்ச் சான்றோர்களும் வேந்தர்களும் தமிழ்நாட்டிலுள்ள சிவன் கோயில்கள் தோறும் மார்கழித் திங்களில் திருவாதிரை நாளில் திருவாதவூரடிகட்குத் திருவிழா எடுத்து, அப்போது அவர் திருமுன்னர் இத்திருவெம்பாவையை ஓதுதல் வேண்டும் என நிவந்தங்கள் ஏற்படுத்தினர்.*

## திருவாசகப் பாடல்கள் பரவுவதற்கு மானியங்கள் ஏற்படல்

திருவாதவூரடிகள் பாடிய திருவெம்பாவை ஓதுதலுக்குச் சோழப் பெருவேந்தரும் பிற்காலப் பாண்டியப் பேரரசர்களும் மானியங்களை ஏற்படுத்தியுள்ளனர். திருவாசகப் பாடல்கள் சைவத் திருக்கோயில்களில் மணிவாசகர் திருமுன்போ , அவர் தொடர்பான விழாக்களிலோ ஓதுவதற்கு ஏற்பாடு செய்யப்பெற்றதைக் குறித்த கல்வெட்டுகள் கிடைத்துள்ளன. கி.பி. 12ஆம் நூற்றாண்டில் சோழநாட்டுத் திருக்கோயிலில் திருவாதிரைத் திருவிழாவில் திருவெம்பாவை ஓத வீரராசேந்திர சோழன் மானியம் அளித்த செய்தி கல்வெட்டில் (ARE 1926-27). பதிவாகியுள்ளது. இதே விழா,

இதே நூற்றாண்டில் இரண்டாம் இராசாதிராசனால் சோழநாட்டு வழுவூர் வீரட்டேசுரர் திருக்கோயிலில் நடைபெற ஏற்பாடு செய்யப் பெற்றுள்ளது (ARE 421 OF 1912). விக்கிரம சோழன் காலத்தில் திருவாசகத் திருச்சாழலை எலவானாசூரில் ஓதுவதற்கு மானியம் அளிக்கப் பெற்றுள்ளது (ARE 1907).

பிற்காலச் சோழர்கள் கடல்கடந்து கீழை நாடுகளுக்குப் போர் மற்றும் வணிகத் தொடர்புகள் மேற்கொண்ட காலத்தில் திருவாசகப் பாக்கள் கடாரம், சாவகம், சயாம் போன்ற நாடுகளில் பரவின. அந்நாடுகளில் உள்ள அரசர்களின் முடிசூட்டு விழாவில் திருவாசகப் பாக்கள் ஓதப் பெற்றதற்கான பதிவுகள் ஏராளம் உள்ளன.

முதலாம் மாறவர்மன் சுந்தரபாண்டியனின் படைத்தலைவன் அவனிநாராயண பல்லவராயன் என்பவன் கி.பி. 13ஆம் நூற்றாண்டில் தென்பாண்டி நாட்டு நாங்குனேரியில் உள்ள சைவத் திருக்கோயிலில் திருவாசகப் பாடல்கள் ஓதுவதற்கு ஏற்பாடு செய்துள்ளான்.

கி.பி. 14ஆம் நூற்றாண்டில் விசயநகரத்து இரண்டாம் அரிகரதேவ மகாராயர் தொண்டை நாட்டுத் திருவொற்றியூரில் திருவெம்பாவை ஓதுவதில் ஏற்பட்ட போட்டிகளில் சமரசம் செய்து வைத்துள்ளார். இவ்வாறு திருவாசகப் பாக்கள் தமிழ்நாடெங்கிலும் கடல் கடந்தும் பரவியதை அறிந்துகொள்ளலாம்.

## திருவாசகச் சுவடிகளும் திருவாதவூரர் திருவுருவும்

தமிழ்நாட்டில் அமைந்துள்ள பல சைவத் திருத்தலங்களில் மாணிக்கவாசகரின் திருஉருவங்கள் கி.பி. 11ஆம் நூற்றாண்டு முதல் நிறுவப் பெற்றுள்ள செய்திகள் கல்வெட்டுச் சான்றுகள் மூலம் தெரியவருகின்றன. திருவொற்றியூர் (11 ஆம் நூற்றாண்டு), எலவானாசூர் (கி.பி. 1135), திருவலஞ்சுழி (கி.பி.1158), வழுவூர் (கி.பி. 1170), திருக்கழுக்குன்றம் (கி.பி.1181), மருதாநல்லூர் (கி.பி.1220), திருவீழிமிழலை (கி. பி. 1229), திருவாதவூர் (கி.பி. 1231), சன்னவன்னம் (கி.பி.1306), சிவகங்கைத் திருமலை, திருவரத்துறை, புதுக்கோட்டைப் பகுதி பூவாலைக்குடி, கோவிலூர், விராலி மலை போன்ற ஊர்களில் உள்ள சைவத் திருக்கோயில்களிலும் மாணிக்கவாசகருடைய திருவுருவச்சிலைகள் நிறுவப்பெற்றுள்ளன.

ஈழநாட்டுக் கொழும்பில் உள்ள பொருட்காட்சிச் சாலையில் திருவாதவூரடிகளின் திருவுருவம் இடக்கையில் ஓலைச் சுவடியொன்றைப் பற்றிக்கொண்டிருக்கும் வகையில் அமைந்துள்ளது. அச்சுவடியின் மேல் 'நமச்சிவாய' என்பது பொறிக்கப்பட்டுள்ளது. தஞ்சை மாவட்டத்து மதுக்கூரில் காணப்பட்டுச் சென்னைப் பொருட்காட்சிச்சாலைக்குக் கொணரப்பட்ட திருவாதவூரரின் திருவுருவம் ஒன்று இடக்கையில் ஓலைச்சுவடியின் மேல் ஓம் திருவளர் தாமரை சீ..... என்ற குறிப்பு பொறிக்கப்பட்டுள்ளது என்று கூறி இவையிரண்டும் கி.பி பதினொன்று பன்னிரண்டாம் நூற்றாண்டினவாகலாமென்றும் கூறுகின்றார்.

இவ்வாறான செய்திகளை ஔவை துரைசாமி பிள்ளை அவர்கள் தம் நூலான சைவ இலக்கிய வரலாறு (1958) – மாணிக்கவாசகர் என்ற பகுதியில் வழங்கியுள்ளார்.

## திருமுறை ஏடுகள் புதுப்பிக்கப்பெறுதல்

பிற்காலச் சோழர்கள் ஆட்சியில் குறிப்பாக மூன்றாம் இராசராச சோழனின் 28ஆம் ஆட்சி ஆண்டில் (கி.பி 13ஆம் நூற்றாண்டு) தஞ்சாவூர்ப் பகுதியைச் சேர்ந்த முன்னியூர்

அகஸ்தீஸ்வரர் ஆலயத்தில் இடம் பெற்றுள்ள கல்வெட்டில் சீர்காழியில் இருந்த திருமுறைத் தேவாரச் செல்வர் மடத்துக்கு ஊரார் நிலதானம் அளித்த செய்தி இடம்பெற்றுள்ளது. இந்த மடத்திலிருந்தவர்கள் கோயில்களில் பூசை செய்வதற்காகத் திருவாசகம் உள்ளிட்ட திருமுறைகளைப் பயில்வதும், திருமுறை ஏடுகளைப் புதுப்பித்துப் போற்றவும் பழக்கமாகக் கொண்டிருந்தார்கள் எனத் தெரிய வருகிறது. இவ்வாறாக மன்னர்களும் மக்களும் மடங்களும் திருமுறை ஏடுகளைப் பேணியதால் அவை அழியாமல் இன்றளவும் கிடைத்து வருகின்றது.

## வாய்மொழியாகவும் படியெடுக்கப்பெற்றும் பரவிய திருவாசகப் பாக்கள்

ஓலைச்சுவடிகள் புதுப்பித்தலுக்கும் பரவுதலுக்கும் பிற்காலச் சோழர் மற்றும் பிற்கால பாண்டிய பேரரசர்கள் காலம் வரை கிடைத்து வந்த உதவிகள் பிற்காலத்தில் அந்நியர் ஆட்சியாலும் அடிக்கடி நேர்ந்த ஆட்சி மாற்றங்களாலும் போர்களாலும் நின்று போயின. ஆயினும் தமிழ் மக்களின் பொரும்பாலோர் சைவத்தைப் போற்றி வந்ததாலும் சைவத் திருமுறைகள் ஓதுவதற்கும் கேட்டலுக்கும் தொடர்பு எளிதாகவும் இனிமையாகவும் இருந்ததாலும் அவை தொடர்ந்து வாய்மொழியாக வந்து வழக்கொழியாமலிருந்து ஏட்டிலும் இடம்பெற்றன. இதனாலேயே திருவாசகத்திற்கு உருகார் ஒரு வாசகத்திற்கும் உருகார் என்ற பாராட்டுரை ஏற்பட்டது.

"பல்லாயிரம் தமிழ் மக்கள் தலங்கள் தோறும் அடங்கன் முறைகளையும், திருவாசகத்தையும் ஓதி வந்தார்கள். மிகுந்த பக்தியோடு நெஞ்சார மனமுருகி ஓதினார்கள். ஓதியவர்கள் எல்லோரும் இலக்கண அறிவு படைத்தவர்கள் அல்லர். இவர்கள் சில சமயம் திருமுறைகளைப் பூசையில் வைத்து மலர்களால் அர்ச்சித்து வழிபட முற்பட்ட போது ஆதியில் கிடைத்த திருமுறைகளின் ஏட்டுப் பிரதிகள் பல மடங்கு பெருகலாயின. இவை இரண்டு விதத்தில் பெருகின. மூலப்பிரதியைப் பார்த்துப் பெயர்த்து எழுதிக்கொண்டே போனபோது பலப்பல புதுப் பிரதிகள் உண்டாயின. இவை ஒரு வகை. மற்றொன்று திருவாசகம் முழுமையும் மனப்பாடம் செய்து வைத்திருந்தவர்கள் தங்கள் ஞாபகத்திலிருந்து ஏட்டில் எழுதி வைத்ததனால் உண்டான பிரதிகள். இந்த இரண்டு வகையிலும் எழுந்த பிரதிகளே இன்று தமிழ் நாட்டில் வழங்கும் பிரதிகள் யாவும்" என மு.அருணாசலம் மேற்சுட்டிய நூலில் (பக்.164 – 165) எழுதியுள்ளார். மேலும் அவர்,

"எப்படியோ திருவாசகச் சுவடிகள் பல்கின. ஆதி ஏட்டைப் பார்த்துச் சிலர் எழுதிக்கொள்ள, எழுதிய ஒவ்வொன்றும் ஒன்று பத்து நூறு ஆயிரமாகப் பெருகிற்று. சோழநாட்டில் சென்ற தலைமுறையில் திருவாசகச் சுவடியைப் பூசையில் வைத்துப் பூசித்திராத சைவர் வீடே இல்லை. எல்லோருமே பிரித்துப் படித்தார்களா என்பது வேறு விஷயம். எனினும் மார்கழி மாதத்தில் மட்டும் திருவெம்பாவை திருப்பள்ளியெழுச்சி என்ற இரு பதிகங்களையும் அதிகாலையில் எழுந்து நீராடி படிப்பதென்னும் ஒழுக்கம் சைவர் வீடுகளில் பெருவழக்காயிருந்து வந்தது" என்கிறார்.

(மு.அருணாசலம், மேற்சுட்டிய நூல் பக். 154 – 155)

## திருவாசகம் பதிப்பித்து அச்சிடுதலுக்கான சூழல்

அச்சு இயந்திரங்களைப் பயன்படுத்தி சுதேசிகளும் நூல்கள் வெளியிடலாம் எனும் நிலை ஏற்பட்ட போது ஏராளமான தமிழ் நூல்கள் அச்சில் வெளியாகத் தொடங்கின. திருவாசகம் முதன்முதலாகக் கி.பி 1837 இல் அச்சில் வெளியாயிற்று.

இவ்வாறு பெருகிய ஏடுகளைத் தொகுத்து ஆராய்ந்து முதல்முதலாகத் திருவாசகத்தை அச்சிடும் வேலை சென்ற நூற்றாண்டின் தொடக்கத்தில் நடைபெற்றது. தஞ்சையில் இருந்த கலாரசிகனான சரபோஜி மன்னன் தன்னிடம் தமிழ்ப் புலவராயிருந்த கொட்டையூர் சிவக்கொழுந்து தேசிகரிடம் இவ்வச்சு வேலையை ஒப்புவித்தான். அவரே முதல் திருவாசகப் பதிப்பை 1837 இல் வெளியிட்டதாகச் சொல்லுவர். இவ்வச்சுப்பிரதி கிடைக்கவில்லை. அதை யாரும் பார்த்ததில்லை. அதற்கிணங்க அச்சிட்ட பல பதிப்புகள் கிடைக்கின்றன. ஆனால் இவை யாவும் மூல ஏட்டைத் தேடிப் பார்க்காமல் தேசிகருடைய பாடத்தை அப்படியே அச்சிட்டுக் கொண்ட பதிப்புக்கள் ஆகும். அவ்வாறு அச்சிட்ட திருவாசக நூல்கள் வருமாறு:

| | |
|---|---|
| தேசிகர் பதிப்புக்கு இணங்க இராமசாமி முதலியார் பதிப்பு | 1845 |
| சதாசிவப்பிள்ளை பதிப்பு | 1859 |
| காஞ்சீபுரம் சபாபதி முதலியார் பதிப்பு | 1864 |
| சிவக்கொழுந்து தேசிகர், சரவணப் பெருமாளையர் பதிப்புக்களுக்கு இணங்க அனந்தய்யர் பதிப்பு | 1868 |
| சண்முக முதலியார் பதிப்பு | 1870 |
| சிங்காரவேலு முதலியார் பதிப்பு | 1892 |
| ஊ.புஷ்பரதச் செட்டியார் பதிப்பு | 1897 |
| வாசுதேவ முதலியார் (சில பண்டிதர்கள் உரையுடன்) பதிப்பு | 1897 |
| இராமசாமி முதலியார் உரையுடன் பதிப்பு | 1897 |
| போப்பையர் ஆங்கில மொழிபெயர்ப்புடன் பதிப்பு | 1900 |
| முருகேச முதலியார் உரையுடன் | 1907 |
| பொன்னம்பலம் பிள்ளை பதிப்பு (11 ஆவது பதிப்பு) | 1913 |
| கதிரைவேல் பிள்ளை பதிப்பு | 1915 |
| லாங்க்மன்ஸ் பதிப்பு | 1916 |
| அருணகிரி முதலியார்இரண்டாவது பதிப்பு | 1927 |
| மு.சுப்பிரமணிய முதலியார் பதிப்பு | 1929 |
| சுந்தர மாணிக்க யோகீசுவரர் உரைப் பதிப்பு | 1929 |
| கா.சுப்பிரமணியபிள்ளை உரைப் பதிப்பு | 1933 |
| பாகனேரிப் பதிப்பு | 1937 |
| சைவசித்தாந்த மகாசமாஜப் பதிப்பு | 1938 |
| மா.வே.நெல்லையப்ப பிள்ளை (திருவாசக அருள்முறைத் திரட்டு) | 1943 |
| பண்டிதமணி மு.கதிரேசன் செட்டியார் கதிர்மணி விளக்கம் | 1947 – 1953 |
| மறைமலை அடிகள் (நான்கு அகவல்கள் உரை) இரண்டாம் பதிப்பு | 1948 |
| தருமபுரி ஆதீனப் பதிப்பு | 1949 |
| திருப்பனந்தாள் காசி மடம் வெளியீடு | 1950 |
| க.சு.நவநீத கிருஷ்ண பாரதியார் (ஆராய்ச்சிப் பேருரை) | 1954 |
| திருவாசக வியாக்கியானம் : காழித்தாண்டவராயர் | 1954 |

தலைப்பு இல்லாத ஒரு நல்ல பழைய பதிப்பு அம்பலத்தாடி மடம் சுவாமிகள் கைச்சுவடி (பதிப்பு விவரம் இல்லாதது) மர்ரே எஸ். ராஜம் பதிப்பிற்குப் பயன்பட்ட சுவடிகள். இறுதியாக அமையும் அம்பலத்தாடி மடத்துக் கைச்சுவடியைக் காணும்போது, இம்மடத்தில் திருவாசக மூலச் சுவடி இருப்பதாகக் கூறுவது ஐயத்திற்கு இடமளிக்கிறது. சிவக்கொழுந்து தேசிகர் பதிப்புக்குப்

பிறகு முதன்முதலாக ஏடுகளைப் பார்த்து மூலத்தைச் செப்பம் செய்து வெளியிட்ட பதிப்பு, மர்ரே கம்பெனியார் வெளியிட்ட 1956ஆம் ஆண்டுப் பதிப்பு என மு. அருணாசலம் குறிப்பிடுகின்றார்.

| | |
|---|---|
| ஓரியண்டல் நூல் நிலையம் | *25* |
| டாக்டர் உ.வே. சாமிநாதையர் நூல் நிலையம் | *12* |
| தஞ்சைச் சரஸ்வதி மகால் | *10* |
| மு. அருணாசலம் | *5* |
| மதுரைத் தமிழ்ச் சங்கம் | *4* |
| திருவனந்தபுரம் தொன்னூல் நிலையம் | *2* |
| கும்பகோணம் குமாரசுவாமிச் செட்டியார் அவர்கள் | *2* |
| அடையாறு நூல் நிலையம் | *1* |
| செங்கல்வராய முதலியார் அவர்கள் | *1* |
| தெ. பொ. மீனாட்சி சுந்தரம்பிள்ளை அவர்கள் | *1* |
| புதுவை. குஞ்சிதபாத முதலியார் அவர்கள் | *1* |
| சிதம்பரம் வேங்கடேச தீட்சிதர் அவர்கள் | *1* |
| ஆடூர் சு. கணபதிப்பிள்ளை அவர்கள் | *1* |

பல ஏட்டுச் சுவடிகளையும் ஒப்புற சுவடிகளையும் ஒப்புநோக்கி, பதிப்பு முறைக்கேற்ப அளவைகளுடனும் முறைகளுடனும் ஆராய்ந்து பதிப்பித்தார். சில பொருத்தமான பாடங்கள் கிடைக்கக் கூடும் என்ற நம்பிக்கையால் பல இடங்களிலிருந்தும் கிடைத்த அறுபத்தேழு ஓலைச்சுவடிகளை ஆராய்ந்து, பாட ரூப பேதங்கள் தொகுக்கப்பட்டன.

(திருவாசகம் - பதிப்பாசிரியக் குழுவினர், மர்ரே எஸ். ராஜம், *1956*, பதிப்புரை, ப.ஸ்)

முதல்முதலாகப் பதிப்பித்தவர் ஓர் ஏட்டை அல்லது சில ஏடுகளைப் பார்த்தே பிரதி செய்து அச்சிட்டார். சில ஏடுகளை அவர் பார்த்திருக்கக் கூடும். பார்த்த ஏட்டில் பிழைகள் இருந்திருக்கக்கூடும். ஏட்டைப் படிப்பதில் பிழை நேரும், படிப்பதில், பார்த்து எழுதியதில் பிழை இருக்கும். காலம், சென்ற நூற்றாண்டின் முற்பகுதி என்பதை மறக்கக்கூடாது. அதன்பின் யாரும் ஏட்டைப் பார்த்து அதற்கு இயையத் திருவாசகப் பாடத்தைக் கொண்டதில்லை . நூறு வருஷத்துக்கு மேலாகி (1837-1956) மர்ரே கம்பெனி - கந்தசாமிப் பிள்ளையவர்களின் பதிப்புக்களில் மட்டுமே ஏடுகள் பயன்படுத்தப் பெற்றிருக்கின்றன.

(மு. அருணாசலம், மேற்சுட்டிய நூல், ப. *157* அண்ணாமலைப் பல்கலைக்கழகப் பதிப்பு)

இதுவரை வெளிவந்துள்ள அச்சுப் புத்தகங்களையும், தமிழகத்தின் பல வேறுபட்ட இடங்களில் கிடைத்த நூற்றுக்கு மேற்பட்ட ஓலைச் சுவடிகளையும் ஒப்புநோக்கி, உண்மைப்பாடம் காணும் கட்டளைகளைப் பின்பற்றித் தெளிந்த பாடல்களே இப்பதிப்பில் தரப்பெற்றுள்ளன. ஒப்பு நோக்கிய அச்சுப்புத்தகங்கள், சுவடிகள் முதலியவற்றின் விவரங்களும், பாடம் கண்ட முறையும், பல பாடவேறுபாடுகளும், தெளிவாக இந் நூல் இரண்டாம் பகுதியில் தரப்பெறும்.

(திருவாசகம் - மூலம் - முதற்பகுதி, அண்ணாமலைப் பல்கலைக்கழகம். *1964*, பதி. நீ. கந்தசாமி பிள்ளை . தஞ்சாவூர். ப. 9)

பல ஆண்டுகளாகத் திருவாசகப் பாடங்களைத் திட்டம் செய்வதற்கு எனக்குப் பல ஓலைச்சுவடிகளை வரவழைத்துக் கொடுத்து உதவிவரும் திரு. எஸ். இராஜம் ஐயங்கார்

அவர்களுக்கும், பல ஏட்டுச் சுவடிகளில் உள்ள வேறுபாடுகளைக் குறித்துக் கொடுத்து உதவும் தமிழ்ப் பேரறிஞர்கள் திரு. வெள்ளை வாரண முதலியார், திரு. சிவப்பிரகாச தேசிகர், திரு. டி. கே. இராமானுஜம் ஐயங்கார் சுவாமிகள் முதலிய அன்பர்களுக்கும் பல வழிகளில் எனக்குத் துணை செய்யும் திருச்சிற்றம்பலம் பேராசிரியர் மு.அருணாசலம் பிள்ளை அவர்களுக்கும் என் உளமார்ந்த நன்றியைத் தெரிவிக்கும் கடமையுடையேன்.

(திருவாசகம் - மூலம் - முதற்பகுதி, அண்ணாமலைப் பல்கலைக்கழகம், 1964, பதி நீ.கந்தசாமிபிள்ளை, தஞ்சாவூர், பக். 9 – 10)

## தற்காலத்தில் திருவாசகச் சுவடிகள்

அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் திருவாசகம் வெளியிடப்பெற்று ஐம்பதாண்டுகள் நிறைவேறிய இந்நாளில் திருவாசகச் சுவடிகள் பல சுவடி நூலகங்களிலும் நிறுவனங்களிலும் திரட்டப்பெற்றுள்ளன. மேலும் இக் காலகட்டங்களில் திருவாசகத்திற்குப் பல உரைகள் ஏற்பட்டு அவையும் அச்சிடப்பெற்றுள்ளன.

ஓலைச் சுவடியியல் எனும் தனித்துறை எழுபதுகளின்பின் ஏற்படத் தொடங்கிய காலகட்டங்களில் சுவடிகள் திரட்டல், அட்டவணைகள் தயாரித்தல். சுவடியியல் பயிற்சி அளித்தல் போன்ற முயற்சிகளின் பின்னணியில் புறக்கணிக்கப்பெற்றுவரும் சுவடிகளுக்குப் புத்துயிர் ஊட்டப்பெற்றது.

கி.பி. 1956 மர்ரே எஸ்.ராஜம் பதிப்பகத்திற்குப் பிறகும் 1964 நீ.கந்தசாமி பிள்ளையின் பதிப்பிற்குப் பின்னும் சுவடியியல் நெறிமுறைகளோடு பதிப்பித்து அச்சிட்ட திருவாசகப் பதிப்பு ஏற்படவில்லை. ஆனால் இக்கால கட்டத்தில், நூற்றுக்கும் மேற்பட்ட திருவாசகச் சுவடிகள் நூலகங்களிலும் நிறுவனங்களிலும் சேகரித்துப் பாதுகாக்கப் பெற்று வருதலைக் காண முடிகிறது.

உ.வே சாமிநாதையர் நூலகத்தில் 1956 இல் பன்னிரண்டு திருவாசகச் சுவடிகள் இருந்தன. ஆனால் இன்றைய நாளில் அவை இருபத்து ஐந்துக்கு மேலாகும். அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகம், ஆசியவியல் நிறுவனம், தமிழ்ப் பல்கலைக்கழகம், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் போன்றவற்றில் திரட்டப்பெற்ற திருவாசகச் சுவடிகள் மிகப் பல. ஆசியவியல் நிறுவனத்தில் இடம்பெற்றுள்ள மூன்று திருவாசகச் சுவடிகள், இரு சுவடிகள் திருநெல்வேலி மாவட்டம், தென்காசி வட்டம் கோயிலூற்றில் நான் சேகரித்ததாகும். இதில் முதல் சுவடிகள் ஏடு எழுதியவரால் பாடப்பெற்ற பாடல் இடம்பெறுகிறது.

**தொல்லை யிரும்பிறவி சூழுந் தளைநீக்கி**<br>
**யல்லலுறுத் தானந்த மாக்கியதே - யெல்லை**<br>
**மருவா நெறியளிக்கும் வாதவூ ரெங்கோன்**<br>
**திருவா சகமென்னுந் தேன்.**

இப்பாடலின் பிறகே திருவாசகப் பாக்கள் தெடங்குகின்றன. குறையுயை இச்சுவடியில் சுவடிக் குறிப்பெதுவும் இடம்பெறவில்லை. ஆனால் மற்றொரு திருவாசகச் சுவடியில் இடம்பெறும் சுவடிக் குறிப்பில் அது கி.பி 1867 (கொல்லம் ஆண்டு 1042) இல் ஏட்டில் படியெடுக்கப் பெற்றதாக உள்ளது. கோயிலூற்றில் நான் சேகரித்த சுவ்டிகளில் திருவெம்பாவையும் ஒன்று. இதன் மூலம் மாணிக்கவாசகர் பாடிய பாடல்கள் தேவைக்கேற்ப ஏடுகளில் பகுதி பகுதியாக எழுதிவைக்கப்பெற்றுள்ள விபரம் தெரிகிறது.

தற்காலத்தில் கிடைத்துவரும் திருவாசகச் சுவடிகள் ஆராய்ந்து பார்க்கும் பொழுது பெரும்பாலும் அவை தென்பாண்டி நாட்டுப் பிரதிகளாகவே தெரிகின்றன. மேற்காணும் தனிப்பாடல் பல சுவடிகளில் இடம்பெற்றுள்ளதைப் பார்க்கும் போது கி.பி 19 ஆம் நூற்றாண்டில் எழுதப்பெற்ற திருவாசகச் சுவடியைப் பார்த்தே படியெடுக்கப்பட்டவையாக இவை தோன்றுகின்றன.

## உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்திலுள்ள திருவாசகச் சுவடிகள்

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் இடம்பெற்றுள்ள சுவடிகள் தொகுப்பில் ஏழுதிருவாசகச் சுவடிகள் உள்ளன. அவை வருமாறு:

| | | | |
|---|---|---|---|
| 503 அ. 293 : 518 | திருவாசகத் திருமுறை | 2 – 129 82 | ஏடுகள் (குறை) |
| 504 அ. 75 : 148 | திருவாசகம் | 1 – 44 44 | ஏடுகள் (குறை) |
| 505 அ. 83 : 184 | திருவாசகம் | 1 – 127 127 | ஏடுகள் (குறை |
| 506 அ. 84 : 185 | திருவாசகம் | 1 – 159 160 | ஏடுகள் (முழுமை) |
| 507 அ. 173 : 366 | திருவாசகம் | 1 – 44 44 | ஏடுகள் (குறை) |
| 508 அ. 181 : 386 | திருவாசகம் | 1 – 127 127 | ஏடுகள் (முழுமை) |
| 509 அ. 449 : 696 | திருவாசகம் | 1 – 168 168 | ஏடுகள் (குறை) |

இங்கு தரப்பெற்றுள்ள சுவடிகளையன்றித் திருவாசகத்தின் சிறுசிறு பதிகங்கள் மற்றும் நீண்ட பாடல்கள் அமையும் சுவடிகளும் உள்ளன.

மேற்சுட்டிய ஏழு திருவாசகச் சுவடிகளில் எண் 75, 84, 449 ஆகிய மூன்றும் கீழே மாதிரிகளாகக் கொடுக்கப்பெற்றுள்ளன.

இவற்றுள் 75 ஆம் எண்ணுள்ள ஏட்டில் முதல் ஓலையில் 'திருவாவடுதுறை' என எழுதப் பெற்றுள்ளது. அடுத்த ஓலையில் 'சிவமயம்', 'திருச்சிற்றம்பலம்', என எழுதப்பெற்று 'தொல்லை...' எனும் பாடல் இடம்பெற்றுள்ளது. தொடர்ந்து, "ஞான நடராசர் துணை, 1911ஆம் வருசம் ஆடி மாதம் 12 ஆம் திகதி சுக்கிரவாரமும் பூர நட்சத்திரத்தில் திருவாசகம் சேர்த்து எழுதினேன். பொன்னம்பலத் தம்பிரான் யெழுதின திருவாசகம் நன்றாக ஸ்ரீ" என்ற சுவடிக் குறிப்பு உள்ளது. இதன் மூலம் இது திருவாவடுதுறை ஏடு என்ற வரலாறு தெரிய வருகிறது. மூன்றாவது ஓலையில் 'திருச்சிற்றம்பலம் - திருவாசகம் - சிவபுராணம் அகவல், நமச்சிவாயம் வாழ்க' என நூல் தொடங்குகின்றது.

இந்தச் சுவடியின் 44 ஆம் ஓலை 'நீத்தல் விண்ணப்பத்தின் 50ஆம் பாடலுடன் முடிகிறது. உலகத் தமிழாராய்ச்சி நிறுவனச் சுவடி விளக்க அட்டவணை தொகுதி 2. இலக்கியம் என்ற நூலின் 282 ஆம் பக்கத்தில் எழுதப்பெற்றுள்ள இப்பாடல் வருமாறு:

**ஏசினும் யானுன்னை யேத்தினு மென்பிழைக்கே**
**குழைந்து வேசறு சிவனை விடுதி கண்டாய்**
**செம்பவள வெற்பிற் ... டையாய் என்னை ஆளடையாய்**
**சிற்றுயிர்க்கிரங்குக் காயசினவால**
**முண்டாய் முதுனனக் கடையவனே (50)**

ஏட்டிலிருந்து அட்டவணைப்படுத்தும்போது இந்தப் பாடல் பிழைபட எழுதி அச்சடிக்கப் பெற்றுள்ளது. திருவாசக ஆராய்ச்சியுரையை எழுதிய பண்தமணி சு.அருளம்பலவனாரின் நூலில் (ப.561) இந்தப் பாடல் பதிக்கப்பெற்றுள்ள முறை வருமாறு:

*ஏசினும் யானுன்னை யேத்தினும் என்பிழைக் கேகுழைந்து*
*வேசறு வேனை விடுதி கண்டாய்செம் பவள வெற்பிற்*
*றேசுடை யாயென்னை யாளுடை யாய்சிற் றுயிர்க்கிரங்கிக்*
*காய்சின வாலமுண் டாயமு துண்ணக் கடையவனே*

பொன்னம்பலத் தம்பிரான் எழுதிய ஏட்டில் இப்பாடல் வருமாறு:

*ஏசினும் யானுன்னை யேத்தினும் என்பிழைக்கே குழைந்து*
*வேசறு வேனை விடுதி கண்டாய் செம்பவள வெற்பிற்*
*றேசுடை யாயென்னை யாளுடை யாய்சிற் றுயிர்க்கிரங்கிக்*
*காய்சின வாலமுண் டாயமு துன்னக் கடையவனே*

இம்மூன்று பாடல்களில் முதல் பாடல் பிழைபடப் பெயர்த்தெழுதப் பெற்றுள்ளது. அச்சிடப்பெற்ற இரண்டாம் பாடலுடன் ஏட்டில் இடம்பெறும் பாடலை ஒப்பிடும் போது ஏட்டில் பாடபேதம் காணப்படுகிறது.

## ஏட்டில் கவனிக்க வேண்டியவை

பாடல்களை ஏட்டில் எழுதும்பொழுதோ படியெடுக்கும் பொழுதோ பதிப்பிக்கும் பொழுதோ யாப்பு முக்கியமாகப் பின்பற்றப்பெற வேண்டும். மேலே எழுத்தாண்ட பாடல் கட்டளைக் கலித்துறைப்பாடலாகும். நான்கு அடிகள் எழுதப் பெறவேண்டிய பாடலைச் சுவடிவிளக்க அட்டவணையில் ஐந்து அடிகளில் எழுதியதோடன்றி, தெரியாத எழுத்துகளுக்குப் புள்ளியிட்டுச் சென்றுள்ள நிலையையும் காண்கிறோம். ஐந்தடிகளில் பெயர்த்தெழுதப் பெற்றுள்ளதால், எதுகை மோனை அமையவில்லை.

அடுத்ததாகக் கவனிக்கப்பட வேண்டியது பொருள் ஆகும். 'வேனை' என்பது 'சிவனை' எனப் பெயர்த்து எழுதப்பெற்றுள்ளதால் பொருள் மாறுபடுகிறது. இறுதியடியில் 'முண்டாய் முதுனனக்' என்பதில் பெயர்த்தெழுதும் போது ஏற்படும் யகர ஒற்று பொருள் பிறழ்வை ஏற்படுத்தி விடுகிறது. யமுது என்று வருவதே சரியான பாடம். ஏட்டில் ஏற்பட்டுள்ள 'உன்ன' என்பது அச்சுப்படியில் 'உண்ண' என்றுள்ளது. பொருளைப் புரியாமல் ஏட்டிலிருந்தவாறே பெயர்த்தெழுதப் பெற்றதால் சுவடி விளக்க அட்டவணையில் இந்தத் தவறு ஏற்பட்டுள்ளது. இந்த அட்டவணை அணியமாக்கப்பெற்ற காலகட்டத்தில் திருவாசக அச்சு நூல்கள் ஏராளமாகக் கிடைத்த தறுவாயில் அவற்றைப் பயன்படுத்தி அட்டவணை செய்திருந்தால் பிழைகளைத் தவிர்த்திருக்கலாம்.

## திருவாசக ஆராய்ச்சியில் ஏட்டுமரபு அச்சு மரபுகள்

திருவாசகச் சுவடிகள் ஏராளமாக இன்றைய நாளில் திரட்டி வைக்கப்பட்டுள்ளன. தொடக்க காலத்தில் ஓலைச் சுவடிகளுடன் ஒப்பிட்டுப் பதிப்பித்துள்ள திருவாசக மூலப்பதிப்பு நூல்கள் இன்று அரிதாகக் கிடைக்கின்றன. அவற்றுக்கு இணங்கப் பதிப்பித்த நூல்களும் உரைப்பதிப்புக்களும் மிகுந்துள்ள இக்காலகட்டத்தில் திருவாசகச் சுவடிப்பதிப்புகள் மேலும் தேவையா என வினா எழலாம்.


மாணிக்கவாசகர் வரலாறு முழுமையாக அறுதியிடப் பெறாத நிலையில் ஆனால் அது பற்றிய ஆய்வுகள் ஏராளமாக வெளிவந்துள்ளன. ஆயினும் அந்த வரலாறு ஆராயப்பெற்று வருகின்றது. ஆராய்ச்சிக்கு முடிவில்லாத நிலையில் சுவடிப் பதிப்பு ஆராய்ச்சியும் தேவைப்படுவதாகக் கருதப்படலாம்.

அறிஞர் மு.அருணாசலம் அவர்களின் கருத்துடன் இக்கட்டுரையை நிறைவு செய்யலாம். "அச்சில் உள்ளதே வேதம் என்பதில்லை. முன்னோர் எழுதி வைத்ததே இந்த நிலைமைக்கு ஆதாரமல்லவா? ஆதலால் பழமையான ஏடுகளின் ஆதாரம் எந்த நிலையினும் நமக்கு உதவியாயிருக்கும் என்பது உறுதி. பொருளின் தெளிவுக்கும் சிறப்புக்கும் ஏடுகள் எந்த நிலையிலும் உதவி செய்யும். (மேற்சுட்டிய நூல் பக். 157)

"....மரபு என்பது யாது? திருவாசக மரபென்பது, நூல் தோன்றிய காலம் தொடங்கிச் சென்ற நூற்றாண்டின் முற்பாதி வரையில் ஏட்டு வடிவில் இருந்து பல்லோரால் பயிலப் பெற்று வந்தது. பாடமோ மரபோ இன்னதென்று ஒருவருக்கும் தெரியாது. சிறப்புப் புலவராகிய சிவக்கொழுந்து தேசிகருள்ளிட்டார், திருவாசகத்தை அச்சிட்டதனால், ஏககாலத்தில் பல பேருக்கு புத்தகம் புதிதாய் உண்டாயிற்று. இது ஒன்றே கால் நூற்றாண்டாக வழங்கி வருகிறது. இவ்விரண்டில் எது மரபு? ஆயிரத்துக்கு மேற்பட்ட ஆண்டுகளாக ஏட்டு வடிவில் கற்றோரிடை வழங்கியதா? அல்லது ஒன்றே கால் நூற்றாண்டாக அச்சில் வழங்குவதா?" (மேற்சுட்டிய நூல் பக். 161 – 162)

ஏட்டு மரபு, அச்சு மரபு இவற்றுடன் வாய்மொழி மரபையும் கருதிப் பார்க்கலாம்.

## திருவாசகத்தை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்த பெருமைக்குரிய ஜி.யு.போப்



திருவாசகத்தை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்த பெருமைக்குரியவர் கிறிஸ்தவ மதத்தைச் சேர்ந்த ஜி.யு.போப் என்பவராவர். 132 ஆண்டுகளுக்கு முன் அதாவது 1886ஆம் ஆண்டு இந்த மொழிபெயர்ப்பை செய்திருக்கிறார்.

இவர் 1820 ஏப்ரல் 24ஆம் திகதியன்று கனடாவில் பிறந்தவர். கிறிஸ்தவ சமயப் போதகராகப் பணியாற்றிய இவர் 1839 ஆம் ஆண்டு இந்தியா தமிழ் நாட்டுக்குச் சென்று தமிழ் முதலான வேறு மொழிகளையும் கற்றதுடன் அங்கு 40 வருட காலம் சமயப் பணிகளிலும் ஈடுபட்டார். 1885 ஆம் ஆண்டு முதல் 1908ஆம் ஆண்டு வரை இங்கிலாந்திலுள்ள பல்கலைக்கழகம் ஒன்றில் தமிழ் மற்றும் தெலுங்கு மொழிகளைக் கற்பிக்கும் பேராசிரியராக பணியாற்றினார்.

இவர் திருவாசகம் மட்டுமல்ல, திருக்குறள், நாலடியார் போன்ற நூல்களையும் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துள்ளார். ஜி.யு.போப் 1908 ஆம் ஆண்டு பெப்ரவரி 12ஆம் திகதியன்று காலமானார். அன்னார் தனது இறுதி விருப்பங்களாக பின்வரும் மூன்றையும் குறிப்பிட்டிருந்ததாக வரலாற்றுப் பதிவு சொல்கிறது.

1. இறப்புக்குப்பின் எனது கல்லறையில் 'இங்கே ஒரு தமிழ் மாணவன் உறங்கிக்கொண்டு இருக்கிறான்' என்ற வாசகம் இடம்பெறவேண்டும்.
2. எனது கல்லறைக்கு செலவிடும் தொகையில் ஒரு சிறு பகுதியாவது தமிழ் மக்களின் நன்கொடையாக அமைய வேண்டும்.
3. கல்லறையில் என்னை அடக்கம் செய்யும் போது நான் மொழிபெயர்த்து வெளியிட்ட திருக்குறள், மற்றும் திருவாசக நூல்களை உடன் வைக்க வேண்டும்.

# திருவாசகத்தில் சிவவடிவங்கள்

சு. வேங்கடராமன்

## அறிமுகம்

உருவமற்ற இறைவன் உயிர்களுக்கு அருள் செய்வதற்காகப் பல்வேறு உருவத்திருமேனிகளில் வெளிப்படுகிறான். மனிதன் வழிபாட்டிற்காக இறைவனுக்கு உருவம் அமைத்து வீடு, கோயில்களில் நிறுவினான். சமய மரபில் இத்திருமேனிகளை மூர்த்தம், மூர்த்தி, பேரர் என்பர். திருமுறை ஆசிரியர்கள் கோலம், படிவம், திருமேனி, உரு, வேடம் எனப் பலவாறு குறிப்பிடுகின்றனர். ஆகம சிற்ப நூலார் சிவத் திருமேனிகளை மகேசுவர வடிவங்கள் - 25 என வரையறுத்து, இலக்கணம் கூறினர். இன்று நமக்குக் கிடைக்கக்கூடிய சைவ ஆகமங்கள் (28) யாவும் பிற்காலச் சோழர் காலத்திற்குப் பின் தமிழகச் சிவாச்சாரியர்களால் சமயப் பொது மொழியான வடமொழியில் எழுதப்பட்டன. சங்க காலம் முதல் இலக்கியங்கள் தொடர்ந்து சிவவடிவங்களைப் பதிவு செய்துள்ளன.

பல்லவர், முற்காலப் பாண்டியர் காலக் குடைவரைக் கோயில், கற்றளிகளில் இடம்பெற்றுள்ள சில திருமேனிகள் மட்டுமே திருமுறை ஆசிரியர்களுக்குக் காலத்தால் முற்பட்டவை. சைவ சமயக் குரவர் நால்வரும் பிற்காலச் சோழர் காலத்திற்கு முன் சிவவடிவங்களைத் தம் அக,புறக் கண்களால் கண்டு தம் பாடல்களில் பதிவு செய்தனர்.

எனவே சோழர் காலத்தில் கட்டுமானக் கோயில்கள் உருவாகி அரச ஆதரவுடன் சைவம் நிறுவன சமயமாகி, சித்தாந்த நூல்கள் பெருகி, சைவ ஆகமங்கள், சிற்ப நூல்கள் உருவானபோது சிவவடிவங்கள் அமைக்க நால்வர் திருமுறைப்பாடல்களே மூலவடிவமாக - முன் மாதிரியாக அமைந்தன. மணிவாசகர் 'அருபரத்தொருவன் அவனியில் வந்து குருபரன் ஆக' எனவும் 'கணக்கு இலாத் திருக்கோலம் நீ வந்து காட்டினாய்' எனவும் பாடி உள்ளமை இதை வலியுறுத்தும். எண்ணற்ற கோலங்களை மனிதன் கற்பனையில் கண்டு வடிவாக அமைத்தாலும் சமய மரபு, மகேசுவர வடிவங்கள் 25 எனப் பிற்காலத்தில் வரையறுத்தன. அந்த அடிப்படையில் வீடு, திருக்கோயில்களில் முறையே ஆன்மார்த்த, பரார்த்த பூசைகளுக்காக இந்த வடிவங்கள் அமைக்கப்பட்டன. திருவாசகத்தில் இடம்பெறும் சிவ வடிவங்களை இக்கட்டுரை ஆய்வு செய்கிறது. மணிவாசகர் பாடிய சிவத் திருமேனிகள் பிற்காலக் கோயில் நடைமுறையில் மூலவர், உற்சவத் திருமேனிகளாக அமைந்தன. மகேசுவர வடிவங்கள் தவிர, வாதவூரரோடு தொடர்புடைய - அவருடைய வாழ்க்கை வரலாற்று நிகழ்வுகளில் இடம்பெற்ற - சில திருமேனிகள் உள்ளன. மதுரை, திருப்பெருந்துறை உத்தரகோசமங்கை போன்ற தலங்களில் இன்றும் இத்திருமேனிகள் உள்ளன. ஆகம மரபில் இடம் பெறாத இவ்வடிவங்களை திருவாசகத்தில் கூறியபடி, தலபுராணங்கள் விளக்கின. எனவே இலக்கியம் முற்படக் கூறிய முறையில் கோயில் மரபு உருவானது.

## திருவாசகம் கூறும் வடிவங்கள்

தமிழ் மரபில் காரைக்கால் அம்மையாரைத் தொடர்ந்து தேவாரமூவர் மணிவாசகர் வருகின்றனர். திருமந்திரம் காலத்தால் பிற்பட்டது. தேவார மூவரும் மணிவாசகரும் எண்ணற்ற சிவவடிவங்களைத் தம் பாடல்களில் காட்சிப்படுத்தியுள்ளனர். இவைகளில் சிந்து சமவெளி காலந்தொட்டு தமிழ் மரபில் அறியப்பட்ட சிவலிங்கம், ஆடற்கோலம் (நிருத்த மூர்த்தி)

என்பவைகளோடு ஆலமர்ச் செல்வன், உமையொருபாகன், சோமாஸ்கந்தன் போன்ற வடிவங்கள் சங்க காலம் முதல் தொடர்ந்து காணப்படுவன. மேலும் நீலகண்டன், திரிபுரம் எரித்த கோலம் (திரிபுராந்தகன்) ஆகிய சிவவடிவங்களும் மிகத் தொன்மையானவை. கூத்தாடும் கோலம், கொடுகொட்டி, கொட்டிசேதம், பாண்டரங்கம் காபாலிகம் ஆகிய கூத்துக்களை ஆடும் சிவவடிவங்களைப் பற்றியும் தமிழ் மரபில் பழங்காலம் முதல் அறிந்திருந்தனர். மணிவாசகர் இத்தொன்மையான சிவ வடிவங்களைப் பாடுகிறார். இறைவனை ஆடல் வல்லானாகக் கூறும் போது தில்லைக்கூத்தனாகவே பாடுகிறார். இவற்றோடு வேறுபல வடிவங்களையும் பாடுகிறார்.

ஆகம, சிற்ப நூல்கள் இறைத்திருமேனி பற்றி விரிவாகக் கூறும். நின்ற, இருந்த கோலம், கை, கால்களின் நிலை, கரங்களிலுள்ள கருவிகள், அணிகலங்கள், ஆடை என்பன குறித்து விரிவாகப் பேசும். ஒவ்வொரு வடிவத்திற்கும் ஒரு தியான சுலோகம் பற்றியும் அவை விளக்கும். மூர்த்தத்திற்குப் பெயரையும் அவை கூறும். ஆகம, சிற்ப நூல்கள் இலக்கணம் - அளவை - கூறுவன. முன்னரே கூறியபடி மூவர் தேவாரம் திருவாசகம் ஆகியன இலக்கியமாக காலத்தால் முற்பட்டு இத்திருமேனிகளை அகக்காட்சி அடிப்படையில் பாடியுள்ளன. எனவே அவை குறிப்பாக மட்டுமே இக்கோலங்களைக் கூறும். நுட்பமான முறையில் அக்காலக் கதை வழக்கு வேறுபாடுகளையும் திருமேனிகளின் தமிழ்ப் பெயர்களையும் பாடியுள்ளனர். தேவார மூவரும் மணிவாசகரும் ஆகமம் பற்றிக் கூறுகின்றனர். 'ஆகமம் ஆகி நின்று அண்ணிப்பான்' எனவும் 'ஆகமம் வாங்கியும்' எனவும் மணிவாசகர் பாடுகிறார். சைவ சமயக் குரவர்கள் குறிப்பிடும் தொன்மையான ஆகமம் (அளவை என்ற பொருளில்) இன்று நமக்குக் கிடைக்கவில்லை. இன்று கிடைக்கும் சைவ ஆகமங்கள் யாவும் கிரியை, ஞான பாதங்களை உடையன. கோயிலமைப்பு, திருமேனி, வழிபாட்டுச்சடங்கு, மந்திரம் ஆகியன கிரியைப் பகுதியிலும், சைவ சித்தாந்தக் கருத்துக்கள் ஞான பாதத்திலும் கூறப்பட்டுள்ளன. மணிவாசகர் காலத்தால் முற்பட்டு இறைக் கோலங்களைப் பல்வேறு சூழல்களில் கண்டு திருவாசகத்தில் பதிவு செய்துள்ளார். பிற்கால இலக்கண நூல்களுக்கு (ஆகமம், சிற்பச் செந்நூல், சிவ பராக்கிரமம், ஸ்ரீ தத்துவநிதி போன்ற சிற்ப நூல்கள்) அவை முன்மாதிரி.

## ஆடல் வல்லான்

சிவனின் ஆடல் வல்லான் கோலத்தை மணிவாசகர் மிகுதியும் பாடுகிறார். தில்லையோடு தொடர்புபடுத்தி, அம்பலம், ஆனந்தக்கூத்து எனப் பலவகையாகக் கூறப்பட்டுள்ளது. 'தில்லை மூதூர் ஆடிய திருவடி' (கீர்த்தி - 1) என அவர் பாடுகிறார். தேவார காலத்திற்கு முன்பு தில்லை தமிழ் மரபில் - இலக்கியத்தில் - பதிவாகவில்லை. எனினும் மணிவாசகர் மூதூர் எனப் பாடுவது குறிப்பிடத்தக்கது. 'குற்றாலத்து எம் கூத்தா' (போற்றி. 156) என அவர் பாடுகிறார். பிற்காலத்தில் ஆடல் வல்லானின் ஐவகைச் சபைகளில் ஒன்றாகக் குற்றாலம் (சித்திரசபை) இடம்பெறும் சமயக் கருத்தாக்கம் உருவாக இது அடிப்படை முதல் பதிவு. கூத்து, ஆடல், நிருத்தம், நடம் என்ற பல்வேறு சொற்களில் தில்லைக் கூத்தைப் பரவுகிறார். சிற்றம்பலம், பொன்னம்பலம் ஆகிய தொடர்களும் உள்ளன. மாறுபட்ட முறையில் 'தில்லை அம்பலத்தே ஆடுகின்ற சிலம்பு ஆடல் பாடி' (திருத்தெள் 20) என்று மணிவாசகர் பாடுகிறார். இறைவன் ஆடும்போது திருவடிகளில் சிலம்பு அணிந்து இருப்பதான கோலம் மாறுபட்ட பதிவு. மணிவாசகருக்குக் கிடைத்த காட்சி அனுபவம் இது. அதன் தொடர்ச்சியாகத்தான் 'வாத ஊரினில் வந்து இனிது அருளி பாதச் சிலம்பு ஒலி காட்டிய' (கீர்த்தி. 53) என மணிவாசகர் ஆடல் வல்லானின் பல்வேறு நிலைகளைப் பாடுகிறார்.

## வேட்டுவ வேடம் (கிராத வேடன்)

அருச்சுனனுக்குப் பாசுபதம் வழங்க இறைவன் வேடன் வடிவத்தில் சென்றான். மணிவாசகர் இதை ஏழு இடங்களில் குறிப்பிடுகிறார். தமிழ் மரபில் இறைவனும் உமையும் வேடர் வடிவில் சென்று அருள் செய்ததாகத் திருமுறைகள் கூறும். மணிவாசகரும் 'கிராத வேடமொடு கிஞ்சுக வாயவள்' (கீர்த்தி. 15) எனப் பாடுகிறார். கிராத வேடம், வேட்டுரு எனக் கலைச் சொற்களால் குறிப்பிடுகிறார். காட்டில் பன்றி (ஏனம்) யின் பின் சென்று வேடவடிவில் வில்லேந்தி இறைவன் சென்றதை மணிவாசகர் பாடுகிறார். இவை சிற்ப நூலாருக்கு ஏற்ற அடிப்படைகள்.

## உமையொரு பாகன் (அர்த்த நாரீசுவரன்)

இறைவனும் இறைவியும் இணைந்து பாதி மாதுடனாய பரமனாக வெளிப்படும் கோலம் தமிழ் மரபிற்கே உரிய மிகத் தொன்மையான வடிவம். மணிவாசகர் இக்கோலத்தையே மிகுதியாகப் (62 இடங்களில்) பாடியுள்ளார். உயிர்களுக்கு அருள் செய்ய இறைவன் இறைவியோடு சேர்ந்து காட்சி தருவதாகச் சைவ மரபு விளக்கும். 'அரன் தனக்கு அருளது சத்தியாகும்' என்பது சித்தாந்தம். திருமுறை ஆசிரியர்கள் இக்கோலத்தை மிகுதியும் பாடுவதால் பிற்கால சாத்திர நூல்கள் இவ்வாறு கூறின. மணிவாசகர் மிக நுட்பமாக (பாதி மாதொடும் கூடிய பரம்பரன் (அதிசய. 2) என்று மிகப் பொருத்தமான சொற்களால் குறிப்பிடுகிறார். இதுதான் பிற்காலத்தில் அர்த்த நாரீசுவரன் என வடமொழியில் அப்படியே மொழிபெயர்ப்பானது. இறைவனும் இறைவியும் இணைந்த கோலத்தை ஓரிடத்தில் (திருக்கோத்தும்பி -18) அப்படியே காட்சிப்படுத்துகிறார். தோல், ஆடை, குழை, தோடு, வெண்ணீறு, சாந்து, கிளி, சூலம், வளை ஆகியன உடைய தொன்மைக் கோலமே என மணிவாசகர் பாடுவது சிற்ப நூலாருக்கு முன்மாதிரி. சிலம்பில் கண்ணகிக்கு முன் மதுராபதித் தெய்வம் உமையொருபாக வடிவிலே காட்சி தருவது அறியத்தக்கது. தமிழ் மரபில் தொன்மையான கோலம் இது. இறைவி கையில் கிளி ஏந்திய வடிவில் காட்சி தருவது, பழைமையான தாய்த் தெய்வ மரபின் தொடர்ச்சி. மணிவாசகர் 'மாதில் கூறுடை' (கீர்த்தி. 108), தையல் இடம் கொண்ட பிரான் (அச்சோ. 8), 'பழுது இல் தொல் புகழாள் பங்க' (வாழா. 10) என மாறுபட்ட முறையில் இவ்வடியைப் பாடியுள்ளார். உமையின் உடலில் பாதி சிவன் குடி கொண்டதாக அவர் பாடுவது நுட்பமானது. தாய்த் தெய்வழிபாடு மிகப் பழையது. தாய் வழிச் சமூக அமைப்பு மாறிய போது தொன்மைக்கதைகளும் படிமங்களும் தந்தைவழிச் சமூக மரபிற்கேற்ப மாற்றப்பட்டன. சமூக மாற்றம் சமயத்திலும் வெளிப்பட்டது என்பதை இவை நிறுவும்.

## உமா சகிதர்

உமையோடு கூடி இறைவன் வெளிப்படும் கோலம். மணிவாசகர் இக்கோலத்தைப் பல இடங்களில் பாடியுள்ளார். 'மங்கையும் தானுமாய்' (கீர்த்தி. 26) என்பது போல அவர் பாடுகிறார். பெரும்பாலும் திருக்கோயில்களிலுள்ள சந்திரசேகர (பிறை சூடி) மூர்த்தி இதுதான். கோயில் உள்ளும் வெளியிலும் இவ்வடிவம் எழுந்தருளும். 'நல்லாளொடு நயப்புற' இறைவன் வெளிப்பட்டு உயிர்களுக்கு அருளும் கோலமிது. சிற்ப நூல்கள் உமா சகிதரை அமர்ந்த கோலத்தில் விளக்கும். சந்திரசேகரரின் வெவ்வேறு மூன்று வகைகளில் (சந்திரசேகரர், உமாசகிதர், ஆலிங்கனமூர்த்தி) ஒன்றாக இதைக் கொள்வர். மணிவாசகர், குணக்கடல் கோமளத்தொடும் கூடி அணைந்து (அற்புத. 6) எனப் பாடுகிறார். இறைவன் இறைவியைத் தழுவிய கோலத்தில் காட்சி கொடுப்பதைத் திருவாசகம் தான் முதன் முதலாகக் கூறுகின்றது. ஆலிங்கன மூர்த்தி இதுவே. பின்னர் காஞ்சிப்புராணம், சக்திமுற்றப்புராணம் ஆகியவை இறைவி இறைவனைத் தழுவிய கோலத்தைப் பாட திருவாசகம் முன்னோடி.

திருவாசகம் 'மலையாள் மணவாளனாக' இறைவனைப் போற்றுகிறது. 'மலை அரையன் பொன் பாவை உலகு அறியத் தீ வேட்டான்' (திருச்சாழல் 13) என்று கலியாண சுந்தரர் வடிவை மணிவாசகர் பாடுகிறார். 'நித்தம் மணாளர்' (அன்னை. 3) எனவும் ஓரிடம் உள்ளது. பிற்காலத்தில் திருமணஞ்சேரி, திருவிட எந்தை (வைணவம்) ஆகிய தலங்களில் நித்தம் மணாளர் கோலம் இடம்பெறத் திருவாசகம் முன்னோடி. திருவாசகம் ஓரிடத்தில் மட்டும் உமை, கங்கை ஆகிய இருவரின் மணாளனாக இறைவனைப் பாடுவது (அருள் பத்து. 3) முற்றிலும் மாறுபட்டது.

## ஏறுடை ஈசன் (இடபாரூடர்)

சிவ வடிவங்களில் மிகுதியாகப் போற்றப்படும் வடிவம் இது. இறைவனும் இறைவியும் இடப வாகனத்தில் எழுந்தருளும் கோலம். விழாக்காலத்தில் இவ்வடிவமே மிகவும் கொண்டாடப்படும். மணிவாசகர் இதை மிகுதியாகப்(17) பாடியுள்ளார். பொதுவாகச் சந்திரசேகரரை இடப வாகனத்தில் எழுந்தருளச் செய்யும் மரபு உள்ளது. மணிவாசகர் 'ஏறுடை ஈசன் இப்புவனியை, உய்யக் கூறு உடை மங்கையும் தானும் வந்து அருளி' (கீர்த்தி. 25 - 26) என விளக்கமாகக் கூறுகிறார். திருமாலே இடபமாகித் தாங்கினான் என்பர். இதை மணிவாசகர் 'இடபம் அது ஆய்த்தாங்கினான் திருமால்' (திருச்சாழல். 15) எனக் கூறுகிறார்.

## ஆலமர்ச் செல்வன் (தட்சணாமூர்த்தி)

இது தமிழ் மரபிற்கே உரிய மிகத் தொன்மையான வடிவம். சங்கப் பாடல் சிலம்பு காலந்தொட்டு அறியப்பட்ட வடிவம். மணிவாசகர் தம்மை ஆட்கொண்டு உபதேசித்த வடிவமாக இதைப் பாடுகிறார். திருப்பெருந்துறையில் குருந்தமர நிழலில் இவ்வடிவில் தம்மை ஆட்கொண்டான் என்கிறார். ஞான வடிவாக - குருமூர்த்தமாக - இதைச் சைவமரபு போற்றும். மணிவாசகர் 'ஆலின் கீழ் இருந்து அறம் அருளிய' (திருச்சாழல். 20) எனப் பாடுகிறார். 'நால்வருக்கு அறம் அருளியது', 'நான்மறையின் உட்பொருளை அருளியது'. 'அறம் முதல் நான்கினையும்' என வெவ்வேறு நிலைகளைப் பாடுகிறார். ஆனால் பிற்கால ஆகம, சிற்ப நூல்கள் கூறும் சின்முத்திரை, பேசாத மௌன நிலை என்பவை பற்றிய குறிப்பு திருமுறைகளில் இல்லை. மாறாகப் பட்டமங்கை தலத்தில் ஈசன் அட்டமாசித்தி அருளிய கோலத்தைப் (கீர்த்தி. 62-63) பாடுகிறார். இன்று அவ்வடிவம் கிழக்கு நோக்கி உள்ளது. குறிப்பிட்ட தலத்து வடிவைப் பதிவுசெய்துள்ளார். பிற்கால யோக தட்சணாமூர்த்திக்கு இது அடிப்படை.

## நீலகண்டன்

இதுவும் தமிழ் மரபில் சங்க காலம் முதல் அறியப்பட்ட பழைய வடிவம். சிவனை ஒப்பற்ற கருணை உடையவனாக - பரம் பொருளாக - விளக்கும் வடிவம் இது. மணிவாசகர் இதை மிகுதியாகப் பாடியுள்ளார். 'நஞ்சு அமர் கண்டத்தன்' (திருப் பொன்னூசல் - 4) என்கிறார். நஞ்சை அமுதமாக உண்ட பிரான் என்று இறைவன் கருணையைப் பலவாறு பாடுகிறார்.

## இலிங்கோத்பவ வடிவம் (அடிமுடி காணாத வடிவம்)

மணிவாசகர் இவ்வடிவையும் மிகுதியாகப் (21) பாடியுள்ளார். 'மால் அறியா நான்முகனும் காணா மலையினை' (திருவெம்பாவை - 5) எனப் பாடுகிறார். பேருருவாய் ஈசன் நின்ற வடிவை

'பாதாளம் ஏழினும் கீழ் ... பொருள் முடிவே' எனவும் பாடுகிறார். (திருவெம்பாவை 10). அதேபோல, பிரமன். திருமால் அறியாத 'அழல் உருவாய்;' (திருச்சாழல்.6) நின்ற கோலத்தையும் பாடுகிறார். லிங்கோத்பவர் வடிவம் திருக்கோயில்களில் சிவனின் பேருருவை விளக்கச் சிற்பமாக மேற்கு நோக்கி அமைக்கப்படும். லிங்க வடிவத்தோடு தொடர்புபடுத்தி இத்திருமேனி அமைக்கப்படும் மணிவாசகர் வெளிப்படையாகச் சிவலிங்க வடிவைக் கூறவில்லை . ஆனால், 'குற்றாலத்தில் குறியாய்' என்பதாக மட்டும் குறிப்பிடுகிறார்.

## கங்காதரர்

சிவன் தலையில் கங்கையைச் சூடிய கோலம். மணிவாசகர் இதை விரிவாகப் பாடியுள்ளார். சிவபராக்கிரமம் போன்ற நூல்கள் இதை விளக்கும். ஆனால் சில ஆகம நூல்கள் இதற்கு மாற்றாக விநாயகருக்கு ஈசன் அருள்செய்யும் வடிவைக் (கஜமுக அனுகிரகர்) கூறும். கங்கையைத் தலையில் சூடிய கோலம் திருமுறைகளில் காணப்படுவதால் அது பழைமையானது. 'சலமுகத்தால் அவன் சடையில் பாயும்' (திருச்சாழல் 7) என்பது திருவாசகம்.

## பிறைசூடி - சந்திரசேகரர்

தலையில் பிறையைச் சூடிய கோலம், இந்த வடிவமே கோயில் மரபில் வலம் வரப் (உற்சவர்) பயன்படுகிறது. 'மதி ஆடும் சிவன்' (திருச்சதகம் - 40), 'பிறை சேர் சடையாய்' (குழைத்தபத்து. 6) 'சுடர் மதி சூடிய பரன்" (உயிருண்ணி பத்து.6) என மணிவாசகர் பாடுகிறார்.

## பிச்சைத் தேவர் - (பிட்சாடனர்)

ஈசன் கையில் பிச்சைப் பாத்திரம் ஏந்தி பலி ஏற்க வருவதாக இவ்வடிவம் அமைக்கப்படும். இதுவும் தமிழ் மரபில் மட்டுமே காணப்படுவது. 'ஆரூர் எம் பிச்சைத் தேவ' (திருச்சதகம்.81) எனவும் 'பலி தேர் அம்பலவன்' (திருக்கோத்தும்பி. 2) எனவும் திருவாசகம் கூறும். மணிவாசகர் இவ் வடிவைத் தாருகாவனத்து முனிவர் மனைவியருக்கு அருள் செய்ய வந்ததாகக் கூறவில்லை

## ஆனை உரிபோர்த்த வடிவம் - (கஜசம்ஹாரம்)

யானையின் தோலை உரித்து ஈசன் போர்த்திய வடிவம். 'அத்தி உரித்து அது போர்த்தருளும்' (திருப்பூவல்லி -19) என இவ்வடிவை மணிவாசகர் பாடுகிறார். ஓரிடத்தில் மட்டும் (நீத்தல் விண்ணப்பம் 19) உமையை இச்செயலால் அச்சமூட்டினான் என்று தொன்மக் கதையோடு கூறுகிறார்.

## முப்புரம் எரித்தவன் - (திரிபுராந்தகன்)

இதுவும் தமிழ் மரபில் இடம்பெறும் மிகத் தொன்மையான வடிவம். 'முப்புரம் எய்தல் பாடி' (திருப்பொற் சுண்ணம் -18), 'முப்புரம் வெந்தவாறு' (திருவுந்தியார் -1) என மணிவாசகர் பாடுகிறார். இவ்வடிவை வில்லேந்திய கோலத்தோடு 'சிலையானே' (செத்திலாப் பத்து - 3) எனப் பாடுவது நுட்பமானது. அதேபோல கொற்றச் சேவகன் திருப்பொற் சுண்ணம் - 16) எனவும் கூறுகிறார். இந்த வடிவமும் சிவனின் பரம்பொருள் தன்மையை விளக்கும்.

## காலசம்கார மூர்த்தி

திருமுறைகளில் காலனை அடியவருக்காகக் காலால் உதைத்த கோலம் விரிவாகப் பேசப்படுகிறது. 'காலனைக் காலால் உதைத்தல் பாடி' (திருப் பொற்சுண்ணம் -18) 'கூற்றையும் வென்று' (பாண்டியப்பதிகம் -10) எனவும் திருவாசகம் கூறுகிறது. மார்க்கண்டேயனுக்கு அருளுவதற்காக இக்கோலம் வெளிப்பட்டது என்ற தொன்மக் கதைக் குறிப்பு திருவாசகத்தில் இடம்பெறவில்லை.

## கங்காள மூர்த்தி

சிவன் நின்ற கோலத்தில் இறந்தவர் எலும்புகளை அணிந்து தோன்றும் கோலம். இதுவும் தமிழ் மரபிற்கே உரியது. பிட்சாடனர், பைரவர் வடிவிலிருந்து இது மாறுபட்டது. சிற்ப வடிவில் பின்பகுதி இடது தோளில் கங்காள தண்டம் ஏந்தி இருப்பதாக வடிவம் அமைய வேண்டும் என ஆகம சிற்பநூல்கள் கூறும். மணிவாசகர் ஓரிடத்தில் இதை அப்படியே கூறுகிறார். நரம் போடு எலும்பு அணிந்து கங்காளம் தோள்மேல் காதலித்தான் (திருச்சாழல் - 11) என்பது அவ்வடிவைக் குறிக்கும்.

## சக்கரதானர்

திருமாலுக்குச் சங்கரன் சக்கரம் அருளிய கோலமிது. 'ஆழி நாரணற்கு அருளி' (திருச்சாழல் 18) என்பது மணிவாசகர் வாக்கு. இதேபோலச் சலந்தரனை வதம் செய்த கோலம், (சாழல் - 18) காமனை வதம் செய்த வடிவு (பாண்டி - 10) ஆகியவைகளையும் மணிவாசகர் குறிப்பிட்டுள்ளார். சண்டேசருக்கு அருள் செய்யும் கோலம் ஓரிடத்தில் (திருத்தோள் நோக்கம். 7) குறிப்பிடப்படுகிறது.

## வீரபத்திரர்

ஈசன் வீரபத்திரர் வடிவில் வெளிப்பட்டு தக்கன் உள்ளிட்ட தேவர்களை வடுச்செய்த கோலத்தைத் தேவார மூவர் பாடியுள்ளனர். மணிவாசகர் இதை மிக விரிவாகப் பல இடங்களில் பாடியுள்ளார். தமிழ் மரபில் முதன் முதலாக வீரபத்திரர் என்ற பெயரோடு இவ்வடிவை அவர் பதிவு செய்துள்ளார். மிகுந்த சினத்துடன் இவ்வடிவம் அமைக்கப்பட வேண்டும் எனப் பிற்கால ஆகம, சிற்ப நூல்கள் கூறும். திருவுந்தியாரில் இந்தச் சினவடிவை மணிவாசகர் விளக்குகிறார். 'வீரபத்திரரால் புண்பட்டவா பாடி' (திருப்பூவல்லி - 4) என்பது திருவாசகம்.

## ஆகம வடிவில் இடம்பெறாத கோலம்

ஆகம, சிற்பநூல்கள் குறிப்பிடாத வேறு சில வடிவங்களையும் மணிவாசகர் பாடியுள்ளார். இவை அவருடைய வாழ்க்கை நிகழ்வுகளில் இடம் பெற்ற அவருடைய அகக் காட்சி அனுபவங்கள். பிற்காலத்தில் இவ்வடிவங்கள் தலபுராணங்களிலும் அந்தந்தத் தல விழாக்களிலும் இடம் பெற்றன. இன்றும் விழாக்காலங்களில் அக்கோலம் உற்சவராக வெளிப்படும் மரபு உள்ளது.

## குதிரைச் சேவகன்

இறைவன் மணிவாசகருக்காகக் குதிரைச் சேவகனாகப் பெருந்துறையிலிருந்து மதுரைக்குக் குதிரைப் படைகளைக் கொண்டுவந்தான். இந்த நிகழ்வு திருவாசகத்தில் பல இடங்களில்

குறிப்பிடப்படுகிறது. திருப்பெருந்துறையில் சிறப்பமாக உள்ளது. பெருந்துறை, மதுரை ஆகிய தலங்களில் ஆவணி மூலத் திருவிழாவில் இவ்வடிவம் உற்சவராக இடம்பெறுகிறது. 'பரியின் மேல் வந்த வள்ளல்' 'பரிப் பாகன்' (பண்டாய நான்மறை 2.3), 'மா ஆர யேறி மதுரை நகர் புகுந்து' (திருப்பூவல்லி - 20), 'குதிரைச் சேவகன் ஆகிய' (கீர்த்தி. 45) என்று இந்த நிகழ்வு இடம்பெறுகிறது. பின்னர் இரு திருவிளையாடற் புராணங்கள், வாதவூர் அடிகள் புராணம், பெருந்துறைப் புராணம், சுந்தரபாண்டியம் என அனைத்தும் இவ்வடிவைக் குறிப்பிடுகின்றன.

ஈசன் மணிவாசகருக்காகக் குதிரைச் சேவகனாக வந்தபோது வெண்ணிற ஆடை அணிந்து திருநீறு பூசி மேற்சட்டை அணிந்து (குப்பாயம்) வந்தான். 'பள்ளிக் குப்பாயத்தார்' (அன்னை பத்து-7) என விரிவாகத் தோற்றப் பொலிவைத் திருவாசகம் கூறுகிறது. இது நுட்பமான பதிவு. மணிவாசகர் காலத்தில் குதிரைப் படைவீரர்கள் இவ்வாறு குப்பாயம் அணியும் மரபு இருந்திருக்கும். ஆனால் இன்றைய கோயில் விழா மரபில் இது இடம்பெறவில்லை . வாதவூர் அடிகள் புராணமும் 'ஒப்பரிய சட்டையும் தொப்பியும்' (குதிரையிட்ட சருக்கம் - 198) என இதை வழிமொழிகிறது.

## வலை வீசிய கோலம்

ஈசன் மீன் பிடிக்கக் கடலில் வலை வீசிய நிகழ்வை மணிவாசகர், கடலில் 'வலை வாணன்' (பண்டாய.3) என்று கூறுகிறார். திருவிளையாடற் புராணம் இதை விளக்க, மதுரைக் கோயிலில் ஆவணி மூல விழாவில் உற்சவர் இவ்வேடம் புனையும் மரபு உள்ளது.

## தாளம் ஏந்திய கோலம்

சிவன் கையில் தாளம் (இசைக்கருவி) இருப்பதாக ஒரு கோலத்தை மணிவாசகர் 'அடிகளார் தம் கையில் தாளம் இருந்த ஆறு' (அன்னைப் பத்து- 8) என்று பாடுகிறார். சிவன் கையில் தாளம் இருப்பதான கோலம் மாறுபட்டது. கூத்தாடுபவன் தாளக் கருவிகளையும் இசைப்பதில் வல்லவன் என்ற அடிப்படையில் இதைக் கொள்ள வேண்டும். வேறு சில பாடல்களில் (அன்னைப்பத்து - 1, கீர்த்தி.108, தசாங்கம் - 8) பறை (தாளக்கருவி) பற்றிப் பாடியுள்ளார். இந்தத் தாளம் பிற்கால ஆகம, சிற்ப மரபில் தமருகமாக மாற்றப்பட்டது. ஞான சம்பந்தரும் சீர்காழி ஈசன் கையில் பறை உள்ளதாகக் கூறுவது இங்கு குறிப்பிடத்தக்கது. 'பறையும் கரத்தினர் போலும்' தேவாரம். திருப்பிரமபுரம், 349, பாடல். 1)

## முடிவுரை

மணிவாசகர் பல்வேறு சிவ வடிவங்களை நுட்பமாகவும் மாறுபட்ட முறையிலும் பாடியுள்ளார். பிற்கால ஆகம, சிற்ப மரபு குறிப்பிடும் மகேசுவர வடிவங்களில் (25) 21 அவர் பாடலில் இடம் பெற்றுள்ளன. சோமாஸ்கந்தர், ஏகபாதர், சங்கர நாராயணர், சுகாசனர் ஆகிய நான்கு வடிவங்கள் அவர் காலத்தில் பரவலாக அறியப்படவில்லை போலும். அவைகளை அவர் பாடவில்லை . ஆனால் முற்காலப் பாண்டியர், பல்லவர் காலக் கோயில்களில் சோமாஸ்கந்தர் இடம்பெற்றிருந்தது. அந்த வடிவம் திருமுறைகளில் மிகுதியாக இடம்பெறாதது வியப்பைத் தருகிறது. மணிவாசகர் இலக்கியமாகப் பதிவு செய்ததை ஆகம, சிற்ப நூல்கள் பின்னர் இலக்கணமாக்கின. திருமுறைகள் அந்த நோக்கில் மூல இலக்கியங்களாக உள்ளன.

# சிவதெட்சணாமூர்த்தி போற்றி

1. ஓம் அறிவுருவே போற்றி
2. ஓம் அழிவிலானே போற்றி
3. ஓம் அடைக்கலமே போற்றி
4. ஓம் அருளாளனே போற்றி
5. ஓம் அல்லல் அறுப்பவனே போற்றி
6. ஓம் அடியாரன்பனே போற்றி
7. ஓம் அகத்துறைபவனே போற்றி
8. ஓம் அகந்தையழிப்பவனே போற்றி
9. ஓம் அற்புதனே போற்றி
10. ஓம் அபயகரத்தனே போற்றி
11. ஓம் ஆன்கீழமர்ந்தவனே போற்றி
12. ஓம் ஆன்மீகநாதனே போற்றி
13. ஓம் ஆச்சாரியனே போற்றி
14. ஓம் ஆசாரக்காவலே போற்றி
15. ஓம் ஆக்கியவனே போற்றி
16. ஓம் ஆதரிப்பவனே போற்றி
17. ஓம் ஆதி பகவனே போற்றி
18. ஓம் ஆதாரமே போற்றி
19. ஓம் ஆழ்நிலையானே போற்றி
20. ஓம் ஆனந்த உருவே போற்றி
21. ஓம் இருள் கொடுப்பவனே போற்றி
22. ஓம் இருமை நீக்குபவனே போற்றி
23. ஓம் இசையில் திளைப்பவனே போற்றி
24. ஓம் ஈடேற்றுபவனே போற்றி
25. ஓம் உய்யவழியே போற்றி
26. ஓம் ஊழிக்காப்பே போற்றி
27. ஓம் எந்தையே போற்றி
28. ஓம் எளியோர்க்காவலே போற்றி
29. ஓம் ஏகாந்தனே போற்றி
30. ஓம் ஏடேந்தியவனே போற்றி
31. ஓம் ஒளிப்பிழம்பே போற்றி
32. ஓம் ஓங்கார நாதமே போற்றி
33. ஓம் கயிலை நாதனே போற்றி
34. ஓம் கங்காதரனே போற்றி
35. ஓம் கலையரசே போற்றி
36. ஓம் கருணைக்கடலே போற்றி
37. ஓம் குணநிதியே போற்றி
38. ஓம் குருபரனே போற்றி
39. ஓம் சதாசிவனே போற்றி
40. ஓம் சச்சிதானந்தமே போற்றி
41. ஓம் சாந்தரூபனே போற்றி
42. ஓம் சாமப்பிரியனே போற்றி
43. ஓம் சித்தர் குருவே போற்றி
44. ஓம் சித்தியளிப்பவனே போற்றி
45. ஓம் சுயம்புவே போற்றி
46. ஓம் சொற்பதங்கடந்தவனே போற்றி
47. ஓம் ஞானமே போற்றி
48. ஓம் ஞானியே போற்றி
49. ஓம் ஞானநாயகனே போற்றி
50. ஓம் ஞானோபதேசியே போற்றி
51. ஓம் தவசீலனே போற்றி
52. ஓம் தனிப்பொருளே போற்றி
53. ஓம் திருவுருவே போற்றி
54. ஓம் தியானேஸ்வரனே போற்றி
55. ஓம் தீரனே போற்றி
56. ஓம் தீதழிப்பவனே போற்றி
57. ஓம் துணையே போற்றி
58. ஓம் தூயவனே போற்றி
59. ஓம் தேவாதிதேவனே போற்றி
60. ஓம் தேவருமறியா சிவனே போற்றி
61. ஓம் நன்னெறிக்காவலே போற்றி
62. ஓம் நல்யாக இலக்கே போற்றி
63. ஓம் நாகப்புரியோனே போற்றி
64. ஓம் நான்மறைப்பொருளே போற்றி
65. ஓம் நிமலனே போற்றி
66. ஓம் நிறைந்தவனே போற்றி
67. ஓம் நிலவணியானே போற்றி
68. ஓம் நீறணிந்தவனே போற்றி
69. ஓம் நெற்றிக்கண்ணனே போற்றி
70. ஓம் நோய் தீர்ப்பவனே போற்றி
71. ஓம் பசுபதியே போற்றி
72. ஓம் பரப்பிரம்மனே போற்றி
73. ஓம் பிரம்மச்சாரியே போற்றி
74. ஓம் பிறப்பறுப்போனே போற்றி
75. ஓம் பேறளிப்பவனே போற்றி
76. ஓம் பேசாமற்றெளிவிப்பேன் போற்றி
77. ஓம் பொன்னம்பலனே போற்றி
78. ஓம் போற்றப்படுவனே போற்றி

79. ஓம் மறைகடந்தவனே போற்றி
80. ஓம் மறையாப் பொருளே போற்றி
81. ஓம் மகேசுவரனே போற்றி
82. ஓம் மங்கலமளிப்பவனே போற்றி
83. ஓம் மலைமுகட்டிருப்பவனே போற்றி
84. ஓம் மாமுனியே போற்றி
85. ஓம் மீட்பவனே போற்றி
86. ஓம் முன்னவனே போற்றி
87. ஓம் முடிவிலானே போற்றி
88. ஓம் முக்கண்ணனே போற்றி
89. ஓம் மும்மலமறுப்பவனே போற்றி
90. ஓம் முனீஸ்வரனே போற்றி
91. ஓம் முக்தியளிப்பவனே போற்றி
92. ஓம் மூலப்பொருளே போற்றி
93. ஓம் மூர்த்தியே போற்றி
94. ஓம் மோனம் தீர்ப்பவனே போற்றி
95. ஓம் மோன சக்தியே போற்றி
96. ஓம் மௌன உபதேசியே போற்றி
97. ஓம் மேதா தட்சணாமூர்த்தியே போற்றி
98. ஓம் யோக நாயகனே போற்றி
99. ஓம் யோக தட்சணாமூர்த்தியேபோற்றி
100. ஓம் யம பயமழிப்பவனே போற்றி
101. ஓம் ருத்திரப்பிரியனே போற்றி
102. ஓம் ருத்திராட்சம் பூண்டவனே போற்றி
103. ஓம் வித்தகனே போற்றி
104. ஓம் விரிசடையனே போற்றி
105. ஓம் வில்லவப்பிரியனே போற்றி
106. ஓம் வினையறுப்பவனே போற்றி
107. ஓம் விஸ்வரூபனே போற்றி
108. ஓம் தட்சணா மூர்த்தியே போற்றி போற்றி!

---

# கும்ப நீராடல் கண்டு மகிழ்வோம்

கு.குகதேவன்
தெல்லிப்பழை

அழகுதிருக் குறளருமை பாடும்திரு மைலாப்பூர்
வள்ளுவர் கோட்ட மதனில்
அழியாத சித்திரமாய் காட்சிதரும் பெருநூலின்
அருமையினைக் கண்ட கண்கள்
ஈழமதில் இவ்வருமை இல்லையே இல்லையென்
றியம்பிமனம் சோரும் வேளை
இனியதிரு வாசகத்தின் பெருமையினை உலகறியச்
செய்யும்கை வண்ண முயிர்க்க
பழமெனவே இனிக்கும்மணி வாசகநல் முத்துக்கள்
பட்டுமெம் கண்கள் குளிர
பண்புபெறு சித்திர சிற்பநல் முத்தாகி
உயிரோட்டம் கொண்டு மிலங்க
சூழவுயர் நாவற் குழிமண்ணில் உயிர்கொண்ட
தென்முகக் கடவுள் பாதம்
துதித்தவர் கும்பநீ ராடலும் சிறக்கவே
துதித்துமனம் மகிழ்ந்து தொழுவோம்!

என்றென்றும் இனிமைதரு எழில்சிவ லிங்கங்கள்
நூற்றெட்டும் இசை பாடவே
எமையாளும் ஈசனருள் ஒளிவெள்ளம் தான்கூடி
திசையெட்டும் நலங் கூட்டவே
அன்னை மனோன் மணிநாதன் அருள்வண்ணம் தான்கூடி
அகிலத்தில் நலங் கூட்டவே
அருளும்தென் முகக்கடவுள் அடிநாடிக் கைதொழுது
அவரருள் சிறந் தோங்கவே
இன்முகம் காட்டியே எமையாளும் ஈசனருள்
மாட்சிகண் டுள்ளம் குளிர
இசைபாடும் அடியவர்கள் துதிபாடி மனம்மகிழ்ந்து
இருகரம் குவித்து முருக
தேன்மலர் சிந்தியே தெய்வீக ஒளிகூட்ட
தேசுறு வேத மொலிக்க
தென்முகக் கடவுளின் கும்பநீ ராடல்கண்
டிருகரம் கூப்பி மகிழ்வோம்!

# நன்றிகள்!

திருவாசக அரண்மனை தோற்றம் பெறுவதற்கு உதவிய அத்தனை அன்பர்களையும் நன்றி பாராட்டிப் போற்றுவது எங்கள் கடமையாகிறது.

திருவாசக அரண்மனை அமைப்பதற்கு நிலத்தையும், நிதியையும் வழங்கிய அவுஸ்திரேலியாவில் வாழும் வைத்திய நிபுணர் வை.மனோமோகன் குடும்பத்தினருக்கும், கருங்கல் இரதத்தை உருவாக்குவதற்கு நிதியுதவி வழங்கிய கொழும்பு மனிதநேய அமைப்பின் தலைவர் திருமதி அ.கயிலாசபிள்ளை அவர்களுக்கும், மற்றும் திரு.கயிலாசபிள்ளை அரவிந்தன் குடும்பத்தினருக்கும், திருவாசக அரண்மனை முழுமைபெறுவதற்கு நிதி பங்களிப்புச் செய்த ஏனைய அன்பர்களுக்கும் இதயபூர்வமான நன்றிகளை தெரிவித்துக்கொள்கிறோம்.

திருவாசக அரண்மனை கட்டட நிர்மாணப் பணிகளை பொறுப்பேற்றுச் செய்த ஊரெழு க.சண்முகநாதன் அவர்களுக்கும், அவரது நிறுவனப் பணியாளர்களுக்கும், சிற்ப இரதம், ஆலய கட்டுமானப் பணி மற்றும் சிற்ப வேலைகளையும் அற்புதமான வகையில் நிறைவேற்றியிருக்கும் இந்திய சிற்பக் கலைஞர் கலியப்பெருமாள் புருஷோத்தமன் அவர்களுக்கும், அவருடன் இணைந்த கலைஞர்களுக்கும் திருவாசகப் பாடல்களை வெகு நேர்த்தியாகக் கருங்கல்லில் பதித்தும், 108 சிவலிங்கங்களை வடிவமைத்தும் உதவிய சிற்பக் கலைஞர் ஆனந்தன் வினோத் அவர்களுக்கும், அவருடன் இணைந்த கலைஞர்களுக்கும் எங்கள் இதயங்கனிந்த நன்றிகள்.

திருவாசக அரண்மனையின் உருவாக்கத்திற்குரிய வரைபடத்தை அமைத்துத் தந்து அது தொடர்பான ஆலோசனைகளையும் வழங்கிய திரு.க.சாரங்கன் அவர்களுக்கும், எங்களுக்கு பக்கபலமாக நின்று பலவழிகளிலும் உதவிய லண்டன் திரு.சூ.பாலசிங்கம் அவர்களுக்கும், அவுஸ்திரேலியா திரு.வை.ஈழலிங்கம் அவர்களுக்கும் அன்பு கலந்த நன்றிகள். திருவாசகம் அரண்மனை அமைந்துள்ள காணிக்குரிய உறுதியை உரிய காலத்தில் சிவபூமி அறக்கட்டளையின் பெயரில் பதிவுசெய்து, அதற்காக எதுவித கட்டணமும் பெறாமல் உதவிய சட்டத்தரணி அமரர் கந்தையா நீலகண்டன் அவர்களுக்கு (முன்னாள் தலைவர், அகில இலங்கை இந்து மாமன்றம்) சிவபூமி அறக்கட்டளை பெரிதும் கடமைப்பட்டுள்ளது.

திருவாசக அரண்மனை திருக்கோயில் மகா கும்பாபிஷேகப் பெருவிழாவை சிறப்பாகவும் நன்முறையிலும், நடத்தி வைக்கும் சிவஸ்ரீ சபா.வாசுதேவக் குருக்கள் (சித்தன்கேணி) தலைமையிலான குருமார்களுக்கும், திருவாசக அரண்மனை தொடர்பான செய்திகளையும், தகவல்களையும் சிறப்பாக வெளியிட்டுவரும் சகல ஊடகங்களுக்கும், திருவாசக அரண்மனை திறப்புவிழா, மற்றும் திருக்கோயில் மகா கும்பாபிஷேகப் பெருவிழாவையொட்டிய இந்த சிறப்பு மலர் வெளியிடுவதற்கு உதவிய சிவபூமி தொழிற்பயிற்சி நிலைய முதல்வர் திரு.எம்.பாலச்சந்திரன், சிறப்புமலரை தொகுத்தமைத்த திரு.அ.கனகசூரியர், கணினி வடிவமைப்பில் உதவிய திருமதி.அ.ஆன்கிளேடியா மற்றும் சிவபூமி அலுவலக உத்தியோகத்தர் திரு.க.நவநீதன் ஆகியோருக்கும் எங்கள் இதயபூர்வமான நன்றிகள்.

- சிவபூமி அறக்கட்டளை -

# SIVAPOOMI TRUST

## சிவபூமி அறக்கட்டளை

(இலங்கை அரச வர்த்தமானி அறிவித்தல் பிரகாரம்
பாராளுமன்ற அங்கீகாரம் பெற்ற நிறுவனம்)

## செயற்பாடுகள் பணிகள்
## தொடர்பான குறிப்புகள்

2018

# கோண்டாவில் சிவபூமி பாடசாலை

(மனவிருத்திப் பாடசாலை)




பிறப்பிலேயே மனவளர்ச்சி குறைபாட்டுடன் பிறந்த எம் இனிய குழந்தைகளை ஆற்றுப்படுத்தும் நோக்கில் வைத்தியகலாநிதி குகதாசன் தம்பதிகளின் உறவினரான லீலாவதி சுப்பிரமணியம் அவர்களினால் அன்பளிப்பாக வழங்கப்பட்ட காணியில் 2003ஆம் ஆண்டு ஆவணி சதுர்த்தி நன்னாளில் அடிக்கல் இடப்பட்டு, வெளிநாட்டில் வசித்துவரும் நல்லுள்ளம் கொண்ட எமது உடன்பிறப்புகளின் நிதியுதவியுடனும், உள்ளூர் பிரமுகர்களின் அன்பளிப்புகளுடனும், சேவை மனபான்மை கொண்ட பிரமுகர்களின் கூட்டு முயற்சினாலும் 02.07.2004 இல் 12 மனவளர்ச்சி குன்றிய சிறுவர்களுடன் ஆரம்பித்து வைக்கப்பட்ட சிவபூமி பாடசாலை இப்போது 324 மனவளர்ச்சி குன்றிய பிள்ளைகளை உள்வாங்கி அவர்களுக்கான கல்வியை ஊட்டி, சிவபூமி அறக்கட்டளை எமது சமுதாயத்தில் மற்றைய சிறுவர்களைப்போல் சுதந்திரமுடனும் கௌரவத்துடனும் இவர்களை வாழவைக்கும் இந்த நல்ல இறைபணியை வெற்றியுடன் முன்னெடுத்து வருகின்றது.

## Sivapoomi School

*School For Childeren with Special Needs (Intellectuals Disability)*

*Address:-Kondavil East, Kondavil Jaffna Srilanka*

*Bank Account Detail* ***Account Name:-Sivapoomi***
***Bank :- Commercial Bank***
***Saving Account no:-8060016509***
***Current Account no:-1060016510***

*Email:- Sivapoomi@gmail.com*
*T.Phone no:-0212227938*
*Web - sivapoomi.org , Sivapoomi.blogspot.com*

***https://www.facebook.com/sivapoomi.trust***
***https://twitter.com/sivapoomi***

# கோண்டாவில் சிவபூமி மனவிருத்திப் பாடசாலை பதிவுகள்










# கோண்டாவில் சிவபூமி மனவிருத்திப் பாடசாலை பதிவுகள்










# உலக அரங்கில் சிவபூமி பாடசாலை மாணவர்களின் சாதனைகள்



செல்வன் சிவராசா துஷ்யந்தன்
2011 சிறப்பு ஒலிம்பிக்
(எதென்ஸ் - கிறிஸ்)
100m ஓட்டம்
வெள்ளிப் பதக்கம்



செல்வன் ஜெயசந்திரன் மனோஜன்
2015 சிறப்பு ஒலிம்பிக்
(லொஸ் ஏஞ்சல்ஸ் அமெரிக்கா)
100m ஓட்டம்
வெண்கலப் பதக்கம்



செல்வன் அரசகுலசூரியர் மயூரன்
2015 சிறப்பு ஒலிம்பிக்
(லொஸ் ஏஞ்சல்ஸ் அமெரிக்கா)
100m ஓட்டம்
வெண்கலப் பதக்கம்

---

## 2013ஆம் ஆண்டு அவுஸ்திரேலியா (நியூஸ்காஸ்) நகரில் நடைபெற்ற ஆசிய பசுபிக் விசேட ஒலிம்பிக் போட்டி



செல்வன் சிவராசா தனுசன்
200m ஓட்டம்
வெண்கலப் பதக்கம்



செல்வன் இராஜன்
கிறோன் பிளைக்னோ



செல்வன்
சிவராசா துஷ்யந்தன்

# சுழிபுரம் சிவபூமி முதியோர் இல்லம்

(ஆதரவற்ற முதியவர்களுக்கான காப்பகம்)



சிவபூமி முதியோர் இல்லம் சுழிபுரம், தொல்புரம் கிராமத்தில் 07.04.2007 அன்று ஆரம்பிக்கப்பட்டது. இவ்வில்லம் ஆரம்பிப்பதற்கு பேருதவி புரிந்தவர் அமெரிக்காவில் வாழும் அன்பர் திரு.சி.பாலச்சந்திரன் அவர்கள். இங்கும் ஆதரவற்ற 78 முதியோர்கள் (ஆண் பெண் இருபாலாரும்) தங்கியிருக்கிறார்கள். சிவபூமி முதியோர் இல்லத்தில் ஆன்மீகச் சுடர் ரிஷி தொண்டுநாதன் சுவாமிகள் அவர்களின் உதவியால் நூல் நிலையம், மருந்தகம் என்பன அமைக்கப்பட்டுள்ளன. முதியோர் இல்லத்தில் ஆலயம், ஒரு சிறிய திரையரங்கு என்பனவும் உண்டு. இதுபோன்ற பல வசதிகளுடன் முதியோர்கள் இங்கு மகிழ்வுடன் வாழ்ந்து வருகின்றனர்.

## Sivapoomi Elders Home

*Address- Tholpuram, Chulipuram , Jaffna. Sri Lanka*

*Telephone Number :- 0212250085,0213214230*

*Head Offices Address:-Sivapoomi ,Kondavil East, Kondavil Jaffna Srilanka*

*Bank Account Detail* **Account Name:-Sivapoomi Trust**

**Bank :- Hatton National Bank**

**Current Account no:-117010003432**

**Saving Account no:- 117020039455**

*Email:- Sivapoomi@gmail.com*

*T.Phone no:-0212227938*

*Web - sivapoomi.org , Sivapoomi.blogspot.com*

*https://www.facebook.com/sivapoomi.trust*

*https://twitter.com/sivapoomi*

# சுழிபுரம் சிவபூமி முதியோர் இல்லப் பதிவுகள்

















# சுழிபுரம் சிவபூமி முதியோர் இல்லப் பதிவுகள்

















# கீரிமலை சிவபூமி மடம்



சரித்திரப் பிரசித்திபெற்ற கீரிமலை கடற்கரைப் பகுதியில் அமரர் விஸ்வநாதன் (ஆசிரியர்) குடும்பத்தின் அன்பளிப்பாகக் கிடைத்த காணியில் சிவபூமி மடம் 2012இல் திறந்துவைக்கப்பட்டது. கீரிமலைச் சூழலில் இருந்த பல சைவ மடங்கள் போர்க்காலச் சூழ்நிலைகளினால் அழிந்து போனதால் பல சைவ அன்பர்களின் வேண்டுதலால் சிவபூமி அறக்கட்டளை நிறுவனம் இம்மடத்தை சுமார் நான்கு மாத காலத்தில் அமைத்தது.

- ஞாயிறு பௌர்ணமி, குருபூசை நாட்களில் அடியவர்களுக்கு இங்கு அன்னதானம் வழங்கப்படுகின்றது.
- பாடசாலை மாணவர்கள், சமய நிறுவனங்களைச் சேர்ந்தவர்கள் யாத்திரையாக வரும்போது தங்குவதற்கு வசதி செய்யப்பட்டுள்ளது.
- சிவலிங்கப் பெருமான், நடராசப் பெருமான் விக்கிரகங்கள் மடத்தில் பிரதிஸ்டை செய்யப்பட்டு தினமும் உணவு படைத்து திருமுறை ஓதப்பட்டு வழிபாடு நடைபெற்று வருகின்றது.
- தூர இடங்களிலிருந்து அந்தியேட்டி கிரியைகளைச் செய்யவரும் அன்பர்கள் ஆறுதல் பெற்றுச் செல்வதற்கு இங்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

## *Sivapoomi Madam*

*Address- Keniyady, Keerimalai*

*Telephone Number :- 0213212241*

*Head Offices Address:-Sivapoomi, Kondavil East, Kondavil Jaffna Srilanka*

Bank Account Detail

*Account Name:-Sivapoomi Trust*
*Bank :- Hatton National Bank*
*Saving Account no:- 117020151163*
*Current Account no:-117010007096*

*Email:- Sivapoomi@gmail.com*
*T.Phone no:-0212227938*

*https://www.facebook.com/sivapoomi.trust*
*https://twitter.com/sivapoomi*

*Web - sivapoomi.org , Sivapoomi.blogspot.com*

# கீரிமலை சிவபூமி மடத்தின் பதிவுகள்


















# கிளிநொச்சி சிவபூமி மனவிருத்திப் பாடசாலை



நாட்டில் இடம்பெற்ற அசாதாரண சூழ்நிலையால் கிளிநொச்சி மாவட்டத்தில் மனவளர்ச்சி குன்றிய பிள்ளைகள் பலர் பாதிக்கப்பட்டார்கள். அவர்களின் பெற்றோர்கள் மற்றும் சமூகத் தலைவர்கள் பலர் அவர்களை ஆற்றுப்படுத்தும்படி எம்மை கேட்டவண்ணமிருந்தனர். அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க இச்சிறுவர்களையும் புறக்கணிக்காது அவர்களுக்கான பாடசாலை ஒன்றை அசாதாரண சூழ்நிலையால் பாதிக்கப்பட்ட கிளிநொச்சி நகரில் நிறுவதற்கு சிவபூமி அறக்கட்டளை உடனடி நடவடிக்கையில் இறங்கியது. சுவாமி இராமதாஸர் அறக்கட்டளை நிறுவனத்தின் ஸ்தாபகர் கொடைவள்ளல் திரு.பரமலிங்கம் அவர்களது நிதியுதவியுடன் கிளிநொச்சி கனகபுரம் பகுதியில் அமைக்கப்பட்ட சிவபூமி மனவிருத்திப் பாடசாலை 26.05.2016 அன்று திறக்கப்பெற்று தற்போது 48 மாணவர்களை உள்வாங்கி அவர்களுக்கும் கல்வியூட்டப்பட்டு வருவதன் மூலம் சிறப்பாக இயங்குகிறது.


## Sivapoomi School (Kilinochchi)

*Address- 1st Lane, Kanagapuram, Kilinochchi.*

*Telephone Number :- 021-222-7938*

*Head Offices Address:-Sivapoomi,Kondavil East, Kondavil Jaffna Srilanka*

*Bank Account Detail*
*Account Name:-Sivapoomi Trust*
*Bank :- Hatton National Bank*
*Saving Account no:- 146020096897*
*Current Account no:-146010005265*

*Email:- Sivapoomi@gmail.com*
*T.Phone no:-0212227938*


*Web - sivapoomi.com , Sivapoomi.blogspot.com*

*https://www.facebook.com/sivapoomi.trust*
*https://twitter.com/sivapoomi*

# கிளிநொச்சி சிவபூமி மனவிருத்திப் பாடசாலை

# பதிவுகள்











# கீரிமலை சிவபூமி யாத்திரிகர் மடம்





கீரிமலையிலுள்ள சிவபூமி மடத்தின் அருகில் அகில இலங்கை இந்து மாமன்றத்தின் பேருதவியால் யாத்திரிகர் மடம் அமைக்கப்பட்டுள்ளது. இது இரு தளங்களைக் கொண்டது. அடியார்கள் குடும்பமாக வந்து தங்குவதற்கு சகல அறைகளிலும் நவீன வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

- வெளிநாடுகளிலிருந்து வருகைதரும் சைவ அன்பர்கள் தங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.
- சைவ மாநாடுகள், கருத்தரங்குகள், கலை நிகழ்ச்சிகள் நடாத்துவதற்கான மண்டப வசதி உண்டு.
- யோகாசனம், தியானப்பயிற்சி.
- அறநெறிப் பாடசாலை.
- மேல் தளத்தில் சிவபூமி கலைக்களஞ்சியம்.

## SIVAPOOMI TRUST

**(According to the gazette notification of the government accredited Trust)**

**Kondavil East, Kondavil, Jaffna, Sri Lanka**


**021 222 7938**

**Sivapoomi@gmail.com**

**Sivapoomi.com, Sivapoomi.Org**

**Facebook:-Sivapoomi.Trust**

# கீரிமலை சிவபூமி கலைக்களஞ்சியம்



கீரிமலை சிவபூமி யாத்திரிகர் மடம் அமைந்துள்ள கட்டடத்தின் மேல் தளத்தில் கலைக்களஞ்சியம் இயங்குகிறது. இந்து மதத்தின் புராதன வரலாறுகளைப் பிரதிபலிக்கும் அரும்பொருட்கள், அதன் புகைப்படங்கள், பழம்பெரும் கலைஞர்களின் கைவண்ணத்திலான ஓவியங்கள், அவர்களின் உருவப்படங்கள் என்பன பொதுமக்கள் பார்வைக்காக காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

இவற்றுள் வரலாற்றுச் சிறப்புமிக்க பாரம்பரிய பித்தளைப் பாத்திரங்கள், பாவனையிலிருந்து மறைந்துவரும் பொருட்கள் போன்றனவும் அடங்கியுள்ளன.














# சிவபூமி மருத்துவ நிதியம்



- சிவபூமி அறக்கட்டளை ஆரம்பித்த காலம் முதல் நோயாளருக்கான மருத்துவ உதவிகள், புற்றுநோயாளருக்கான உதவிகள் தொடர்ந்து வழங்கப்பட்டு வருகின்றன.
- யாழ்ப்பாணம் தெல்லிப்பழை புற்றுநோயாளர் வைத்தியசாலையில் தங்கி சிகிச்சைபெறும் நோயாளருக்கு சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் போத்தல்களும் சிவபூமி மருத்துவ நிதியத்தால் வழங்கப்பட்டு வருகின்றது.



# சிவபூமி மருத்துவ நிதியப் பதிவுகள்










# குப்பிளான் சிவபூமி ஞான ஆச்சிரமம்




சைவப் பாரம்பரியம் மிக்க குப்பிளான் கிராமத்தில் இவ் ஆச்சிரமம் 2013 தை மாதத்தில் ஆரம்பிக்கப்பட்டது. சித்தர்கள், யோகிகள், ஞானிகளது அருட்பார்வைமிக்க புகைப்படங்கள் அடியார்களது வழிபாட்டிற்காக ஆச்சிரமத்தில் வைக்கப்பட்டுள்ளன. திரு.ஆ ஸ்ரீஸ்கந்தமூர்த்தி அவர்கள் காலஞ்சென்ற தனது பாரியார் ஞானலட்சுமி அவர்களது நினைவாக ஆச்சிரமம் அமையப் பெற்றுள்ள வீடு, நிலம் என்பவைகளை அன்பளிப்பாக வழங்கியுள்ளார். போரினால் பாதிக்கப்பட்ட வீடு திருத்தப்பட்டு ஆத்மீக ஞான நிலையமாக செயற்பட்டுவருகின்றது.

- அன்னதானம்
- குருபூசைகள்
- அறநெறி வகுப்புக்கள்
- ஆன்மீக நூல் நிலையம்
- சிவனடியார் தங்கி ஆறுதல் பெறல்

மேற்குறித்த தெய்வீக காரியங்கள் இங்கு இடம்பெறுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

## SIVAPOOMI TRUST

(According to the gazette notification of the government accredited Trust)
Kondavil East, Kondavil, Jaffna, Sri Lanka
021 222 7938
Sivapoomi@gmail.com
Sivapoomi.com, Sivapoomi.Org
Facebook:-Sivapoomi.Trust

## கோண்டாவில் சிவபூமி தொழிற் பயிற்சிப் பாடசாலை



16 வயது நிரம்பிய விசேட தேவையுடைய மாணவர்களுக்காக இப்பாடசாலை உருவாக்கப்பட்டது. கொழும்பு மனிதநேய அறநிதிய அமைப்பின் பேருதவியுடன் இப் பாடசாலைக்கான நிலம் மற்றும் இயந்திரங்கள் கொள்வனவு செய்யப்பட்டன.

இப்பாடசாலையில் கற்பிக்கப்படும் விசேட தேவையுடைய மாணவர்களுக்கான பயிற்சிகள்:

- ஓவியம் பொம்மை உருவாக்கம்
- மரக்கன்றுகள், பூ மரங்கள் ஒட்டு செயற்பாடு
- கற்பூரம் தயாரிப்பு
- காகிதஉறை, கடதாசிப்பை தயாரிப்பு
- துணிகளில் வர்ணம் தீட்டுதல் (தலையணை உறை மற்றும் மேசைவிரிப்பு)
- கால்மிதி, துடைப்பான் மற்றும் சுவர் அலங்கார தொங்குசேலை போன்றவைகளின் தயாரிப்பு
- திரை அச்சுப் பதிப்பு
- மெழுகுவர்த்தி தயாரிப்பு
- ஓவ்செற் அச்சுப்பதிப்பு
- புத்தகம் கட்டுதல்
- சிவபூமி பத்திரிகை வெளியீடு

# கோண்டாவில் சிவபூமி தொழிற் பயிற்சிப் பாடசாலை பதிவுகள்




















# சிவபூமி

## மாதாந்த

## செய்திப் பத்திரிகை




சிவபூமி அறக்கட்டளை நிறுவனத்தின் மற்றுமொரு செயற்பாடாக, சிவபூமி மாதாந்த செய்திப் பத்திரிகையை குறிப்பிடலாம். இவ்வருடம் (2018) மாசி மாதத்திலிருந்து, 'சிவபூமி' பத்திரிகை இந்து சமயம், இலக்கியம், வரலாறு, சார்ந்த வகையிலான கட்டுரைகள், கவிதைகள், செய்திக் குறிப்புகள் போன்ற பல விடயங்களுடனும், வண்ணப் படங்களுடனும் கிரமமாக வெளிவருகிறது.

பத்திரிகையின் அறிமுக விலை 20.00 ரூபா. வருடாந்த சந்தா செலுத்துவதன் மூலம் ஒவ்வொரு மாதமும் தபால் மூலமாக பத்திரிகையை பெற்றுக் கொள்ள முடியும்.




வருடாந்த சந்தா
(தபாற் செலவு உட்பட)

உள்நாடு : ரூபா 500/=
வெளிநாடு : $ 25 (அமெரிக்க டொலர்)

தொடர்புகளுக்கு

சிவபூமி அறக்கட்டளை
கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில்
தொலைபேசி இல : 021 222 7938




# Sivapoomi Trust

***Vational Training Center and News Paper***


*Address:-Kondavil East, Kondavil Jaffna Srilanka*

*Bank Account Detail* ***Account Name:-Sivapoomi***
***Bank :- Hattion National Bank***
***Saving Account no:-117020080261***

*Email:- Sivapoomi@gmail.com*
*T.Phone no:-0212227938*
*Web - sivapoomi.org , Sivapoomi.blogspot.com*

*https://www.facebook.com/sivapoomi.trust*
*https://twitter.com/sivapoomi*

# சிவபூமி கல்வி நிதியம்



சிவபூமி அறக்கட்டளை ஆரம்பிக்கப்பட்டுள்ள நாள்முதல் உயர்தர வகுப்பில் கற்கும் வசதியற்ற மாணவர்களின் கல்வி மேம்பாட்டுக்கு தொடர்ந்து உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன. பல்கலைக்கழக மருத்துவ பீட மாணவர்களுக்கான 25 மருத்துவ சோதனைக்கருவிகள் அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளன. பல்கலைக்கழகத்தில் கற்கும் உச்ச வறுமையுடைய மாணவர்களுக்கு தலா ரூபா 1500/= வீதம் நிதியுதவி வழங்கப்படுகின்றது. பாடசாலைகளில் கல்வி கற்று வரும் வசதியற்ற மாணவர்களுக்கு ரூபா 1000/= வீதம் நிதியுதவி வழங்கப்படுகின்றது. கலாநிதி சதாசிவம் கனகசபை, வைத்திய கலாநிதி சிவபாதநாயகி கனகசபை தம்பதிகளின் கல்வி அறக்கொடை நிதியத்திலிருந்து திறமையுடைய வசதியற்ற மாணவர்களுக்கான கல்வி மேம்பாட்டு நிதியுதவியும் வழங்கப்படுகின்றது.

பளை - இயக்கச்சி பகுதியில் வாழும் வசதிகுறைந்த மாணவர்களின் கல்வி மேம்பாட்டுக்கான செயற்திட்டத்தை, இயக்கச்சியில் அமைந்துள்ள சிவபூமி கோட்டத்தின் ஊடாக தொடர்ந்தும் முன்னெடுப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.





# திருகோணமலையில் தோற்றம்பெறும்
# திருக்கோணேஸ்வரம் சிவபூமி மனவிருத்திப் பாடசாலை
# திருக்கோணேஸ்வரம் சிவபூமி யாத்திரிகர் மடம்



திருகோணமலையிலுள்ள மனவளர்ச்சி குறைபாடுள்ள பிள்ளைகளது கல்விக்காக, சிவபூமி அறக்கட்டளையின் ஏற்பாட்டில் அமைக்கப்பட்டுள்ள பாடசாலை திருக்கோணேஸ்வரம் ஆலய பரிபாலன சபையினரிடம் விரைவில் கையளிக்கப்படவிருக்கிறது.

இரு தளங்களைக் கொண்ட கட்டடத்தின் கீழ் தளத்தில் மனவிருத்திப் பாடசாலையும், மேல் தளத்தில் யாத்திரிகர் மடமும் அமைக்கப்பட்டுள்ளது. பிற மாவட்டங்களிலிருந்து திருகோணமலைக்கு ஆன்மீக யாத்திரை மேற்கொண்டு வரும் இந்து மக்கள் தங்கிச் செல்வதற்கு வசதியாகவே இந்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. மனவிருத்திப் பாடசாலையும், யாத்திரிகர் மடமும் கொண்டதாக அமைந்துள்ள இந்தக் கட்டடம் எதிர்வரும் ஆவணி மாதம் திறந்து வைக்கப்படவுள்ளது.


## Sivapoomi Trust

*Trincomalee School and Madam*

Address:-Kondavil East, Kondavil Jaffna Srilanka

Bank Account Detail **Account Name:-Sivapoomi**
**Bank :- Hattion National Bank**
**Saving Account no:-117010008855**

Email:- Sivapoomi@gmail.com
T.Phone no:-0212227938

Web - sivapoomi.org , Sivapoomi.blogspot.com

https://www.facebook.com/sivapoomi.trust
https://twitter.com/sivapoomi

# சிவபூமி விவசாயப் பண்ணை

(நெல்லியான், சுழிபுரம்)



சிவபூமி விவசாயப் பண்ணை சுழிபுரம் கிராமத்திலுள்ள நெல்லியான் பகுதியில் அமைந்துள்ளது. 30 நிலப்பரப்பு விஸ்தீரணத்தைக் கொண்ட மேற்படி விவசாயப் பண்ணை, 2009 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டது. அமெரிக்க ஹவாய் சைவ ஆதீனத்தைச் சேர்ந்த ரிஷி தொண்டுநாதன் சுவாமிகளது பேருதவியால் விவசாயப் பண்ணைக்குரிய நிலம் கொள்வனவு செய்யப்பட்டது.

மேற்படி விவசாயப் பண்ணை தென்னந் தோட்டத்தையும், நெல் வயலையும் கொண்டதாக அமைந்துள்ளது.








## சிவபூமி கோட்டம் - விவசாயப் பண்ணை

(கொற்றாண்டார் குளம், இயக்கச்சி, பளை)




யாழ்.குடாநாட்டிலுள்ள பளை, இயக்கச்சி கிராமத்தின் கொற்றாண்டார் குளம் பகுதியில் சிவபூமி கோட்டம் - விவசாயப் பண்ணை அமைந்துள்ளது. 15 ஏக்கர் நிலப்பரப்பில் இயங்கிவரும் மேற்படி விவசாயப் பண்ணையில் தென்னைச் செய்கையும் மற்றும் உப பயிர் உற்பத்திகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்த சிவபூமி கோட்டம், கடந்த ஐந்து வருட காலத்திற்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்டது.





# சிவபூமி பஞ்சாமிர்தத் தோட்டம்

(கோயில்வயல், இயக்கச்சி, பளை)




யாழ்.குடாநாட்டிலுள்ள பளை, இயக்கச்சி கிராமத்தின் கோயில்வயல் பகுதியில் சிவபூமி பஞ்சாமிர்தத் தோட்டம் அமைந்துள்ளது. 25 ஏக்கர் நிலப்பரப்பில் இயங்கிவரும் மேற்படி தோட்டத்தில் தென்னைச் செய்கையும், பலவிதமான பழமரக்கன்றுகளின் உற்பத்திகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்த பஞ்சாமிர்தத் தோட்டம் 2016 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது.









# நாவற்குழி சிவபூமி செவ்விளநீர் தோட்டம்



நாவற்குழி - கேரதீவு வீதியில் 60 பரப்பு நிலப்பரப்பில் சிவபூமி செவ்விளநீர் தோட்டம் அமைந்துள்ளது. இந்தக் காணி சிவபூமி அறக்கட்டளை நிறுவனத்திற்கு அன்பளிப்பாகக் கிடைத்தது.

யாழ்ப்பாணக் குடாநாட்டில் செவ்விளநீருக்கு பெருமளவில் தட்டுப்பாடு நிலவுவதால், தென்னிலங்கையிலிருந்து வரும் வியாபாரிகளிடம் பெருந்தொகைப் பணத்தைக் கொடுத்து அவற்றை வாங்க வேண்டிய நிலை இங்குள்ள மக்களுக்கு ஏற்படுகிறது. இதனை நிவர்த்திசெய்யும் வகையிலேயே, நாவற்குழி கிராமத்தில் செவ்விளநீர் கன்றுகள் நாட்டப்பெற்று, அதனை வளர்த்தெடுப்பதற்கான பராமரிப்பு செயற்பாடுகள் சிவபூமி அறக்கட்டளை நிறுவனத்தால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேற்படி செவ்விளநீர் தோட்டம் ஐந்து வருட காலத்திற்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்டது.









# சிவபூமி அறக்கட்டளையின் எதிர்காலப் பணிகள்

## ➢ சிவபூமி நாய்களின் சரணாலயம்

வடமாகாணத்தில் கட்டாக்காலிகளாக அலைந்து திரியும் நாய்களின் துன்பம் எல்லையற்றது. கடவுளின் வடிவமாக வயிரவப் பெருமானுடன் நாயை வணங்கும் சைவத்தமிழர் பண்பாடு பாரம்பரியமானது. எனவே ஆதரவற்று கைவிடப்பட்டுள்ள நாய்களுக்கு உணவும் இருப்பிடமும் சுதந்திரமான பாதுகாப்பும் வழங்குவதற்கு சிவபூமி அறக்கட்டளை நிறுவனம் சரணாலயம் ஒன்றை அமைப்பதற்கு ஏற்பாடு செய்து வருகின்றது. பளை இயக்கச்சிப் பகுதியிலுள்ள சிவபூமி ரோகினி தோட்டத்தில் இந்த சரணாலயம் அமையவிருக்கிறது.

## ➢ சிவபூமி அரும்பொருட் காட்சியகம்

எங்கள் மண்ணில் எமது முன்னோர் பயன்படுத்திய பொருட்கள், ஆவணங்கள், அடையாளங்கள் அடங்கிய அரும் பொருட் காட்சியகம் சீரான முறையில் இல்லாதிருப்பதை அறிவுடைய சமூகம் பெரும் குறையாகப் பேசி வருகிறது. சிவபூமி அறக்கட்டளையின் தலைவரால் சேகரிக்கப்பட்டு பாதுகாக்கப்பட்டுவரும் மிகப் பெறுமதியான அரும் பொருட்களை எம் சந்ததியினரும், சுற்றுலாப் பயணிகளும் அறிந்துகொள்வதற்கு இத்திட்டம் மிகவும் பயனுள்ளதாகவிருக்கும். வெகுவிரைவில் பொருத்தமானதொரு இடத்தில் சிவபூமி அரும்பொருட் காட்சியகம் அமையவிருப்பது குறிப்பிடத்தக்கது.

இதுபோன்ற பல திட்டங்களை எதிர்காலத்தில் செயற்படுத்த சிவபூமி அறக்கட்டளை நிறுவனம் திட்டமிட்டுள்ளது. வெளிநாட்டில் வாழும் ஈழத்தமிழ் மக்களிடமும், சேவை மனப்பான்மை கொண்ட நிறுவனங்களிடமும் இவை தொடர்பான விபரங்களை சமர்ப்பித்து வருகின்றது. இந்து மக்களிடமும் இத் தேவையினை எடுத்துச் சொல்கிறோம். இத்தேவைகளை நிறைவேற்றுவதற்கு இந்து மக்கள் பொருளாகவோ அல்லது பணமாகவோ வழங்கி சிவபூமி அறக்கட்டளைப் பணிகளுக்கு உதவலாம். இது சிவபூமி அறக்கட்டளை நிறுவனத்தின் அன்பு வேண்டுகோளாகும்.


**Sivapoomi Trust**

*Education Fund, medical Fund, Livelihood Fund*

*Address:-Kondavil East, Kondavil Jaffna Srilanka*

*Bank Account Detail*

*Account Name:-Sivapoomi*
*Bank :- Commercial Bank*
*Saving Account no:-8060016509*
*Current Account no:-1060016510*

*Email:- Sivapoomi@gmail.com*
*T.Phone no:-0212227938*


*Web - sivapoomi.org , Sivapoomi.blogspot.com*

*https://www.facebook.com/sivapoomi.trust*
*https://twitter.com/sivapoomi*

DR. S. KANAGASABAI,
MATHAGAL EAST,
MATHAGAL.

DONATION TO THE PUBLIC LIBRARY OF JAFFNA IN SEPTEMBER 2018

S.Kanagasabai.



கருங்கல்லினால் உருவாக்கப்பட்ட இரதம்

கோண்டாவில் சிவபூமி தொழிற்பயிற்சிப் பாடசாலையில் அச்சிடப்பட்டு சிவபூமி அறக்கட்டளையால் வெளியிடப்பட்டது.